783

உ

மனமோகினி

ஓர் மாதாந்தச் சஞ்சிகை

(முதல்தர நாவல்கள்)

தொகுதி 1.] 1923வரு ஜனவரிமீ 1உ [பகுதி 12.

இதில் வெளிவரும் அமராவதி யென்னும் நாவல்
ஸ்ரீமான்
ஆரணி-குப்புசாமி முதலியார் அவர்களால்
இயற்றப்பட்டது

17 FEB 1923

"ஆனந்தபோதினி" பத்திராதிபர்
நா. முனிசாமி முதலியாரால்
பிரசுரிக்கப்பட்டது

1923

ரிஜிஸ்டர்ட்] [காபிரைட்.

மனமோகினி

ஓர் மாதாந்த சஞ்சிகை.

இதில் இனிய நாவல்களே வெளிவரும். நமது "ஆனந்த போதினிச்" சந்தாதாரர்களிற் பலர் அச்சஞ்சிகையில், ஒவ்வொரு நாவலும் சிற்சில சஞ்சிகைகளில் விரைவில் முடிவு பெறும்படி, சில நாவல்களை வெளிப்படுத்தி வரவேண்டுமென்று அடிக்கடி கேட்டு வருகின்றார்கள். அச்சஞ்சிகை பற்பல விஷயங்களுக்கும் இடந் தரவேண்டியதா யிருத்தலின், அதில்ஒவ்வொரு மாதத்திற்கும் இரண்டு மூன்று பக்கங்களே நாவல் வெளியிடக்கூடியதா யிருக்கிறது. அதனால் நம் நண்பர்களின் விருப்பம் நிறைவேறக் கூடாததாகிறது. ஆதலின் நாவலுக்கென்றே ஒரு சஞ்சிகையை வெளிப்படுத்தி வந்தால், அது மேற்கூறியவர்களின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வதோடு மற்றைய தமிழபிமானிகட்கும் திருப்தி யளிக்கக் கூடியதா யிருக்குமென்று இதனை ஆரம்பித்திருக்கின்றோம். இதில் ஒவ்வொரு பெரிய நாவல் தொடர்ச்சியாக வந்து ஆறு மாதங்களுக்கொருமுறை ஒவ்வொரு முழுப் புத்தகம் முடிவுபெறும். ஒரு வருஷத்துக்கு ஐந்து ரூபா விலை மதிப்புள்ள இரண்டு புத்தகங்கள் பைண்டாகிவிடும். இப்போது முதலில் மகா அற்புதம் பொருந்திய அநேகம் நாவல்களின் ஆசிரியரான ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியாரவர்களால் இயற்றப்பட்ட "அமராவதி" என்னும் நாவல் வெளியாய் வருகிறது. இச்சஞ்சிகை கிரௌன 80-பக்கங் கொண்டது. வருஷ சந்தா ரூ. 2-8-0 இரண்டரைதான். வெளிநாட்டிற்கு 3—0—0. இதற்குச் சந்தாதாரராகச் சேர்வோருக்கு இரண்டரை ரூபாய்க்கு ஐந்து ரூபா விலை மதிப்புள்ள இரண்டு புத்தகங்களை அடைதலும், சிரமமின்றி ஒவ்வொரு மாதத்திலும் வாசித்து வந்து ஒரு வருஷத்தில் இரண்டு புத்தகங்களை முடித்தலுமாகிய சௌகரியங்கள் கிடைக்கும். இதன் முதற் சஞ்சிகை 1922வரு பிப்ரவரிமீ 1உ வெளியாயாய்விட்டது. அடியிற்கண்ட விலாசத்திற்கு உடனே எழுதி வெளியாகியுள்ள சஞ்சிகைகளை வி-பி-யிலோ முன் பணம் அனுப்பியோ பெற்றுக்கொள்ளுங்கள்.

☞ முன் பணம் அனுப்பினால் 2—8—0யும், மணிபார்டர் கமிஷன் 1-அணாவுமாகும். வி-பி-யில் ரூபா 2—13—0 ஆகும்.

இது அநேக நாவல்கள் இயற்றிய ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியார் அவர்களால் எழுதப்பட்டது. அவருடைய நாவலின் போக்கு எல்லோருக்குந் தெரிந்திருக்குமாகையால் மாதிரி காப்பி அனுப்பப்படமாட்டாது.

மானேஜர்: "ஆனந்த நிலையம்"

நெ. 6, வெங்கடேச மேஸ்திரி வீதி, மதராஸ்.

பின்னால் நின்று உதவியும் செய்வார்கள். தங்கள் க்ஷேமம் நிலைத்திருப்பதற்குப் போதுமான அஸ்திவாரம் போடப் பட்டாயிற்றே, மரத்தின்மேலேறுபவன், மரத்தில் ஏறி நிலைத்ததே, தான் ஏறுவதற்கு உதவியாக விருந்த ஏணியை யுதைத்துத் தள்ளிவிடுவதுபோல், உடனே உங்களை யம்பலத்தில் விடுவதோடு பிடித்துக் கொடுத்துவிட்டு அரசனிடம் அதிக காணியாட்சியும் சன்மானமும் பெற்றுக்கொள்வார்கள். கடைசியில் பொது நலத்திற்கு உழைக்க முன் வந்தோர் தங்கள் ஆஸ்தி முதலிய யாவற்றையும் பறிகொடுத்துப் பிராணனையும் இழந்து, தங்களை நத்தியிருக்கும் பெண்டு பிள்ளை முதலியவர்களைப் பரதவிக்க விடவேண்டியதாக நேரிடும்.

ஆகையால் நண்பரே! இப்போது தங்கள் கோபத்திற்கேனும், வஞ்சம் தீர்த்துக்கொள்ள வேண்டுமென்ற ஆவலுக்கேனும், பிறர் தூண்டுதலுக்கேனும் இடங்கொடுத்து அத்தகைய விஷயத்தில் பிரவேசியாதிருக்கும்படி தங்களை வேண்டிக்கொள்கிறேன். இதுவே யென் கடைசியான கோரிக்கை" என்றார்.

கர்னல் இரகுநாதர் யாவும் கவனமாகக் கேட்டுக்கொண்டு ஜனரலுக்கு வந்தன மளித்தார். ஆனால் எவ்வளவு வரையில் அதன்படி நடந்தார் என்பதைப் போகப் போகக் கவனிப்போம். மாலை சுமார் ஐந்து மணிக்கு கர்னல் இரகுநாதர், அவர் மனைவி, சகோதரி மூவரும் இரொட்டிக் கிடங்கிற்குப் புறப்பட்டார்கள்.

186485
சென்னை-600 008
17 FEB 1923

65-வது அத்தியாயம்.

இராஜரத்னம் பிரபுவும் கர்னல் இரவணப்பனும்—சதியாலோசனையினாரம்பம்—பிரபு அரசனைக்காணல்—இரோட்டிக்கிடங்கில் சதியாலோசனை நடத்தல்--முடிவான ஏற்பாடுகள்.

இச்சம்பவங்கள் நடந்த நான்கைந்து தினங்கள் கழித்து இராஜரத்னம் பிரபுவின் மாளிகையில் என்ன சம்பவம் நடக்கிறதென்பதைக் கவனிக்க வேண்டியது நமது கதையின் தொடர்ச்சிக்கு அவசியமாக விருக்கிறது.

இராஜரத்னம் பிரபு வெளிக்குச் சின்னக் கட்சியாகிய அரசன் கட்சியைச் சேர்ந்தவரே யெனினும் இரகசியத்தில் பெரிய கட்சியாரோடு கலந்திருப்பவரே. ஆனால் இவர் அக்கட்சிக்கு உண்மையானவரல்ல. இவர் ஜனரல் உக்கிரசேனர் கூறியபடி ஏழைகளாகிய பாமரஜனங்கள் பிரபு வமிசத்தார்க்கு ஊழியம் செய்யப் பிறந்தவர்களென்றே கருதியிருப்பவர். ஆனால் அரசன் பிரபுக்களைக்கூடச் சட்டை செய்யாமல் பூரண சுயாதீனத்தோடு அக்கிரம வழிகளில் நடப்பது அவருக்குப் பிடிக்கவில்லை. அவர் கருத்தைச் சுருக்கமாகக் கூறிவிடுகிறோம். ஜனரல் உக்கிரசேனர் கூறியபடியே பின்னாலிருந்து பெரிய கட்சியாரைக் கிளறிவிட்டு இரகசியமாக உதவிசெய்து தங்களுக்கு நிலையான வல்லமை யேற்பட்டதே யவர்களைத் தங்கள் நன்மைக்குப் பாடு படாது தடுத்துவிட்டு அல்லது காட்டிக்கொடுத்துவிட்டுக் கலகத்தை யடக்கிவிட்டதாகச் சன்மானம் பெறும் குணமுடையோரே. அவரைப் போன்ற அவர் நண்பர்கள் இன்னும் நான்கைந்து பேர்களுண்டு.

ஒரு நாள் மாலை நான்கு மணிக்கு இப்பிரபுவும் இவர் மனைவியும் தங்கள் மாளிகையைச் சேர்ந்த தோட்டத்தில் உலவிக்கொண்டிருக்கையில் ஒரு வேலைக்காரன் வந்து

"பிரபுவே! கர்னல் இரவணப்பர் தங்களைக்காண வந்திருக்கிறார்" என்றான். அம்மொழியைக் கேட்ட அவர் பத்தினி திகிலோடு தன் கணவனை நோக்கினாள். பிரபு அதை யுணர்ந்து "ஓ! என் பத்தினியே! நீ மிரண்டு பார்க்கும் காரணத்தை யறிந்து கொண்டேன். கர்னல் இரவணப்பன் பெரிய கட்சியைச் சேர்ந்தவனாதலின் அவன் இப்போது அடிக்கடி என்னிடம் வந்து பேசுவதால் நீ ஏதோ பிரமாதம் நடந்து நமக்குக்கெடுதி நேரிடலாகுமென்று பயங்கொண்டிருக்கிறாய். அவ்வாறு பயப்படவேண்டிய காரணமேயில்லை. அரசன் வர வர அக்கிரமங்களில் தாராளமாகப் பிரவேசித்து, நமது முன்னோர் தாபித்திருக்கும் உத்தமமான முறைகளை யலட்சியம் செய்து தன் மனம் போனபடி நடந்துகொண் டிருக்கிறான். இப்படியே நடந்து வந்தால், கொஞ்சக்காலத்திற்குள் நமது நாட்டின் க்ஷேமம் அடியோடழிந்து நமது ஜாதியின் கௌரவமும் அடியோடு போய்ச் செல்வங் குறைந்து பெருந் தீங்கு விளையும். அப்படிச்சம்பவிக்காவண்ணம் தடுக்காமலிருக்க உண்மைத் தேசாபிமானிகளின் மனம் சம்மதிக்காது. நான் இவர்களோடு இரகசியமாகக்கலந்திருந்தால்தான் நமக்கு அவசியமான அநுகூலங்கள் கிடைத்ததே அதற்குமேல் போகவொட்டாது இவர்களைத் தடுத்துவிட அநுகூலமாக விருக்கும். நான் இவர்களைச் சமயப்படி உபயோகித்து வேண்டாதபோது கீழே வைத்து விடும் ஒரு ஆயுதமாக உபயோகிப்பேனேயன்றி இவர்களோடு மனமொத்து இவர்கள் பிரியப்படிக்கெல்லாம் நடப்பேனென்று நீ கருதவேண்டாம்" என்றார்.

சீமாட்டி:—"ஆ! தாங்கள் இவ்வளவு விவரம் கூறியதால் என் மனம் நிம்மதி யடைந்தது" என்றாள்.

பிரபு அதன் பிறகு தமது மனைவியை விட்டுப்பிரிந்து கர்னல் இரவணப்பன் வந்திருக்கும் அறைக்குச் சென்றார். கர்னல் இரவணப்பன் பெரிய கட்சியைச் சேர்ந்தவன். அவன் செல்வவந்தனாகவே யிருந்து சமீபகாலத்தில்

யாவும் வீண் செலவால் அழித்து விட்டுக் கஷ்டமான நிலையி லிருப்பவன். அவனும் வெளிக்கு மட்டுமே யேதோ உண்மையாகவே தாய் நாட்டின் பொருட்டுப் பாடுபடுபவன்போல் அபிநயிப்பவனே யன்றி உண்மை யில் அக்கருத்திடையவனல்ல. நாட்டில் கலகம் நேர்ந் தால் நாம் செல்வமடையலாம் என்ற சுய நலக்கருத் திடையவனே யாகும். வெளிக்குக் களங்கமற்றவன் போலவும் சற்றும் சூது கபடம் ஒன்று மின்றி எதையும் கண்டிப்பாய்ப் பேசுபவன் போலவும் நடிப்பதில் மிகு சமர்த்தன். அதனாலேயே தன் உண்மைக் கருத்தைப் பிறர் அறியாவண்ணம் பத்திரமாகமறைத்து வைத்திருக் கிறான். அவன் பிரபுவைக்கண்டதும் மிகு மரியாதை யோடு வந்தனமளித்து,

"ஆ பிரபுவே! நாம் வேலைசெய்ய வேண்டிய காலம் வந்து விட்டது. நமது நண்பர்களனைவரும் ஒன்று சேர்ந்து ஆயத்தமாக விருக்கிறார்கள். தங்களபிப்பிரா யத்தையும் தங்கள் மூலமாகத் தங்கள் நண்பர்கள் அபிப் பிராயத்தையும் கேட்டறிந்து போகவே நான் இப்போது இங்கு வந்தேன். தாங்கள் உடனே விடை யளித்து விட லாம். அந்த விடை அனுகூலமான தென்றே நான் அறி வேன். தாங்கள் ஆம் என்று ஒரே வார்த்தை மட்டும் கூறினால் போதும்" என்றான்.

பிரபு:—"பொறும் பொறும். இப்படி யவசரப்பட்டால் எப்படிக் காரியம் நடக்கும். எனக்கு விவரம் ஒன் றும் தெரியாதல்லவா! இப்போது என்ன நிலைமை யில் விவகாரம் இருக்கிறது?" என்றார்.

கர்னல் இரவணப்பன்:—பிரபுவே! எனது நண்பர் கர் னல் இரகுநாதரைப் பற்றிய சங்கதி தெரியு மல்லவா?

பிரபு:—ஆம். அவர் விடுதலை செய்யப்பட்டார் என்ற வரையில் சங்கதி யாவரு மறிந்ததே.

கர்னல்:—அவருடைய தங்கை இராஜாம்பாள் என்பவள் இருக்கிறாள். இவளை நமது அரசன் மிக்க அக்கிரம

மாக நடத்தி மோசம் செய்த விஷயம் பகிரங்கமாக நீதிஸ்தலத்தில் வெளியிடப்பட்டது. அன்றுதான் எனக்கு அந்த விஷயம் தெரிந்தது. இன்னும் வேறு கெடுதிகள் கூட நமது அரசன் கர்னல் இரகுநாதருடைய குடும்பத்திற்குச் செய்திருக்கிறார். இதனால் கர்னல் இரகுநாதர் உடனே வேலை செய்யவேண்டுமென்று ஆத்திரப்படுகிறார். ஆயினும் இச்சுய நல காரியம் துணைக்காரணமே யன்றி மூல காரணம் பொது நலமே. செய்யவேண்டிய ஏற்பாடுகளைப் பற்றிச் சீக்கிரம் யாவரும் கலந்து பேசுவோம்.

பிரபு:—சரி. எதுவும் ஒரு அளவோடிருக்கவேண்டும், நீதி நமது பட்சத்தில் இருக்கவேண்டும். கொஞ்சமேனும் அக்கிரமமாவது அத்துமீறிய செய்கைகளாவது நடைபெறலாகாது. நான் எதற்கும் இரவு யோசித்து நாளைக் காலை எட்டு மணிக்கு உமக்கு விடையளிக்கிறேன்.

கர்னல் இரவணப்பன் "பிரபுவே! அப்படியாயின் நான் நாளைக் காலை எட்டு மணிக்கு வருகிறேன்" என்று கூறி விடைபெற்றுக்கொண்டு சென்றார்.

கர்னல் சென்றதே பிரபு தன் உடுப்பறைக்குச் சென்று தன் அந்தஸ்துக்குத் தக்கவாறு கம்பீரமான உடை யணிந்து கொண்டு மாளிகையினின்று புறப்பட்டு அரசன் அரண்மனைக்குச் சென்றார்.

அச்சமயம் மாலை ஏழு மணி யிருக்கும். அரசன் மதனம்பாளின் அருகில் உட்கார்ந்து கொண்டு சந்தோஷமாகச் சம்பாஷித்துக்கொண் டிருந்தான். வாயில் காப்போன் சென்று "இராஜரத்னம் பிரபு அரசரின் பேட்டிக்காக வந்திருக்கிறார்" என்று கூறினான்.

அச்சங்கதியைக் கேட்டதே அரசன் முகத்தில் இருள் கவிந்ததுபோலாயிற்று. மதனம்பாள் முகத்தில் வெறுப்பும் கோபமும் தோன்றின. காரணம் என்னவெனில் இராஜரத்னம் பிரபு நாம் முன் கூறியபடி சுய நலக்கருத்துடையவனெனினும், அரசனுடைய சபையில்

நடக்கும் அநீதச்செயல்களும், கௌரவத்தாழ்வான அரசனுடைய நடக்கைகளும், அதைக்கண்டு "அரசனெவ்வழி அவ்வழி குடிகள்" என்ற பழமொழி போல் நாட்டில் அனேகர் தீய நடக்கைகளில் அஞ்சாது பிரவேசிப்பதும், ஏழைகளின் குறைகள் கவனிக்கப்படாமலேயிருப்பதும், ஜனங்களிடம் அவர்களைக் கசக்கி வசூலிக்கப்படும் பணம் அவர்களுடைய க்ஷேமாபிவிர்த்தியின் பொருட்டுக் கொஞ்சமேனும் செலவிடப்படாமல் அரசனால் அநீத வழிகளில் செலவழிக்கப்படுவதும், ஆகிய நாட்டிற்குக் கேடு விளைக்கும் விஷயங்களனைத்தும் பிரபுவின் மனதில் மிக்க வெறுப்பை யுண்டாக்கி யிருந்தன. ஆகையால் அவர் பகிரங்கமாகப் பிரசங்கங்களில் இவற்றையெல்லாம் குறிப்பாகக் கண்டித்துப் பேசும் சுபாவமுடையவர். அன்னிய நாட்டேமாதாகிய மதனும்பாள் அரசனைத் தன் மாயவலையிற் போட்டுக்கொண்டு செய்யும் அக்கிரமங்களைப்பற்றி அவர் பகிரங்கமாகப் பேசுவதுண்டு. இதனாற்றான் அவர் வரவைக் கேட்டதே இருவர்க்கும் வெறுப்புண்டாயிற்று.

மதனும்பாள் வேலைக்காரன் கூறியதைக் கேட்டதே "சந்தேகமின்றி இவனுக்குப் பேட்டிகொடுக்க மறுத்துவிடுவீர்களென்றே நம்புகிறேன். தங்களுடைய நெருங்கிய நண்பர்களைப் பகிரங்கமாகத் தூஷிக்கும் இப்பிரபு என்ன துணிகரத்தால் இங்கு தங்களைக்காண வந்தானென்பதே எனக்கு மிக்க வியப்பாக விருக்கிறது" என்று அரசனை நோக்கி மொழிந்தாள்.

அரசன்:—முக்கியமாக நமது மதனும்பாளையே தூஷித்திருக்கிறான்.

மதனும்பாள்:—அரசே! என்னைப்பற்றி யிவன் வசை கூறுவதை நான் சட்டை செய்யவில்லை. அவன் தங்கள் நண்பர்கள் மூலமாகத் தங்களையே தூஷிக்கிறான். நான் மற்ற யாவரிலும் தங்கள் அன்பைப் பூரணமாகப் பெற்றிருப்பதால் என்னை யப்படித் தூஷிக்கி

ருன். அன்றையதினம் அவன் அங்கு பேசிய போது......

அரசன்:—இரு இரு. என்னுடைய நிலைமையும் பதவியும் எப்படிப்பட்டவர்களுடைய அபிப்பிராயத்தையும் ஏற்றுக்கொள்ள வேண்டியதாக விருக்கிறது. ஒரு சமயம் இப்பிரபு தன் முட்டாள் தனமான தவறை யுணர்ந்து நமது பாதங்களில் பணிந்து மன்னிப்புக் கேட்டுக்கொள்ள வந்திருந்தாலோ......

சீமாட்டி:—“ஆ! என்னைப் பன்முறை யிழிவாகத் தூஷித்த மனிதன் இப்போது என் பாதங்களில் விழுந்து மன்னிப்புக் கேட்டுக் கொள்வதாயின் நல்ல கௌரவமே. தாங்கள் கருதுவதுபோல் அப்பிரபு அப்படிப்பட்ட எண்ணத்தோடு வந்திருப்பது உண்மையாயின் அவருக்குப் பேட்டியளிப்பதில் கெடுதியில்லை. அப்படிக்கின்றி யவர் வேறு வேலையாக வந்திருந்தால் தாங்கள் அவரை யவமரியாதையோடு வெளியனுப்பும் காட்சியைக் கண்ணால் பார்த்துத் திருப்தியடைவேன்” என்றாள்.

அரசன் காவலனை நோக்கி “அப்பிரபுவை யுள்ளே விடு” என்றான்.

பிரபு அறைக்குள் வந்ததும் அரசனை நோக்கி மிகத் தாழ்மையோடு அரசனுக்கு மட்டும் வந்தனமளித்தார். இதைக் கண்ட சீமாட்டி முகங்கறுத்துக் குறிப்பாக அரசனை நோக்கினாள். அரசன் பிரபுவை நோக்கி “என்ன பிரபுவே! இங்கு இச்சீமாட்டி உட்கார்ந்து இருப்பது உமது கண்களுக்குப் புலப்படவில்லையோ?” என்றான்.

பிரபு:—அரசே! இங்கொரு சீமாட்டி யிருப்பதைக் கண்டேன். ஆனால் நான் தாங்கள் ஏகாந்தமாய் எனக்குப் பேட்டி யளிப்பீர்களென்று எண்ணி யிருந்தேன்.

அரசன் கோபத்தோடு “ஏது நீர் வேண்டுமென்றே யிச்சீமாட்டியை அகௌரவப் படுத்தக் கருதுவதாகத் தெரிகிறது” என்றார்.

பிரபு:—அச்சீமாட்டி தன் நடக்கைகளாலும், பொதுஜன அபிப்பிராயத்தையும் மதிப்பையும் அலட்சியம்செய்வதாலும் தனக்குத்தானே வருவித்துக்கொண்ட அகௌரவத்தைக் காட்டிலும் நான் வேறு அகௌரவம் செய்யக் கருதவேண்டியதில்லை.

அரசன்:—"பிரபுவே! நீர் என் முன்னேயே யிவ்வாறு இச்சீமாட்டியை அவமரியாதையாய்ப் பேசும்போது" என்பதற்குள்,

மதனம்பாள் அரசனை நோக்கி "தாங்கள் ஒன்றும் கூறவேண்டாம். ஒரு ஸ்திரீயை யிவ்வாறு கோழைத்தனமாகத் தூஷிக்கும் இவர் எதுதான் செய்யமாட்டார். இவரிடம் இராஜத்துரோக சிந்தனைகளும் கலக எண்ணங்களும் இருக்கின்றனவென்று கூறப்படுவது உண்மையாகவே யிருக்கவேண்டும்" என்றாள்.

பிரபு அரசரை நோக்கி "அரசே! என்னைப்பற்றிய அபிப்பிராயத்தைப் பற்றி நான் இச்சீமாட்டியைப் போன்ற அன்னிய நாட்டு மாதரிடம் எதிர்பார்க்கவில்லை. நான் தங்களிடம் தனியே ஒரு விஷயத்தைப்பற்றிப் பேசக் கருதி வந்தேன். தாங்கள் நான் தனியே வார்த்தையாட எனக்குச் சந்தர்ப்ப மளிக்காத வரையில் இங்கேயே அதைக் கூறவேண்டியது என் கடமையாகிறது. அரசே! தாங்கள் என் வேண்டுகோளை ஏற்றுக் கொள்வதாயின் நான் தங்கள் நன்மையையே எப்போதும் கோருபவன் என்பது நன்கு விளங்கும். எனக்கு இரண்டொரு நிமிடங்கள் செவி கொடுக்க வேண்டுகிறேன். நமது நாட்டில் நடக்கவேண்டிய துரைத்தன முறைமையும், நமது முன்னோர்களின் சட்ட திட்டங்களும் மிக்க சிறந்தவை யென்பது எனது தீர்மானம். யாவும் நடக்கவேண்டிய முறைமையில் நடந்தால் நமது நாட்டின் க்ஷேமமும் கௌரவமும் ஒப்புயர்வற்றனவாக விருக்கும். தாங்கள் மட்டும் தயவுசெய்து அடியேன் மிக்க வணக்கத்தோடு தங்கள் பாதங்களில் பணிந்து கூறும் ஆலோசனைகளை ஏற்றுக் கொள்வதாயின்..." என்றதே,

மதனம்பாள் சீமாட்டி "ஓகோ! இது அதிகப்பிரசங்கித் தனமான புத்திமதியே யன்றி வேறில்லை" என்று கூறிக்கொண்டே அரசனை யுற்று நோக்கினள்.

அரசன் உடனே வெகுண்டு "ஓ! இத்தகைய இராஜத்துரோக சிந்தனையுடைய பிரபு உடனே நமது சமுகத்தைவிட்டுச் செல்லாவிட்டால் நமது காவலனை விளித்து இவரை வெளியிற்றள்ளச் செய்வோம்" என்றான்.

இராஜரத்தினம் பிரபு:—"அரசே! தங்கள் அவமரியாதையான வார்த்தைகள் நான் இங்குவந்து செய்யக் கருதிய நன்மையைச் செய்ய வொட்டாது செய்துவிட்டன. வந்தனம் போய் வருகிறேன்" என்று கூறிவிட்டு வெளியே சென்றார்.

மறுநாட் காலை கர்னல் இரவணப்பன் பிரபுவிடம் வந்தபோது அவர் "நான் உங்களுக்கு உதவியாக இருக்கச் சம்மதிக்கிறேனென்று வாக்களித்ததாக உமது நண்பர்களிடம் கூறிவிடும்" என்றார்.

மறுநாள் இரவு எட்டு மணியிருக்கும். அச்சமயம் இரொட்டிக்கிடங்கில் கர்னல் இரகுநாதரின் அறையில் சுமார் இருபது பேர்களுக்கு ஆசனங்கள் போடப்பட்டிருந்தன. இரண்டு மூன்று தீபங்கள் பிரகாசமாக எரிந்துகொண் டிருந்தன. அங்கிருந்த அலமாரியில் ஏராளமான சாராயவகைகளும் சிற்றுண்டிகளும் பழ வகைகளும் வைக்கப்பட்டிருந்தன.

கர்னலின் வேலையாட்களில் பொன்னப்பன் என்பவனொருவனிருந்தான். அவன் அவருடைய அந்தரங்கவேலையாள். அவன் அங்கு செய்யவேண்டிய வேலைகளை யெல்லாம் செய்து முடித்த பின், கர்னல் அவனை நோக்கி,

"பொன்னப்பா! இனி நீ வெளிவாயிலில் போய் நின்றுகொண் டிருந்து, வருகிறவர்களை யெல்லாம் பார்த்து நமது நண்பர்களென்று தெரிந்தவர்களை யுள்ளே விடு" என்றார்.

பொன்னப்பன் "எஜமானரே! இச்சமயத்தில் தங்

கள் உண்மையான சிநேகிதர்களென்று நான் தெரிந்து கொள்வதெப்படி?" என்றான்.

கர்னல் இரகுநாதர்:—வருகிறவர்கள் ஒவ்வொருவரையும் யார்? என்று கேள். "புதுக்கடை திருவிழா" என்று கூறுகிறவர்களை யெல்லாம் உள்ளே விட்டு விடு—வீட்டில் மாதர்கள் உண்மையை யறியலாகாது. நான் விடுதலையடைந்ததற்காகச் சந்தோஷங்கொண்டாட வேண்டி நண்பர்களனைவரும் ஒன்று கூடினார்கள் என்றே அவர்களுக்குக் கூறவேண்டும்" என்றார்.

பொன்னப்பன்:—எஜமானே! நான முன்பே அவ்வாறு கூறிவிட்டேன். அவர்கள் எதிரில்தான் கிண்ணங்கள் புட்டிகள் சிற்றுண்டி முதலிய யாவும் எடுத்து வந்தேன். அவற்றை யெல்லாம் அலமாரியில் வைத்துப் பூட்டி விட்டேன்.

கர்னல்:—விவகாரம் முடியுமட்டும் அவற்றை யெடுக்க வேண்டாம். அப்படிச் செய்தால் சிலர் குடித்து விட்டு விவகாரத்தைப் பேசுமுன் பெருங்கூச்சல் போட ஆரம்பித்து விடுவார்கள். முக்கியமாகக் கர்னல் இரவணப்பன் குடிக்க ஆரம்பித்து விட்டால் அதே வேலையாக உட்கார்ந்து விடுவான்.

மணி ஒன்பதாகும் வேளைக்குச் சுமார் பதினைந்து பதினாறுபேர் வந்து கூடிவிட்டார்கள். கர்னல் இரகுநாதரே அக்கூட்டத்திற்கு அக்கிராசனாதிபதியாக அமர்ந்தார். கர்னல் இரவணப்பன் எழுந்து யாவரையும் நோக்கி "நண்பர்களே! இப்போது நாமனைவரும் இங்கு கூடியிருக்கும் காரணம் இன்னதென்று யாவருக்கும் தெரியும். ஆனால் அதைப்பற்றிய மற்ற எல்லா விவரங்களும் நமது அக்கிராசனாதிபதியாகிய நண்பரால் கூறப்படும். இராஜரத்னம் பிரபுவும் அவருடைய நண்பர்களும் நமக்குத் துணை நிற்பதாக வாக்களித்திருக்கிறார்கள் என்பதை மட்டும் நான் கூறுவேன்" என்றார்.

அதன் பிறகு கர்னல் இரகுநாதர் எழுந்து "நண்பர்களே! இப்போது நமது நாடிருக்கும் நிலைமையையும்

நமது அரசனுடைய நடவடிக்கைகளையும் நான் விவரித்துக் கூறவேண்டுவதில்லை. அரசனால் என் குடும்பத்திற்கு நேர்ந்த அக்கிரமமான இக்கட்டுகளைக் கூறுகிறேன்'' என்று தன் தங்கையைப் பற்றியும் புத்திரியைப் பற்றியும்நடந்த விஷயங்களை யெல்லாம் விவரமாய்க் கூறிவிட்டு,

''இக்காரணங்களிருப்பதால் நான் என் வஞ்சத்தைத் தீர்த்துக்கொள்ளும் சுயநலங்கருதியே இந்த ஏற்பாட்டைச் செய்வதாக நீங்கள் கருதலாகும். ஆனால் பின்னால் விவகரிக்கப்படும் சங்கதிகளால் என் வஞ்சமும் கொஞ்சம் தீர்வதாயினும் பொதுவாய் நம் நாட்டின் க்ஷேமத்திற்கே இந்த ஏற்பாடு செய்யப்பட்டதென்று நன்கு விளங்கும். சுருக்கமாகக் கூறுகிறேன். ஏற்பாடென்னவெனில் அரசனைப் பிடித்து நமது வசத்தில் வைத்துக் கொண்டு இனி நாட்டின் சட்ட திட்டங்கள் ஒழுங்காக நடப்பதற்குத் தக்க நிபந்தனைகளை யெழுதி வாங்கிக்கொள்வது'' என்றார்.

நாமும் இப்பாகத்தைச் சுருக்கமாகவே முடிக்கிறோம். இதில் நமது ஜனரல் உக்கிரசேனருடைய சாமார்த்தியம் வெளியாகிற தென்பதற்காக இதைக் கூறுகிறோம். சுமார் ஒரு மணி நேரம் நடக்கவேண்டிய ஏற்பாடுகளைப்பற்றி வாதம் நடந்தது. கடைசியில் கீழ்க் கண்ட தீர்மானம் அக்கிராசனாதிபதியால் பகிரங்கப்படுத்தப்பட்டது:—

இன்று ஆறாவது நாள் புதுக்கடைத் திருவிழா நடக்கிறது. அரசனும் அவர் சகோதரனும் அதற்குச் செல்லப்போகிறார்கள். அத்தகைய சமயங்களில் அரசன் கொஞ்சம் காவலரோடுதான் செல்வது வழக்கம். இக் கட்டிடத்திற்கு எதிரில் செல்லும் பாதை வழியாகத்தான் அவர்கள் செல்லவேண்டும். அவர்கள் திருவிழாவிலிருந்து திரும்பி வரும்போது நாம் அவர்களைப் பிடித்துக் கொள்ளவேண்டும். எப்படியெனில், நாமெல்லாம் உள்ளே மறைவிலிருக்கவேண்டும். நம்பகமான என் ஆட்களையும், இதோ நமது நண்பர் செந்திலடிமைப் பிள்ளை

யின் ஹோட்டலிலுள்ள ஆட்களில் சிலரையும் மாறுவேட மணிந்து தானியக்கிடங்கில் மறைந்திருக்கும்படிச் செய்ய வேண்டும். ஒரு பெரிய சுமை வண்டியைப் பாதையோரத் தில் ஆயத்தமாக நிறுத்தி வைத்திருக்கவேண்டும. அரசன் வண்டி சமீபத்தில் வரும்போது பாதை யோரத்திலிருக் கும் வண்டியைப் பாதையின் குறுக்கே கவிழ்ந்து விடச் செய்யவேண்டும். உடனே தானியக்கிடங்கில் மறைந்திருக் கும் ஆட்கள் கவிழ்ந்த வண்டியைத் தூக்க வருபவர்கள் போல் பாய்ந்து வந்து அரசன் வண்டியைச் சூழ்ந்து கொள்ளவேண்டும். அதே சமயம் நாமும் போய்க் கூடிக் கொண்டு அரசனுடைய காவலர்களில் ஒருவனைக் கூட விட்டு விடாமற் பிடித்துக்கொள்ள வேண்டும். அரசனை யும் அவன் சகோதரனையும் நாம் பிடித்து வைத்துக் கொள்ள வேண்டும். உடனே நடந்த விஷயத்தைப்பற் றிய அத்தாட்சி யொன்றுமில்லாமற் செய்துவிடவேண் டும். அரசன் ஏறி வந்த வண்டி குதிரைகள் யாவற்றையும் மறைத்து வைக்கச் சரியான இடம் இருக்கிறது. அரசனை யும் அவன் சகோதரனையும் நிலவறைக்குள் வைத்து விட் டால் ஒருவருக்கும் தெரியாது. அவர்கள் மாயமாக மறைந்து விட்டது போல் தோன்ற வேண்டும். அதன் பிறகு இராஜரத்னம் பிரபுவுக்கு ஆள் அனுப்பினல் அவ ரும் அவர் நண்பர்களும் வந்து விடுகிறார்கள். உடனே நமக்கு வேண்டிய நிபந்தனைகளை யெழுதி யரசனை யதில் கையொப்பம் வைக்கும்படி செய்யவேண்டும்'' என்ற போது,

கூட்டத்திலிருந்தவர்களில் வர்த்தகராகிய ஒருவர் ''ஆம். அரசன் அப்போது யாவற்றிற்கும் சம்மதிப்ப தாகக் கூறிக் கையெப்பம் வைத்து விடுவான். ஆனல் பிறகு வெளியிற் சென்றதும் நம்மனைவரையும் பிடிக்கச் செய்து தூக்குமரத்திற்கு அனுப்பி விடுவான் என்பது நிச் சயம்'' என்றார்.

கர்னல் இரகுநாதர்:—அப்படி யல்ல. நமக்கு வேண்டிய நிபந்தனைகளை யெழுதிவாங்கிக்கொண்டு, அவற்றை

விளம்பரப்படுத்தி யாவரும் அறியும்படி செய்து விட வேண்டும். அவற்றில் முக்கியமான இரண்டொரு விஷயங்கள் நிறைவேறிவிட வேண்டும். பிறகு இதிற் சம்பந்தப்பட்டவர்களில் ஒருவருக்கும் கெடுதி செய்வதில்லை யென்று உயர்ந்த பிரமாணிக்கங்களோடு எழுதிவாங்கிக்கொண்ட பின்பே அரசனையும் அவன் சகோதரனையும் விடுதலை செய்ய வேண்டும்'' என்றார்.

இவ்வாறே யாவரும் சம்மதித்தபின், கர்னல் இரகுநாதர், ஹோட்டல் காரனாகிய செந்திலடிமை, கர்னல் இரவணப்பன், இன்னும் இருவர் ஆக ஐந்து பேர்கள் கூடிய ஒரு சிறு சபை ஏற்படுத்தப்பட்டது. நடக்க வேண்டிய காரியங்களைக் கவனிப்பதும் தக்க ஏற்பாடுகளைச் செய்வதும் இவர்கள் வேலை. நகரத்தில் நடக்கும் விஷயங்களை யறிந்து வந்து தெரிவிக்கவும் இராஜரத்னம் பிரபு முதலியவர்களுக்குச் சங்கதி தெரிவிக்கவும் கர்னல் இரவணப்பர் இரொட்டிக் கிடங்கிலேயே தங்கியிருப்பதென்று ஏற்பாடாயிற்று.

66-வது அத்தியாயம்

சதியாலோசனைத் தொடர்ச்சி—இராஜாம்பாள் உண்மையறிதல்—ஜனரல் உக்கிரசேனர் ரோட்டிக்கிடங்கிற்கு வரல்—இராஜாம்பாள் ஜனரலிடம் இரகசியத்தை யறிவித்தல்—புதுக்கடைத் திருவிழாவில் அரசன்—ஜெனரல் உக்ரசேனர் திருவிழாவிற்கு வரல்

கர்னல் இரவணப்பன் மறுநாட் காலை இராஜரத்னம் பிரபு விடம் சென்று நடந்த சங்கதிகளை யெல்லாம் கூறினர். அவர்யாவும் கேட்டபின் சற்று நேரம் சிந்தித்து, "சரி அரசனும் அவன் சகோதரனும் பிடிக்கப்பட்டதே சங்கதி தெரியப்படுத்தினல் நான் என் நண்பர்

களை யழைத்துக்கொண்டு வருகிறேன். அரசனிடம் கை யொப்பம் வாங்கவேண்டிய நிபந்தனைகளை நானே எழுதிக்கொண்டு வருகிறேன்'' என்றார்.

சர்னல் இரவணப்பன் இரகுநாதரிடம் திரும்பி வந்து பிரபு கூறிய யாவும் கூறி, அப்பிரபுக்கள் ஒரு முறை யிங்கு வந்து நம்மோடு சேர்ந்து விடட்டும். அப்புறம் அவர்கள் எழுதிக்கொண்டு வரும் நிபந்தனைகள் சபையில் ஆலோசிக்கப்பட்டு மாற்றவேண்டியவை மாற்றப்பட்டு யாவராலும் அங்கீகரிக்கப்பட்டபின்பே நடைபெறும். பிறகு அவர்கள் பின்னிடைய முடியாது என்றார்.

கர்னல் இரகுநாதரின் மனைவி தங்கை யிருவர்க்கும் நடக்கும் சங்கதியின் உண்மை கூறப்படவில்லை யென்று முன்பே யியம்பி யுள்ளோம். கர்னலின் மனைவி தன் கணவன் மேல் பூரண நம்பிக்கை யுடையவளானபடியால் யாவரும் கூட்டம் கூடியது அவருடைய விடுதலைக்காகச் சந்தோஷம் கொண்டாடவே யென்று நம்பிக்கொண்டாள். ஆனால் இரகுநாதரின் தங்கையாகிய இராஜாம்பாளுக்கு மட்டும் மனதில் சந்தேகமும் கலவரமுமாகவே யிருந்தது. ஏனெனில் தன் சகோதரனுக்குப் பல காரணங்களால் அரசன் மேல் மிக்க கோபமிருக்கிறதும் அதனால் அரசன் மேல் வஞ்சந்தீர்த்துக் கொள்ள ஆவலிருப்பதும் அளுவக்குத் தெரியும். கர்னல் இரவணப்பன் மிக்க ஆத்திரக்காரன் என்றும் அங்கு கூடியவர்களனைவோரும் பெரிய கட்சியைச் சேர்ந்தவர்களென்பதும் அவளுக்குத் தெரியும். இக்காரணங்களால் இவர்கள் கூடியது ஏதோ விசேஷகாரியத்தை யுத்தேசித்தே யென்று அவள் புத்தியிற்பட்டது. மேலும் எதிரிலுள்ள ஹோட்டல்காரனாகிய செந்திலடிமை யென்பவன் தன் தமையனிடம் நட்புக் கொண்டிருந்தாலும் அவர் அவனிடம் இதுகாறும் நெருங்கிய சகவாசம் வைத்துக் கொண்டு சமமரியாதை யோடு நடத்துவதில்லை. இப்போது அவன் அடிக்கடி கர்னலின் அறைக்கு வருவதும், அவரோடு நெடுநேரம் இரகசியமாகப் பேசுவதும், இவர்கள் இருவரும் கர்னல் இரவ

ணப்பனும் கூடி இரகசியமாகப் பேசுவதும், இரவணப்பன் தினம் நகரத்திற்குச் சென்றுவருவதும் ஆகிய இவற்றை யெல்லாம் காணக்காண இராஜாம்பாளுக்குப் பலத்த சந்தேகமுண்டாய் விட்டது. தன் தமையனைக் கேட்டால் அவர் கூறமாட்டாரென்றும், கருதிய காரியத்தை முடித்தே தீரும் பிடிவாதமுடையவரென்றும் அவள் அறிவாள். ஆனால் இவர்கள் அவ்வாறு அரசனுக்கு விரோதமாக ஏதேனும் செய்யும் பட்சத்தில் கட்டாயம் பிராணபத்தில் சிக்கிக்கொள்வார்கள் என்றும் அவள் அறிவாள. தன் தமையனுக்கு அரசன் மேல் மிக்க கோபம் நேர்ந்தது தன் பொருட்டாகவே. ஆகையால் தன் பொருட்டாகத் தன் தமையன் ஏதேனும் அவசரப்பட்டு ஒரு காரியத்தைச் செய்துவிட்டு, அதனால் அவர் குடும்பத்திற்குத் தீராத்தீங்கு நேரிடுவதாயின் தான் சகிக்க முடியாதென்ற மனோவேதனை யம்மாதிற் கதிகமாய்விட்டது. இவர்கள் ஏதோ செய்யப் போகிறார்களென்று மட்டும் அவளுக்குத் தெரிகிறதன்றி இன்ன விஷயமென்பது சற்றும் மனதிற்குப் புலப்படவில்லை. ஆகையால் அதை யறியவேண்டும் என்று தனக்குள் தீர்மானித்துச் சமயம் பார்த்துக் கொண்டிருந்தாள்.

திருவிழா இன்னும் மூன்று நாட்களே யிருக்கின்றன. அன்றுமாலை ஏழு மணிக்குக் கர்னல் இரவணப்பன் காலையில் நகரத்திற்குச் சென்றவன் அப்போது தான் திரும்பி வந்தான். மறு நிமிடம் ஹோட்டல் காரனாகிய செந்திலடிமையும் அங்கு வந்தான். மூவரும் அறைக்குள் சென்று கதவை மூடி யுட்பக்கம் தாளிட்டுக்கொண்டார்கள். அதற்கு வெளிப்பக்கம் தாழ்வாரத்தின் கோடியிலுள்ள வாயிற்படியில் பொன்னப்பன் காவலிருக்கிறான். அவர்கள் இருக்கும் அறைக்கு மறுபக்கம் ஒரு அறை யிருக்கிறது. அது குடும்பம் இருக்கும் இடங்களுக்குச் செல்லும் வழியிலிருக்கிறது. இரண்டறைகளுக்கும் இடையில் வாயிற்படியுண்டு.

கர்னல் முதலிய மூவரும் அங்கு கூடியதைக் கண்ட

தும் இராஜாம்பாள் அப்பின்பக்க அறைக்குள் நுழைந்து இரண்டறைக்கும் இடையிலுள்ள கதவினருகில் நின்று உற்றுக் கேட்டாள். அவள் தன் சந்தேகத்தை யெள்ள ளவேனும் தன் தமையன் மனைவியிடம் கூறவில்லை. ஏனெனில் அம்மாதுக்குக் கூறி அவள் மனதிற்கு வியாகூலத்தையுண்டாக்கப் பிரியப்படவில்லை. இராஜாம்பாள் உற்றுக் கேட்டபோது கீழ்க்கண்ட சம்பாஷணை யவள் செவியில் விழுந்தது.

கர்னல் இரகுநாதர்:—இனி நீர் நகரத்தில் இருந்து கொண்டுவந்த சங்கதி எத்தகையவை? விவரமாகக் கூறும்.

கர்னல் இரவணப்பன்:—சங்கதிகள் யாவும் திருப்தியே. இராஜரத்னம் பிரபுவும் அவர் நண்பர்களும் உறுதியாகவே யிருக்கிறார்கள். அரசனும் அவன் சகோதரன் விஜயசிங்க இராஜகுமாரனும் இங்கு சிறையாக்கப்பட்டதே சங்கதி தெரிவித்தால் பிரபுவும் அவர் நண்பர்களும் வந்து விடுவார்கள். அரசன் ஒப்புக் கொள்ளவேண்டிய நிபந்தனைகளை யெல்லாம் எழுதிக்கொண்டு வருவதாகவும் இராஜரத்னம் பிரபு கூறினார். அரசனும் அவன் சகோதரனும் புதுக்கடைத் திருவிழாவிற்குச் செல்வதாய் நகரமுழுமையும் பகிரங்கமாய்த் தெரிந்திருக்கிறது. இனி உமது ஏற்பாடுகள் சரியாக விருந்தால் காரியம் நிறைவேறிய மாதிரியே.

கர்னல் இரகுநாதர்:—என் ஏற்பாடுகள் யாவும் செய்யப்பட்டு முடிந்தன. என் ஆட்களனைவரும் இம் முயற்சியில் தங்கள் பிராணனைக்கூடத் தியாகம் செய்ய ஆயத்தமாக விருக்கிறார்கள். அவர்களனைவரும் நம்பிக்கையானவர்கள். வண்டி விஷயத்திற்கும் தகுதியான இரண்டாட்களை நியமித்து விட்டேன். அவர்கள் ஒரு பெரிய வண்டியில் தானிய மூட்டைகளை யடுக்கிவிட்டுப் பாதையின் ஓரம் வண்டியை நிறுத்திக் கடையாணிகளைக் கழற்றிவிட்டு

ஆயத்தமாக விருப்பார்கள். அரசன் வண்டி புதுக் கடையின் திக்கிலிருந்து வருவதைக் கண்டதும் அது சமீபத்தில் வரும்போது மூட்டை வண்டியை யின்னும் தூரத்தில் ஒட்ட முயல்பவர்கள்போல் ஒட்டுவார்கள். வண்டி யுடனே பாதையின் குறுக்கே கவிழ்ந்துவிடும். அதே சமயம் தானியக்கிடங்கில் ஒளிந்திருக்கும் நமது ஆட்கள் வீழ்ந்த வண்டியைத் தூக்குகிறவர்கள்போல் ஓடிப்போய் அரசன் வண்டியையும் காவலர்களையும் சூழ்ந்துகொள்வார்கள். அதே சமயம் நாம் அனைவரும் பாய்ந்துபோய் யாவரையும் ஒருவரைக் கூடவிடாமல் சிறைப்படுத்திக்கொள்ளவேண்டும்...''

இராஜாம்பாள் இவ்வளவுவரையில் கேட்டதாலேயே எல்லாச் சங்கதிகளையும் அறிந்து கொண்டாள். உடனே அங்கிருந்து நேராகத் தன் அறைக்குச் சென்றாள். அம் மாதின் மனதில் உண்டான வியாகூலத்திற்கு ஒரு அளவில்லை. எவ்வாற்றானும் தன் தமையனை யிந்த ஆபத்தில் சிக்கிக்கொள்ளாமல் தடுக்க வேண்டுமென்பது அவள் கருத்து. எவ்வாறு செய்வது? தன் தமையன் பாதங்களில் வீழ்ந்து வேண்டிக்கொள்ளலாம் என்று யோசித்தாள். அப்படிச் செய்தால் தமையன் தான் அவர் காரியத்தில் வேவு பார்த்ததாகக் கருதுவதோடு தான் பிடித்த பிடியை விடமாட்டார். கையெழுத்துப் போடாத கடித மூலமாக, அந்த வழி வந்தால் ஆபத்தானதால் வரவேண்டாமென்று அரசனுக்கு எச்சரிக்கை செய்யலாமென்று கருதினாள். அப்படிச் செய்தால் அரசன் சந்தேகங்கொண்டு எப்படியும் தன் தமையனையும் மற்றவர்களையும் சிறைசெய்து விசாரித்துத் தண்டித்துவிடுவான். வேறு எவ்விதமாகத் தன் தமையனைக் காப்பாற்றுவது? அவளுக்கு ஒன்றும் புலப்படவில்லை. அவள் மனோ வியாகூலம் சொல்லத்தரமல்ல. அன்றிரவு முழுமையும் அவளுக்கு நித்திரை பிடிக்கவில்லை.

இராஜாம்பாளுடைய அறை மேல்மாடியி லிருப்பதால்

மனைக்குள் யார் வந்தாலும் தன் அறையின் சாளரத்தில் நின்று அவள் அவர்களைக் கண்டறிந்துகொள்ளலாம். மறுநாள்காலை சுமார் ஒன்பது மணியிருக்கும். அச்சமயம் இராஜாம்பாள் தன்னறையில் சாளரவோரத்தில் உட்கார்ந்துகொண்டு "கடவுளே! நான் என்ன செய்வேன்? இத்தகைய ஆபத்தினின்றும் என் தமையனை யெவ்வாறு காப்பாற்றுவேன். திருவிழா நடக்க இன்னும் இரண்டே நாட்களிருக்கின்றனவே, எனக்கு ஒரு மார்க்கமும் புலப்படவில்லையே. அய்யோ! நான் இதுகாறும் அனுபவித்த துன்பங்கள் எனக்குப் போதுமான தண்டனையன்றோ? ஏ கருணாநிதியே!" என்று மனவருத்தப்பட்டுக் கொண்டிருந்தாள்.

அச்சமயம் பாதையின் வழியாய் வரும் யாரோ இருவர் வீட்டிற்குள் நுழைவதைக் கண்டு உற்று நோக்கினாள். உடனே அவள் முகத்தில் ஒருவிதச் சந்தோஷப் பிரகாசம் உண்டாயிற்று. ஏனெனில் வந்தவர்கள் ஜனரல் உக்கிரசேனரும் அவருடைய வேலையாளுமே. இராஜாம்பாள் உடனே கீழிறங்கிச்சென்று ஜனரலைச் சந்தித்து நல்வரவு கூறி யுபசரித்தாள். என்ன காரணத்தாலோ ஜனரலைக் கண்டதே தன் இக்கட்டு நீங்கிவிடுமென்று அவள் மனதில் ஒருவிதச் சந்தோஷ முண்டாயிற்று. அதற்குள் கர்னல் இரகுநாதரும் அவர் மனைவியும் வந்து ஜனரலை வரவேற்றார்கள்.

ஒருவருக்கொருவர் க்ஷேம லாபங்களை விசாரித்த பின் ஜனரல் மற்றவர்களை நோக்கி, "ஸர்தார் உலகநாயகனும் அமராவதியும் இச்சமயம் என் கூடவே கட்டாயம் வந்திருப்பார்கள். ஆனால் நீங்களனைவரும் நகரத்திற்கு வரப்போகிறபடியால் அவர்கள் இப்போது இங்கு வருவது அனாவசியமாயிற்று. எப்படி யெனில், கர்னல்! நான் இன்னும் பத்துத்தினங்களில் என் உத்தியோகத்தில் போய்ச் சேருவதற்காக மேற்கு நாட்டிற்குப் பிரயாணப்படப்போகிறேன். ஆகையால் இதற்கிடையில் என் நண்பர்களை என் வீட்டில் சில நாட்கள் விருந்தினர்களாக

வைத்திருக்கக் கருதுகிறேன். ஆகையால் நண்பரே! தாங்களும் தங்கள் மனைவி சகோதரி மூவரும் மூன்றுவது நாள் மாலை இங்கிருந்து புறப்பட்டு என் வளவிற்கு வந்து நான் செல்லும்வரை யங்கிருக்கப் பிரார்த்திக்கிறேன்" என்றனர்.

கர்னல் இரகுநாதர் "ஆ! ஜனரல்! தாங்கள் கூறியபடி செய்ய நான் எவ்வளவோ பிரியமும் ஆவலுமுடையேன். ஆனால் நான் இங்கில்லாத கடந்த இரண்டு மூன்றுமாதங்களாக என் தொழில் எவ்வளவோ சீர்கே டடைந்திருக்கிறது. இப்போதுதான் அது கொஞ்சம் கொஞ்சமாக ஒழுங்குபட்டு வருகிறது. ஆகையால் இச்சமயம் நான் இதை விட்டுவிட்டு வருவதற்கு அஞ்சுகிறேன். என் மனைவியும் சகோதரியும் சந்தேகமின்றித் தங்கள் விருப்பப்படி நடப்பார்கள். நான் தாங்கள் புறப்படுவதற்கு முன்தினம் அவசியம் வந்து விடுகிறேன். என்னை மன்னிக்கும்படியாக மிகவும் வேண்டிக்கொள்கிறேன்" என்றார்.

ஜனரல் "தாங்கள் வேலையைப்பற்றிக் கவனிப்பதாயின் நான் ஒப்புக்கொள்ள வேண்டியதே. ஆனால் நான் இந்நாட்டைவிட்டுப் புறப்படுமுன் இருபத்திநான்கு மணி நேரமாவது என் கூடவிருக்கவேண்டும்." என்று கூறிவிட்டுக் கர்னலின் மனைவியையும் சகோதரியையும் நோக்கி "ஏனம்மா! நீங்கள் கட்டாயம் மூன்றுவதுநாள் மாலை என் மாளிகைக்கு வந்து சேருவீர்களென்று நம்புகிறேன். அன்று இரண்டுமணிக்குச் சரியாக என் வண்டியும், உங்களுக்குத் துணையாக வர என் ஆட்களில் நால்வரும் இங்கு வருவார்கள்" என்றார். அவர்கள் அப்படியே வரச் சம்மதித்தார்கள். அவர்கள் கோரியபடி ஜனரல் உக்கிரசேனர் பகற் போஜனத்திற்கு அங்கு தங்கினர்.

இராஜாம்பாள் மனதில் ஒரு யோஜனை தோன்றியது. அதன்படி நடந்தால் தன் தமையன் ஆபத்தில் சிக்காமல் காப்பாற்றப்படுவார் என்று அவள் புத்தியிற் பட்டது. அதற்காக ஜனரலிடம் தனியாகப் பேசச் சமயம் வாய்க்குமென்று ஆவலோடு எதிர்பார்த்துக்கொண் டிருந்தாள்.

ஆனால் தன் தமையனும் அண்ணியாரும் கூடவே யிருந்த தால் நெடுநேரம் சமயம் வாய்க்கவில்லை. கடைசியில் கர்னலை ஒரு வேலைக்காரன் வந்து யாரோ ஒரு வர்த்தகர் வந்திருப்பதாக அழைக்க அவர் சென்றார். அதே சமயம் அவர் மனைவியும் ஒரு குடும்ப வேலையாகச்சென்றாள். அச் சமயம் இராஜாம்பாள் ஜனரல் உக்கிரசேனரை நோக்கி,

"ஜனரல்! உம்மைவிட எங்கள் குடும்பத்திற்கு உண் மையான நண்பர் கிடையாது. இப்போது தங்களை ஒரு பெரிய வரங்கேட்கிறேன். அந்த உதவியை எப்படியா யினும் செய்யவேண்டும். ஆனால் அது மிக்க இரகசிய மானது. அதைக்கூற இரண்டொரு வினாடி அவகாசமே யிருக்கிறது. ஒருவரெதிரிலும் கூறக்கூடாது. என் தமை யனுக்குத் தெரியவே கூடாது" என்றதே,

ஜனரல் உக்கிரசேனர் "சீக்கிரம் கூறும். என் சக்தி யால் கூடியது எதுவாயினும் செய்யத் தடையே யில்லை. நம்பிக்கையோடு என்னிடம் கூறலாம்" என்றார்.

இராஜாம்பாள்:—ஆ! உமது வல்லமை அளவு கடந்தது. ஆ! யாரோ வருகிறார்கள்.

ஜனரல்:—யாருமில்லை. உமது மனக்கலவரமே. சீக்கிரம் கூறும்.

இராஜாம்பாள்:—தாங்கள் கட்டாயம் புதுக்கடைத் திரு விழாவிற்குச் செல்லவேண்டும். அரசனிடம் உங்கள் செல்வாக்கால் நீங்கள் எதையும் செய்யலாம். ஆ! நிஜமாகவே யாரோ வருகிறார்கள்.

ஜனரல்:—"ஒரு சீட்டில் சுருக்கமாக எழுதி இரகசியமாய் என் ஜேபியில் நழுவவிடும்" என்றார்.

மறு நிமிடம் கர்னல் இரகுநாதரின் மனைவி யறைக் குள் வந்தாள் — சற்று நேரத்திற்குள் கர்னலும் வந்து விட்டார். மூவரும் போஜனத்திற்குப் பின் சற்றுநேரம் பேசிக்கொண் டிருந்தார்கள். அச்சமயம் ஜனரலின் வேலைக்காரன் வந்து "பிரபுவே! குதிரைகள் சேணம் கட் டப்பட்டுப் பிரயாணத்திற்கு ஆயத்தமாக விருக்கின்றன" என்றான்.

அப்போது இராஜாம்பாள் ஜனரலை நோக்கி "அமராவதிக்கு இரண்டொரு வார்த்தை யெழுதி யளிக்கிறேன். தயவு செய்து அதை யவளிடம் கொடுத்து விடுங்கள்" என்று கூறி அறையின் ஒரு மூலையிலிருந்த மேஜையருகிற் சென்று அங்கிருந்த எழுது கருவிகளைக்கொண்டு ஒரு கடிதத்தில் இரண்டு மூன்று வரிகளை யெழுதி மடித்துக் கொண்டு வந்து ஜனரலிடம் கொடுத்து "இது தங்கள் பார்வைக்கே" என்று கூறுவதுபோல் குறிப்பாய் அவரை நோக்கினாள். அவர் குறிப்பாய் "தங்கள் விருப்பத்தைக் கட்டாயம் பூர்த்தி செய்வேன்" என்றார்.

* * * * *

மூன்றாவது நாள் மாலை சுமார் இரண்டரை மணிக்கு அதே வேலையாக இலவணபுரியிலிருந்து வரும் பாதையை நோக்கிக்கொண் டிருந்த ஹோட்டல் காரனாகிய செந்திலடிமை யென்பவன் அரசன் வண்டி வருவதைக்கண்டு ஒரு மரத்தின் மறைவில் நின்று பார்த்தான். அரசனும் அவருடைய சகோதரனாகிய ஜெயசிங்கம் இராஜ குமாரனும் வண்டிக்குள்ளிருந்தார்கள். வண்டியின் உச்சியில் சாரதியும் அவன் பக்கத்தில் குதிரையாள் ஒருவனும், வண்டியின் பின்னால் அரசருடைய வேலையாட்கள் மூவரும் இருந்தார்கள். வண்டியின் முன்னும் பின்னுமாக எட்டுப் பேர் குதிரை வீரர்கள் செல்கிறார்கள். அரசனையும் அவன் சகோதரனையும் தவிரப் பதின் மூன்று பேர்கள் இருக்கிறார்கள். வண்டி புதுக்கடை என்ற ஊரை நோக்கிச்சென்றது. செந்திலடிமை உடனே சமீபத்திலுள்ள இரொட்டிக்கிடங்கிற்குச் சென்று கர்னல் இரகுநாதரிடம் சங்கதியைக் கூறினான்.

மறுநாள் புதுக்கடையில் திருவிழா கேளிக்கை ஆரம்பம். அக்காலத்தில் குதிரைப் பந்தயம், சேவல் பந்தயம், ஓட்டப்பந்தயம் முதலிய பலவித வேடிக்கைகள் நடக்கும். அத்தினங்களில் புதுக்கடை என்ற சிற்றூர் ஒரு பெரிய நகரம் போல் ஜனப்பெருக்கோடிருக்கும். அங்குள்ள மிக்க அழகான ஒரு மாளிகை அரசரின் இருக்

கைக்காக அலங்காரம் செய்யப்பட்டிருந்தது. அச்சமயம் அங்கு எல்லாவிதமான கடைகளும் வந்திருக்கும். எல்லாவித விளையாட்டுகளும் நடக்கும். நாடகங்கள், ஜால வேடிக்கைகள், மல் யுத்தம் முதலிய யாவும் பெருங் கோஷ்டமாக விருக்கும். முதல் நாள் வேடிக்கையைப் பற்றி நமக்கு அவசியமில்லை. இரண்டாம் நாள், அரசன் ஊருக்குத்திரும்பும் நாளே நமது கதையோடு சம்பந்தப் பட்ட நாள்.

அன்று காலை பத்து மணிக்கு அரசனும் அவன் சகோதரனாகிய இளவரசனும் மிக்க அலங்காரமான உடைகளை யணிந்து பொற் சேணங்கள் கட்டப்பட்டுப் பணிகளால் அலங்கரிக்கப்பட்ட நேர்த்தியான புரவிகளின் மேல் ஏறிக்கொண்டு பந்தய வட்டாரத்துக்குள் வந்தார்கள். மதனம்பாள் சீமாட்டிக்குச் சனங்கள் தன்னை வெறுத்துத் தூஷிக்கிறார்களென்று தெரியுமாதலால் அவள் வரவில்லை. குமுதவல்லிச்சீமாட்டி முன்னமே மிக்க அவமானத்தில் ஆழ்ந்திருக்கிறாள். இராணியோ, எப்போதுமே உத்தம மாதரசிகளைப்போல் இத்தகைய கேளிக்கைகளுக் கெல்லாம் செல்வதே யில்லை. கர்னல் இரகுநாதர் சமீபகாலத்தில்தான் பெரிய அவமானமான ஆபத்திலிருந்து தப்பியதால் உலகநாயகன் அமராவதி முதலிய ஒருவரும் வேடிக்கை பார்க்கச்செல்ல விரும்பவில்லை.

அரசனும் இளவரசனும் வேடிக்கை நடக்குமிடத்திற்குள் வந்ததே, சின்னக்கட்சியைச் சேர்ந்தவர்கள் பெருங் கோஷ்டமிட்டு அரசன் வரவைக்கொண்டாடிச் சந்தோஷங்காட்ட முயன்றார்கள். ஆயினும் பொது ஜனங்களுக்கு அரசன் விஷயத்தில் திருப்தியாவது அன்பாவதில்லையாதலால், அவர்கள் முயற்சி பலிக்கவில்லை. தன்னை ஜனங்கள் சந்தோஷத்தோடு வரவேற்கவில்லையென்பதை அரசனும் இளவரசனும் அறிந்துகொண்டார்கள். அரசன் தனக்குண்டான மனத்தாங்கலை யுள்ளேயே யடக்கிக் கொண்டான். ஜயசிங்கன் மட்டும் "அகம்பிடித்த

பயல்கள். இவர்களை மிதித்து அடக்கவேண்டும்'' என்ருன். ஜயசிங்கனுக்கு இருபத்தைந்து வயதிருக்கும். மிக்க அகங்காரமும், கருணையற்ற மனமுமுடையவன். ஏழைகள் அரசர்களுக்கும் பிரபுக்களுக்கும் ஊழியம் செய்யவே பிறந்தவர்களென்றும், அவர்களெல்லாம் மிருகங்களுக்குச் சமதையானவர்களென்றும் மதித்து நடப்பவன். தன் தமையன் தகுதியற்றவர்களுக்கெல்லாம் நற்பதவியை யளித்து விடுகிருன் என்பது அவனுடைய அபிப்பிராயம். அரசன் அங்கு வந்திருந்த செல்வச் சீமான்கள் சீமாட்டிகளிடம் இரண்டொரு வார்த்தைகள் பேசிக்கொண்டேசென்று தமக்காக அமைக்கப்பட்டுள்ள அலங்காரம் பொருந்திய மேடைமே லமர்ந்தான். தம்பி அவன் பக்கத்தி லுட்கார்ந்தான். பின் பக்கம் இராஜ சபையைச் சேர்ந்த மந்திரி பிரதானிகள், பிரபுக்கள் முதலியவர்களுக்கு ஆசனங்கள் போடப்பட்டிருந்தன. அனேகர் அங்கு வந்து உட்கார்ந்தார்கள்.

பகல் மணி பனிரண்டாயிற்று. அப்போது வேடிக்கை நடக்கும் வட்டத்திற்குள் பிரவேசிக்கும் வாயிற்படியில் பெரிய ஜனக்கூட்டமும் மிக்க சந்தோஷமான ஆரவாரிப்பும் உண்டாயின. யாவரும் திடுக்கிட்டு அத்திக்கை நோக்கினர்கள். மேடைமேலிருந்தவர்கள் "யார் வருகிறது? யாருக்காக இந்த ஜனங்கள் அரசர் வந்தபோது கூட இல்லாத அவ்வளவு ஆரவாரம் செய்கிருர்கள்!'' என்று ஒருவரை யொருவர் வினவிக் கொண்டார்கள். அக்கோஷடமும் ஆரவாரிப்பும் அதிகரித்துக்கொண்டே உள்ளே பரவியது. ஜனங்களுடைய பார்வை பலவிதமான வேடிக்கைகள் கேளிக்கைகள், பந்தயங்கள் முதலிய யாவற்றையும் விட்டு ஒரே விடத்தில் ஒரே ஆளின்மேல் நாட்டப்பட்டது. அந்த ஆள் நமது ஜனரல் உக்கிரசேனரே யாவர்.

ஜனரல் உக்கிரசேனர் தன் பிரியத்தால் அங்கு வரவில்லை. இராஜாம்பாள் கொடுத்த கடிதமே அவர் அங்கு வந்ததற்குக் காரணம். ஜெனரல் அக்கடிதத்தை வாங்கிக்

கொண்டு இரொட்டிக்கிடங்கை விட்டு வெளியிற் புறப்பட்டதே, சற்றுதூரம் சென்றதும் அக்கடிதத்தை யெடுத்து வாசித்தார். அதில் கீழ்க்கண்டபடி எழுதப்பட்டிருந்தது:—

“நண்பரே! கடவுள் பெயரால் உம்மை வேண்டிக்கொள்கிறேன். நாளைக்கு அல்லது மறுநாள் கட்டாயம் புதுக்கடைத் திருவிழாவிற்கு அவசியம் செல்லும். அது மட்டுமல்ல; அரசன் அங்கிருந்து நகரத்திற்குத் திரும்பும்போது தாங்கள் என்ன சாமார்த்தியம் அல்லது தந்திரமாவது செய்து அரசன் வண்டியிலேயே ஏறிக்கொண்டு வரவேண்டும். தாங்கள் அப்படிச் செய்வதால் தடுக்கப்படும் ஆபத்து இவ்வளவென்று சொல்லமுடியாது. அதிகம் கூறச் சமயமாயில்லை.”

இதை வாசித்ததே ஜனரல் உக்கிரசேனருக்கு விவரம் தெரியா விடினும் விஷயம் மனதிற்குப் புலப்பட்டு விட்டது. அதாவது, “கர்னல் இரகுநாதர் தான் கூறிய புத்திமதியை மறந்து அரசனுக்கு ஏதோ கெடுதிசெய்ய ஏற்பாடு செய்திருக்கிறார். இராஜாம்பாளுக்கு அச்சங்கதி யெப்படியோ தெரிந்துவிட்டது. அவள் சூக்கும புத்யுடைவளாதலால் இச்சமயம் தன் தமையன் அத்தகைய காரியம் ஏதேனும் செய்ய முயன்றால் தோல்வியடைந்து பிராணபத்தில் சிக்கிக்கொள்வார் என்று அவள் அறிவாள். காரணம் அவசியமானதாக இராவிட்டால் நம்மையிவ்வாறு செய்யும்படி கேட்கமாட்டாள்” என்று சிந்தித்து அவள் கோரிக்கைப்படி நடக்கவெண்ணியே அங்கு வந்தார்.

67-வது அத்தியாயம்.

இரோட்டிக்கிடங்கில் சதியாலோசனைப்படி நடக்கும் ஏற்பாடுகள்—அரசனைச் சிறைசெய்ய ஆயத்தமாதல்—புதுக்கடையிலிருந்து அரசன் திரும்பிவரல்—ஆபத்து காத்திருக்கும் இடத்தை யரசன் நெருங்கல்—ஆச்சரியமாய் அரசன் தப்பித்துக்கொள்ளல்—அரசனும், பஞ்சநாதம் பிரபுவும், ஜனரல் உக்கிரசேனரும்—அதிசய இரகசியத்தை வெளியிடத் தீர்மானித்தல்.

ஜனரல் உக்கிரசேனர் வரவைக்கண்டதே ஜனங்கள் மிக்க சந்தோஷமும் உற்சாகமுமடைந்து அவரை வாழ்த்திக் கொண்டாடவே அவ்வாறு ஆரவாரம் செய்தார்கள். எங்கும் அந்த ஆரவாரம் பெருஞ்சத்தத்தோடு கிளம்பிக் காதுசெவிடுபடும்படிச் செய்தது. யாவும் கண்டு கொண்டிருந்த அரசன், ஜனங்கள் தன்னைச் சந்தோஷத்தோடு வரவேற்காமல் ஜனரல் உக்கிரசேனரை இவ்வளவு உற்சாகத்தோடு வரவேற்பதைக் கண்டு மனம் பொறுமல், "நான் இவனை யப்போதே மேற்கு நாட்டிற்குச் சென்று விடும்படி செய்துவிட் டிருக்க வேண்டும். ஆயினும் நாளைக்கு அக்காரியத்தை முடித்து விடுவேன்" என்று மெதுவாகப் பக்கத்திலிருக்கும் ஜெயசிங்கனுக்கு மட்டும் கேட்கும்படி கூறினன்.

ஜெயசிங்கன் "நானே அரசனாகவிருந்தால் உடனே அவனுக்களிக்கப்பட் டிருக்கும் இராஜப்பிரதிநிதி உத்தியோகத்தையும் ஜனரல் பதவியையும் பிடுங்கிக்கொண்டு அவனைத் தேசப்பிரஷ்டம் செய்து விடுவேன்" என்றான்.

அரசன்:—பேஷ்! தேசப்பிரஷ்டமா செய்வாய்? நல்ல புத்தி சாலித்தனம்! ஜனங்களிடம் அவனுக்கிருக்கும் இவ்வளவு செல்வாக்கைக்கண்டு! பேஷ்.

ஜெயசிங்கன்:—நன்றி கெட்ட நாய்கள்! அவனுக்கேன் இப்படிக் கூச்சலிட வேண்டும்?

அரசன்;-ஹா! இது பேஷான யோசனை. இப்படித்தான் செய்யவேண்டும்.

ஜேயசிங்கன்:-"என்ன யோசனை? இன்னொரு புது முழு மூடயோசனையோ? அவனை யுடனே முதல் தரப் பிரபு வாக்கிவிடவோ? அல்லது கொஞ்ச நாட்களில் அவனே பிடுங்கிக் கொள்ளவிருக்கும் கிரீடத்தை அவன் பாதங்களிற் பணிந்து இப்போதேகொடுத்து விடவோ?" என்ருன்.

அரசன் சற்றுகோபமடைந்து "நீ என்ன தான் எனக்குப் பின் பட்டத்திற்குச் சுதந்தர முடையவனுயி னும் (எனக்குப் புத்திரனில்லாத வரையில்), இவ்வாறு அத்துமீறிப் பேசத்தகாது. ஹா! ஆம். அதுதான் சரி. அப்படிச் செய்தால் அந்தச் சந்தோஷ கோஷ்ட மனைத் தும் நமக்கே என்று புலப்படும்" என்ருன்.

அச்சமயம் ஜனரல் உக்கிரசேனர் யாவரையும் கடந்து அரசனிருக்கும் மேடைக்கு எதிரில் சென்று விட்டதால், அங்கு தமது புரவியை நிறுத்தி அரசனுக்கும், அவர் தம்பிக்கும் தக்க மரியாதையோடு வந்தனமளித்தார். அரசன் நகை முகத்தோடு தன் ஆசனத்தை விட்டெழுந்து மூன்று நான்கடி முன்னே சென்று, "ஜனரல்! நான் இங்கு வந்து எல்லா வேடிக்கைகளையும் நேர்த்தியான காட்சிகளையும் கண்டாலும் இப்போது உம்மைக் கண்டதால் உண்டான சந்தோஷமே யாவற்றி னும் மிக்க சந்தோஷத்தை யளிக்கிறது. தங்கள் குதிரை யைத் தங்களாளிடம் விட்டு விட்டு இங்கு மேடைமேல் வந்துவிடும். இங்கிருந்து பார்த்தால் எல்லாக் காட்சி களும் நன்ருய்த் தெரிகின்றன" என்ருன்.

ஜனரல் தாம் வந்தகாரியத்திற்கு இது அனுகூலமாக விருப்பதால் அரசனுக்கு வந்தன மளித்து அவ்வாறே போய் அரசன் பக்கத்தில் உட்கார்ந்தார்.

மணி மூன்ருயிற்று. அரசன் அங்கிருந்து நகரத்திற் குத் திரும்பும் சமயமாதலால் பிரயாணத்திற்கு யாவும் ஆயத்தமாயிற்று. அச்சமயம் ஜனரல் உக்கிரசேனருடைய

உத்தியோகஸ்தனான மேஜர் இலக்ஷ்மணன் முன்னமே செய்திருந்த ஏற்பாட்டின் படி மேடையருகில் வந்து ஜனரலுக்கு வந்தன மளித்து, "என்ன காரணத்தாலோ தாங்கள் ஏறிவந்த குதிரை காலில் வியாதியுற்று நிற்க முடியாமல் தத்தளிக்கிறது. தாங்கள் இங்கிருந்து நகரத்திற்குச் செல்வதற்கு என்ன செய்வதோ தெரியவில்லை" என்றான்.

இதைக்கேட்டதே அரசன் "ஜனரல்! இதைப்பற்றி ஒரு கவலையும் வேண்டாம். நமது வண்டியில் எங்கள் இருவரோடு கூட உட்காரத் தங்களுக்குத் தாராளமாக விட மிருக்கிறது தங்களுக்கு இந்த அசந்தர்ப்பம் நேர்ந்ததால் தாங்கள் என் கூடவரும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்ததற்கு நான் சந்தோஷமடைகிறேன்" என்றான். ஜனரல் மிக்க மரியாதையோடு அரசனுக்குத்தக்க விடையளித்தார்.

இப்போது அதேசமயம் இரொட்டிக்கிடங்கில் என்ன நடக்கிறதென்று பார்ப்போம். அன்று பகல் இரண்டு மணிக்குள் கர்னல் இரகுநாதருடைய நண்பர்களனைவரும் அங்கு வந்து கூடிவிட்டார்கள். முதல் நாள் வந்திருந்த அனைவரும் வந்து விட்டார்கள். இச்சமயம் அனைவரும் பூரண ஆயுதபாணிகளாக இருந்தார்கள். ஆனால் யாவரும் கட்டிடத்திற்குள் மறைவிலேயே இருந்தார்கள். மூன்றுமணிக்குமேல் இரொட்டிக்கிடங்கில் வேலைசெய்யும் ஆட்கள் ஒவ்வொருவராகப் பாதையினோரத்திலிருக்கும் தானியக்கிடங்கிற்குள் போய் நுழைந்தார்கள். அவர்கள் அனைவரும் குடியானவர்கள் போல் உடையணிந்து மேலேயொரு பெரிய அங்கி அணிந்திருந்தார்கள். அதற்குள் அவர்கள் ஒவ்வொருவரும் துப்பாக்கி, கத்தி, ஈட்டி முதலிய ஆயுதங்களை மறைத்து வைத்துக்கொண்டிருந்தார்கள்.

பாதை யோரத்தில் ஒரு பெரிய வண்டி தானிய மூட்டைகளை யேற்றிக்கொண்டு நின்றிருந்தது. அதன் கடையாணிகள் கழற்றப்பட்டு வண்டி பாரதச்குக் குறுக்

காகச்செல்லும் விதமாய் நிற்கவைத்திருந்தது. வண்டியை யோட்டும் ஆள் சாட்டியைக் கையில் வைத்துக் கொண்டு குதிரைகளின் பக்கத்தில் நின்றுகொண்டு பாதையைப் பார்த்துக் கொண்டே யிருந்தான். அவன் அவ்வண்டி யில் கட்டி யிருக்கும் குதிரைகளைச்சாட்டியால் ஒரு அடி யடித்தால் அவைகள் ஆத்திரத்தோடு வண்டியை யிழுத் துக்கொண்டு பாதைக்குச்குறுக்கே செல்லும். வண்டி உடனே வழிக்குக் குறுக்கே விழுந்து வழியை யடைத் துக்கொள்ளும். அப்போது தானியக்கிடங்கிலுள்ளோர் வண்டியைத்தூக்கி யப்புறப்படுத்தி அரசர் வண்டிக்கு வழி விட ஆவலோடு வருகிறவர்கள் போல் பாய்ந்து வந்து அரசன் காவலர் முதலியவர்களில் ஒருவர் கூடத் தம் கத்தியை உறையிலிருந்தெடுக்கா முன்னமே யாவ ரையும் பிடித்துக்கொள்ள வேண்டும் என்பது ஏற்பாடு.

கர்னல் இரகுநாதர் முதலியோர் உள்ளே யிருந்து கொண்டு வண்டி தடாலென்று விழும் சத்தத்தைக்கேட்க ஆவலோடு எதிர் பார்த்துக்கொண் டிருக்கிறார்கள். தானி யக்கிடங்கிற்குச் சற்று தூரத்தில் புதுக்கடைக்குச் செல் லும் பாதையில் ஒருவன் நின்றுகொண் டிருக்கிறான். தானியக்கிடங்கின் முன் ஒருவன் நின்று கொண்டு அவ னையே பார்த்துக்கொண் டிருக்கிறான். இரொட்டிக்கிடங் கின் மேல் மாடியில் ஒரு அறையின் சாளரத்தருகில் இரா ஜாம்பாள் நின் பாதையைப் பார்த்துக் கொண்டே யிருக்கிறாள்.

மணி நாலரையாயிற்று. அச்சமயம் பாதையில் தூரத்திலிருப்பவன் இதுகாறும் கிழக்கு நோக்கிப் புதுக் கடை யிருக்கும் பக்கமாய்த் திரும்பி நின்றிருந்தவன், சட்டென்று திரும்பி தானியக்கிடங்கைப் பார்த்தபடி நடந்துவரத் தொடங்கினான். இதுவே தூரத்தில் அரசன் வண்டி வருகிறதென்பதைக் காட்ட வேண்டிய குறி யென்று ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது. உடனே தானி யக்கிடங்கின் முன் இருந்தவன் அதற்குள்ளிருப்பவர் களுக்கு “அரசன் வண்டி வருகிறது” என்று மெதுவாக

எச்சரிக்கை செய்து விட்டான். இவை யாவும் சாக்கிரதையாகக் கவனித்துக்கொண் டிருந்த வண்டிக்காரன் ஜாட்டியைக் கரத்திற் பிடித்துக் கொண்டு குதிரைகளின் அருகில் சென்று நின்றான். இரொட்டிக் கிடங்குக்காவலறையின் முன் நின்றுகொண் டிருந்தவன் உள்ளே சென்று கர்னல் முதலியவர்களிடம் சங்கதியையறிவித்து விட்டான்.

இப்போது அவர்களுக் குண்டாயிருக்கும் மனப் பதைப்பு சொல்லத்தரமானதன்று. ஆச்சு இவர்கள் செய்த பெரு முயற்சிகளனைத்திற்கும் பலன் கிடைக்கும் வேளை நெருங்கி விட்டது. இன்னும் இரண்டொரு நிமிடங்களில் அரசன் இவர்கள் கையில் சிக்கிக்கொள்வான். ஆனால் தற்செயலாக நேரிடும் அற்பவிஷயத்தால் காரியம் கைகூடாமற்போனாலும் போகும். ஒரு சமயம் காரியம் தவறிப்போவதோடு சங்கதி தெரிந்துபோய் அவர்களனைவர்க்கும் பிராணபத்தாய் முடிந்தாலும் முடியும். ஆகையால் அவர்கள் மனம் மிக்க துடிப்போடும் குழப்பத்தோடுமிருக்கிறது. தானியக்கிடங்கி லிருப்போரும் மனப் பதைப்போடு மறைவில் எச்சரிக்கையாக நின்றுகொண் டிருக்கிறார்கள். யாவரும் இப்போது ஆவலோடு வண்டி விழும் சத்தத்திற்காக எதிர் பார்த்துக்கொண் டிருக்கிறார்கள். மாடிமேலிருக்கும் இராஜாம்பாள் அரசன் வண்டி வருவதைப் பார்த்ததும் மிக்க திகிலும் சந்தேகமும் கொண்டு பிரமையோடு அதையே உற்று நோக்கியபடி யிருக்கிறாள். அவள் மேலிருந்து பார்ப்பதால் வண்டியிலிருப்பவர்களைக் காண முடியாது. அக்காலத்திலிருந்த வண்டி மேலே மூடி யுடையது. பக்கங்களிலுள்ள சாளரங்களின் வழியாக மட்டுமே யுள்ளிருப்பவர்களைக் காணலாகும். ஜனரல் உக்கிரசேனர் தான் கோரியபடி அரசன் வண்டியில் வருகிறாரோ இல்லையோ என்பது இராஜாம்பாளுக்குப் பெருங் கலக்கமாக விருந்தது. முதலாவது அவர் திருவிழாவிற்குச் சென்றிருக்கவேண்டும். இரண்டாவது அரசன் வண்டியில் அவருக்கு இடங்கிடைக்க

வேண்டும். கொஞ்சம் தவறினால் தன் தமையனுதி யோர்க்குப் பெருந்துன்பமாக முடியும். இதனால் அம் மாது மிக்க மனோவேதனையி லிருந்தாள்.

ஆச்சு, அரசன் வண்டி கிட்டக்கிட்டத் தானியக் கிடங்கை நெருங்கி விட்டது. ஆச்சு, மூட்டை வண்டி நிற்குமிடத்தை நெருங்கி வருகிறது. அவ் வண்டியினருகில் நிற்பவன் அரசன் வண்டிக்குள் அதன் சாளரவழியாய் உற்றுப்பார்க்கிறான். அவ்வண்டியில் அரசன் வருகிறானா, கூட அரசனுடைய சகோதரன் இருக்கிறானா என்பதைப் பார்த்துககொண்டே எதுவும் செய்யவேண்டும் என்று அவனுக்குக் கட்டளை யிடப்பட்டிருக்கிறது. அவன் உற்று நோக்கிக்கொண்டிருக்கையில் அரசன் வண்டி வேகமாக வந்துகொண் டிருக்கிறது. ஆச்சு இன்னும் இரண்டு மூன்று விநாடிகளில் சுமைவண்டி நிற்குமிடத் தைத் தாண்டிவிடும். அச்சமயம் அரசன் வண்டிக்குள் பார்த்துக் கொண்டிருந்தவன், அதில் அரசனும் அவன் சகோதரனு மிருப்பதைக் கண்டு ஜாட்டியை யோங்கக் கரத்தைத் தூக்கினான்; அதற்குள் அரசன் எதிர்ப்பக்கம் இருக்கும் இன்னொரு உருவத்தைக் கண்டதும் பூதத் தையோ பிரம்மாண்டமான பயங்கர உருவத்தையோ கண்டவன் போல் முகம்வெளுத்துப் பெருந்திகிலடைந்து மரம்போல் நின்று விட்டான். அவன் கரத்திலிருந்த ஜாட்டி நழுவிவீழ்ந்ததுகூட அவனுக்குத் தெரியாது. அவன் மனம் இரண்டு நிமிடங்கள் வரை சலன மின்றி ஸ்தம்பித்துவிட்டது. தானியக்கிடங்கி லிருப்போரும், கர்னல் முதலியவர்களும் திகைத்தார்கள். அரசன் வண்டி அந்த விடத்தைக் கடந்து, இரொட்டிக் கிடங்கின் எல்லை யையும் கடந்து சென்றது.

அதைக்கண்ட இராஜாம்பாள் உடனே கீழே முழங் காற்படி யிட்டுக் கடவுளைப் பிரார்த்தித்து வாழ்த்திப் போற்றினாள். தானியக்கிடங்கி லிருந்தோர், ஒருவர் இருவராய் அங்கிருந்து வெளிப்பட்டார்கள். அரசன் வண்டி கண்களுக்கு மறைந்தபின் கர்னல் இரகுநாதர் தன்

நண்பர்களை நோக்கி "ஏதோ அசந்தர்ப்பத்தால் அரசன் வண்டியில் வரவில்லை போல் காண்கிறது. ஆபினும சங்கதி வெளியாகவில்லை. இன்னொரு சமயம் நமது எண்ணத்தை நிறைவேற்றிக்கொள்ளலாம். இனி நீங்களெல்லாம் ஆயுதங்களையும் மாறு உடைகளையும் களைந்து விட்டு அவரவர்கள் உடைகளை யணிந்துகொள்ளுங்கள்" என்று கூறிவிட்டு, அங்கிருந்து வெளிப்பட்டுச் சுமை வண்டியிருக்குமிடத்தை நோக்கி வந்தார். வண்டி யருகிலிருந்த மனிதனுடைய திகிலும் திகைப்பும் இன்னும் பூரணமாக நீங்கவில்லை. கர்னல் இரகுநாதர் அவனை நோக்கி, "ஏன் இப்படி மிரட்சியோடு விழிக்கிறாய்? இப்போது அரசன் அவ்வண்டியில் வராததால் இச்சமயம் நமது முயற்சி தவறி விட்டது. ஆயினும் இன்னொரு சந்தர்ப்பம் வாய்க்கும்" என்றார்.

அந்த ஆள் திகிலோடு "எஜமானே! அரசர் வண்டியிலிருந்தார்" என்றான். இதைத் கேட்டதே கர்னல் மிக்க கோபமடைந்து "அடத்துரோகி! நீ வேண்டுமென்றே துரோகம் செய்தாய். அல்லது நீ பெரிய இழிவான கோழைப்பயல்" என்றார்.

ஆள்காரன் "எஜமானே! நான் துரோகியுமல்ல. கோழையுமல்ல. அரசரோடு வேறொருவர் இருந்தார்" என்றான்.

கர்னல் பின்னும் கோபமடைந்து, "ஆம் மூடனே! அரசனோடு அரசனுடைய சகோதரன் இருந்தான். அவன் இருப்பானென்றும் அவனையும் பிடித்துக்கொள்ள வேண்டுமென்றும் தானே நாம் ஏற்பாடு செய்திருந்தோம்" என்றார்.

வேலையாள்:—அரசன் தம்பி மட்டுமல்ல. இன்னொருவர் இருந்தார்.

கர்னல்:—இன்னொருவரா? யார்?

வேலையாள்:—"ஜனரல் உக்கிரசேனர்" என்றான்.

இதைக் கேட்டதே கர்னல் இரகுநாதர் அந்த வேலைக்காரனை விட அதிக வியப்பும், பிரமையும் அடைந்து

சற்று நேரம் அசையாமல் நின்று, பிறகு "சரி நீ வண்டியைச் சீக்கிரம் பாதையினின்று அப்புறப்படுத்து" என்று கூறிவிட்டுக் காவற்கிடங்கிற்குச் சென்று தன் நண்பர்களிடம் சங்கதியைக் கூறினர். யாவரும் ஆலோசித்துக் கடைசியில் "ஜனரல் உக்கிரசேனர் எப்படியோ தற்செயலாக அரசன் வண்டியில் ஏறிவர நேர்ந்தது. ஆயினும் நமது சங்கதியைப்பற்றிச் சந்தேகமுண்டாகவில்லை. எப்படியும் இன்னொரு சந்தர்ப்பம் வாய்க்கும்" என்று அவர்களுக்குள் சமாதான மடைந்தார்கள்.

* * * *

மறுநாள் பகல் ஒருமணி யிருக்கும். அச்சமயம் அரசன் தன் இரகசிய அறையில் உட்கார்ந்து கொண்டு யாருடைய வரவிற்கோ எதிர் பார்த்துக் கொண்டிருந்தான். அரசன் முகத்தில் ஒரு தீர்மானமான யோசனையுடையவன் போன்ற குறி இருந்தது. சற்று நேரத்திற்குள் நமது உலகநாயகன் அம்மானுகிய பஞ்சநாதம் பிரபு அரசனைக் காணவந்தார்.

பஞ்சநாதம் பிரபு அரசன் முகத்தைக் கண்டதே, அரசன் ஆழ்ந்தயோசனையில் இருப்பதாகவும், ஏதோ ஒரு தீர்மானங்கொண்டு துணிகரமாக ஒன்றைச் செய்யக் கருதி யிருப்பவன்போல் காணப்படுவதாகவும் உணர்ந்து, பேசாமல் உட்கார்ந்தார். அரசன் அவரை நோக்கி "பிரபுவே, இது காறும் நாம் மிக்க ஜாக்கிரதையாய் மறைத்து வைத்திருந்த பெரிய இரகசியம் நடக்கும் இந்த நாழிகையில் வெளியிடப்படப் போகிறது என்றே நான் நம்புகிறேன்" என்ருன்.

பிரபு மிக்க ஆச்சரியமடைந்து "அரசே! அந்த இரகசியம்! தங்கள் சொந்த இரகசியம்! அதைத் தாங்கள் பிரியப்படி செய்யலாம்" என்றார்.

அரசன் "அது என்னுடையது மட்டுமல்ல. இன்னொருவருக்கும் தெரிந்திருக்கிறது. அது எப்படி அந்த ஆளுக்குத் தெரிந்ததோ அது தெரியவில்லை" என்ருன்.

பிரபு:—ஆம். அன்று மதனம்பாள் சீமாட்டி வீட்டில்

விருந்து நடந்தபோது மாந்திரீகன் வேடமணிந்த ஒருவன் தங்கள் செவியில் அந்த இரகசியத்தைக் கூறினனென்றும், பிறகு அவன் ஜனரல் உக்கிரசேனர் என்று தெரிந்த தென்றும் கூறியது கவனமிருக்கிறது. அச்சமயம் அந்த இரகசியம் என்னால் யாருக்கேனும் வெளியிடப்பட்டதோ வென்று தாங்கள் என்மேல் சந்தேகங் கொண்டீர்கள்'' என்றார்.

அரசன்:—''பேஷ். அத்தகைய சந்தேகம் உண்டாவது சுபாவந்தானே. ஆயினும் பிறகு நான் உம்மேற் கொண்ட சந்தேகம் தவறென்று கூறிவிட்டேனல்லவா'' என்றான்.

பிரபு:—''ஆம். அதற்காக நான் மிக்க நன்றியுடையவனாக விருக்கிறேன்'' என்றார்.

அரசன்:—''ஆயினும் அந்த இரகசியம் எப்படி ஜனரல் உக்கிரசேனனுக்குத் தெரிந்தது? அந்த இரகசியம் அறிந்தவர்கள் நால்வரே. நான், பாஞ்சால நாட்டிலிருந்த போது என்னிடமிருந்த என் இரகசிய வேலைக்காரி, நீர், உமது மனைவி ஆக நால்வரே. அவர்களில் அந்த வேலைக்காரி இராஜாம்பாள் பிரசவித்த சில தினங்களுக்குள் மரித்து விட்டாள். என் வரையில் நான் ஒருவருக்கும் அதைக் கூறவில்லை. மீதியிருப்பது நீரும் உமது மனைவியுமே. நீர் துரோகம் செய்யவில்லை'' என்றான்.

பிரபு மிக்க மனத்துயரோடு ''அரசே! அப்போது தாங்கள் கேட்கும்போது நான் கூறமுடியாமலிருந்த இரகசியத்தை யிப்போது தங்களுக்கு வெளியிடுகிறேன். அது பழைய மனப்புண்ணைக் கிளறுவதாக விருந்ததால் நான் அப்போது கூறவில்லை'' என்றான்.

அரசன்:—நண்பரே! உமக்கு மனவியாகூலத்தை யுண்டாக்க எனக்கு விருப்பமில்லை. ஆயினும் இந்த இரகசியம் எப்படி வெளியாயிற்றென்பதே யெனக்கு விளங்கவில்லை.

பிரபு:—''அரசே! நான் கூறுகிறேன் கேளுங்கள். முன்

தாங்கள் கேட்டபோது என் வாயினின்று அது வெளியாகவில்லை யென்று நான் கூறியது உண்மை. ஆனால் என் மனைவியும் அதை வெளியிட்டிருக்க மாட்டாள் என்று நான் கூறியது பொய். அவள் எனக்குத் துரோகம் செய்தாள். என்னைத் துரோகம் செய்தது மட்டுமல்ல. தங்கள் இரகசியத்தையும் வெளியிட்டு விட்டாள்.

சுமார் பதினெட்டு வருடங்களுக்கு முன் பொன்னுசாமி என்ற வாலிபன் ஒருவன் ஒருநாள் எனது வீட்டிற்கு விருந்தாளியாக வந்தான். அவன் நல்ல அழகுடையவன். பாலியனாயினும் நல்ல புத்திக் கூர்மையுள்ளவன். கல்வி யுடையவன். அவன்மேல் எனக்குப் பிரியமுண்டாகவே நான் அவனைச் சில மாதங்கள் என் வீட்டிலேயே வைத்திருந்தேன். என் மனைவி விஷயத்தில் எனக்குப் பூரண நம்பிக்கை யிருந்தபடியால் இவர்களுக்குள் நேசமுண்டாயிருப்பதை நான் கவனிக்கவில்லை. ஒருநாள் நான் தற்செயலாய் என் மனைவியினறைக்கு எதிரிலிருந்த தாழ்வாரத்தின் வழியாய்ச் சென்றபோது அவளும் பொன்னுசாமியும் பேசிக்கொண்டிருந்தது என் செவியில் விழுந்தது. அப்போது என் மனைவியின் வாயினின்றும் வந்த வார்த்தைகளால் அவள் எனக்குத் துரோகம் செய்துவிட்டாள் என்று எனக்கு விளங்கிவிட்டது. அதே சமயம் தங்கள் இரகசியத்தையும் அத்துரோகி இரண்டு மூன்று மாதங்கட்கு முன்பே தன் வாலிபக்கள்ளக் காதலனுக்கு அறிவித்து விட்டிருக்கிறாள் என்றும் தெரிந்தது. அதை யின்னொருவருக்குக்கூற அவனுக்குப் போதுமான அவகாச மிருந்திராது" என்றார்.

இதைக்கேட்டதும் அரசன் மனதில் ஒரு விஷயம் தோன்றியது. அவன் பிரபுவை யுற்று நோக்கி "அந்தத் தினத்திற்குப் பிறகு அவன் அதை வெளியிட ஏன் அவகாசமில்லாமற் போயிற்று?" என்று வினவினான்.

உடனே பிரபுவின் முகத்தில் திகிலும் பெருங் கலவரமும் தோன்றின. அடா! நாம் முட்டாள் தனமாய்

அப்படியுண்மை குறிப்பாகப் புலப்படும்படி கூறிவிட்டோமே, இப்போது என்ன செய்வதென்று மிக்க கலக்கமடைந்து விழித்தார்.

அரசன் அவர் கலக்கத்தை யுணர்ந்து "பிரபுவே! நெடுநாளாக நீர் நமக்குச் செய்திருக்கும் உதவிகளை நோக்கத் தமது வாக்கினின்றும் தவறி வந்து விட்ட வார்த்தைகளால் நாம் ஊகிக்கக்கூடிய குற்றத்திற்காக உமக்கு ஒரு தீங்கும் செய்யக்கருதோம். மேலும் உமக்கு அவமானத்தை யுண்டாக்கியவன்மேல் நீர் வஞ்சந் தீர்த்துக்கொள்வது சுபாவமே. எதையும் அஞ்சாமற் கூறும்" என்றான்.

பிரபு:—"அரசே! அப்போது எனக்குண்டான கோபத்தால் அவன் பிராணனை யிழந்தாலேயென் மனம் திருப்தியடையும்போலிருந்தது. ஆகையால் அவன் மரண தண்டனை யடைந்தான். அதன் பிறகு என் மனைவி மரணபரியந்தம் ஒரு அறையில் அடைக்கப் படும்படி செய்தேன். அந்த ஜனரல் உக்கிரசேனர் இதில் பிரவேசிக்காமலிருந்தால் அவள் இன்னும் சிறையிலேயே யிருப்பாள்" என்றார்.

அரசன்:—ஜனரல் உக்கிரசேனருக்கு என் இந்த விஷயத்தில் சிரத்தையுண்டாயிற்று? அவர் அந்தப் பொன்னுசாமியை யறிவாரோ?

பிரபு:—எனக்குத் தெரிந்த வரையில், அன்று கர்னல் இரகுநாதன் எனக்குக் கொடுக்கவேண்டிய கடனை வாங்க நான் இரொட்டிக்கிடங்கிற்குச் சென்றிருந்த போது அங்கு தான் முதல் முதல் பார்த்தேன்.

அரசன்:—இது ஆச்சரியமே. இப்போது அந்த ஜனரல் வருவார். அவரைக் கேட்டு எப்படியாவது இதை யறியவேண்டும்.

பிரபு:—ஜனரல் உக்கிரசேனர் இங்கு வருவாரா?

அரசன்:—"ஆம். இரண்டு மணிக்கு வரும்படி கூறியிருக்கிறேன். ஆச்சு இரண்டடிக்க இரண்டொரு நிமிடங்களே யிருக்கின்றன. ஆச்சு, அவர் வருகிறவேளை

தான். அவர் நியமித்த காலந்தவிராது எதையும் செய்பவர்'' என்ருன்.

அரசன் அவ்வாறு கூறி வாய் மூடியதும் வாயில் காப்போன் வந்து கனம் ஜனரல் உக்கிரசேனர் அவர்கள் வந்திருக்கிருர்கள் என்ருன். மறுநிமிடம் ஜனரல் அறைக்கு வந்தார்.

முன்பு இரொட்டிக்கிடங்கில் ஜனரல் உக்கிரசேனர் பஞ்சநாதம் பிரபுவைக் கண்டபோது அவர் முகத்தை நன்ருய்ப் பார்க்காமலும் அவரிடம் தாராளமாகப் பேசாமலுமிருந்தார் என்று கூறியிருக்கிருேம். மேலும் அவரைக் கண்டதே ஜனரலின் முகத்தில் ஒருவித கலக்கமும் அருவருப்புமான விகாரமுண்டாயிற்றென்றும் கூறியிருந்தோம். இப்போதும் பஞ்சநாதம் பிரபுவை யங்கு கண்டதும் ஜனரலின் முகத்தில் அதே மாதிரியான விகாரமுண்டாயிற்று.

அரசன் அவரை நோக்கி "ஜனரல்! இப்போது நடக்கப் போகும் இரகசிய விவகாரத்தை, இந்தஇரகசியத்தை நெடுங்காலமா யறிந்தவராகிய நமது நண்பர் பஞ்சநாதம் பிரபுவின் முன்னிலையிலேயே செய்வது தகுதி யென்று எனக்குப் புலப்பட்டதால் இவரையும் இங்கு வரச்செய்தேன்'' என்ருன். அதன் மேல் ஜனரல் பிரபுவுக்கும் வந்தன மளித்து உட்கார்ந்தார். அரசன் அவரை நோக்கி "தாங்கள் தனியாக வரவில்லையே?'' என்ருன்.

ஜனரல்:—இல்லை மகாராஜா; இதில் முக்கியமாகச் சம்பந்தப்பட்ட ஆசாமியைக் கூடவே யழைத்து வந்து முன் கட்டில் ஒரு அறையில் உட்காரவைத்திருக்கிறேன். அந்த ஆளுக்கு முழு உண்மையையும் கூருவிடினும் தன்னைப்பற்றி ஏதோ விசேஷ சங்கதி நடக்கப்போகிறது என்ற வரையில் உணரும்படிச்செய்திருக்கிறேன்.

அரசன்:—இப்போது அந்த ஆளுக்கு இச்சங்கதி முன்ஞடி அறிவிக்கப்படவேண்டுமே. அதுவும் பக்குவமாகப் படிப்படியா யறிவிக்கப்படவேண்டுமே,

அக்காரியம் பிரபுவின் மூலமாக நடத்தப்படலாமா தங்கள் மூலமாக நடத்தப்படலாமா?

ஜனரல்:—அரசே! அக்காரியத்தை யொழுங்காய் முடிப்பது என் பாரம். நானே அதைச் செய்து முடிக்கிறேன்.

அரசன்:—ஆனால் இடையிடையில் சில நியாயங்கள், தகவல்கள், விவரங்கள் முதலியவைகள் கூறவேண்டியவை யிருக்கின்றனவே.

ஜனரல்:—"அரசே! கூறவேண்டிய எல்லாவிஷயங்களும், இது சம்பந்தமான எல்லா விவரங்களும் எனக்குத் தெரியும்" என்றார்.

இதைக்கேட்ட அரசனும் பிரபுவும் மிக்க வியப்படைந்து திடுக்கிட்டார்கள். அரசன் "எல்லாம் தங்களுக்குத்தெரியுமா? ஜனரல்! தாங்கள் முழு மர்மத்தையும் உடைத்து இது எப்படித் தங்களுக்குத் தெரிந்ததென்பதைக்கூறவேண்டும்" என்றான்.

ஜனரல் சற்று சிந்தித்துத் திடீலென்று ஒருவித உற்சாக மடைந்து தட்டென்றெழுந்து அரசரையும் பிரபுவையும் நோக்கி "ஆம். ஆம். இன்று எல்லா மர்மங்களும் வெளிவந்து விட வேண்டியதே. இது ஒரு விசேஷதினமாகக்கருதப்படவேண்டும். நான் ஆவலோடு காத்திருக்கும் அவ்வாலிபன் மனம் நிம்மதியடையும்படி இவ்விவகாரத்தை முடித்து விட்டதும், இந்த இரகசியம் எனக்கு எப்படித் தெரிந்ததென்ற விவரத்தை யுங்கள் இருவருக்கும் கூறி விட்டே செல்கிறேன்" என்றியம்பி, அரசன் விடைக்கு எதிர்பாராமல் அறையை விட்டுச் சென்றார்.

68-வது அத்தியாயம்.

ஜெனரல் உக்கிரசேனர் உலகநாயகனது பிறப்பைப்பற்றிய பெரிய இரகசியத்தை யவனுக்கறிவித்தல்—தந்தையும் மகனும் சந்தித்தல்—ஜனரல் உக்ரசேனரைப்பற்றிய அபூர்வமான பூர்வசரித்திரம்—அனேக மர்மங்கள் வெளியாதல்.

ஸர்தார் உலகநாயகன் ஜனரலின் வருகைக்காக மிக்க ஆவலோடு எதிர் பார்த்துக்கொண்டு, அவர் விட்டுப்போன அறையில் உட்கார்ந்திருந்தான். அவனுக்குத் தன் பெற்றோரைப்பற்றிய விவரம் ஒன்றுமே தெரியாது. பஞ்சநாதம் பிரபு நீ என் தங்கை புதல்வன் என்று மட்டும் கூறினரே யன்றி அவன் தன் பெற்றோரைப்பற்றிக் கேட்டபோதெல்லாம் அவர் அச்சம்பாஷணையை விட்டு விட்டு வேறு சம்பாஷணைகளால் அதை மறைத்துக் கொண்டு வந்தார். இப்போது ஜனரல் கூறிய சில விஷயங்களால் அவன் மனதில் பல சந்தேகங்களுதித்ததால் அம்மனம் பெருங்கலகத்தில் அலைந்துகொண் டிருந்தது. ஜனரல் இப்போது அறைக்குள் வந்ததே உலகநாயகன் மிக்க ஆவலோடு அவர் முகத்தை நோக்கினன். அவர் முகக்குறியால் அவர் கொண்டு வந்த சமாசாரம் துயரமானதல்ல வென்றும் ஆனல் மிக்க விசேஷமான தென்றும் மட்டுமே அவனுக்குப்புலப்பட்டதன்றி வேறொன்றும் விளங்கவில்லை.

ஜனரல் அவனருகிலுட்கார்ந்து "என் அன்பார்ந்த நண்பனே! இப்போது மிக்க விசேஷமான ஒரு இரகசிய சமாசாரத்தை யுன்னிடம் கூறப்போகிறேன். நீ மன அமைதியோடு சாவதானமாக முழுமையும் கேட்கவேண்டும். இடையில் ஆத்திரத்தால் கோபம், துயரம், முதலிய எவ்வித உணர்ச்சியையும் வெளியிடாமல் பொறுமையோடு கேட்கவேண்டும். அன்று மதனம்பாள் சீமாட்டி

யின் மாளிகையில் நான் உன்னை முதல் முதல் சந்தித்த போது, உன்னிடம் எல்லா இரகசியங்களையும் ஒளியாது வெளியிடும் காலம் வரும் என்று தெரிவித்தேனல்லவா. அந்த வேளை யிப்போது வந்து விட்டது. ஆனால் அதைக் கூறு முன் இராஜாம்பாளுடைய சங்கதியைப் பற்றிக் கூற வேண்டும். இராஜாம்பாள் தன் தந்தையைப் பிரிந்து ஒரு மூதாட்டியிடம் இருக்கும்போது, அப்போது பெரிய கட்சியாருக்குப் பயந்து பாஞ்சால நாட்டிற்குச் சென்று அங்கு வசித்துக்கொண்டிருந்த நமது அரசன், இங்கு தன் கட்சியின் நிலைமை யெப்படி யிருக்கிறதென்றறிய மாறு வேடம் பூண்டு வந்திருந்தான். அச்சமயம் இராஜாம்பாளைக்கண்டு காதல் கொண்டதும், பிறகு அவளைப் பாஞ்சாலநாட்டிற்கு அழைத்துச்சென்றதும், அங்கு அவள் ஒரு ஆண்மகவைப் பெற்றதும் உனக்குத் தெரிந்த சங்கதியே. அம்மாது உலக அனுபவ மறியாததாலும், தன் காதலன் கூறிய வார்த்தைகளைப் பூரணமாய் நம்பியதாலுமே தன் கற்பை யிழந்தாளன்றிக் கற்பில்லாத தன்மையாலல்ல.

அரசன் அவளைத் தனது நம்பிக்கையான ஒரு வேலைக்காரியிடம் விட்டு விட்டு, அச்சமயம் தன் போல் பெரிய கட்சிக்குப் பயந்து பருதிபுரத்தில் வந்து வசித்திருந்த தன் நண்பர் ஒருவரிடம் சென்று பணம் கொண்டு வரப்போயிருந்தார். இராஜாம்பாள் அவனைத் தூஷித்துத் தொந்திரவு செய்யத்தொடங்கினாள். முன்னமே இராஜ்ஜியத்தை யிழந்து மனோ வியாகூலத்திலிருக்கும் அரசன் அவற்றைச் சகிக்க முடியாமலே பருதிபுரம் சென்று இராஜாம்பாள் கஷ்டமின்றி சீவனம் செய்வதற்குப்போதுமான பணத்தைச் சேகரம் செய்து கொண்டு அவளிடம் திரும்பி வந்தான். அப்போது இராஜாம்பாள் பிரசவித்துச் சன்னி பிறந்து பிதற்றிக்கொண்டிருந்தாள். இரண்டொரு சமயம் தன் குழந்தையைக் கொன்றுவிடப் பார்த்தாள். அரசன், தான் கொண்டு வந்த பணத்தைத் தன் வேலைக்காரியிட மளித்து இரா

ஜாம்பாள் புத்திசுயாதீன மடைந்ததே யவளிடமளிக்கும் படி கூறி விட்டுச் சென்றான்'' என்றார்.

உலகநாயகன்:—நமக்குத் தெரிந்தவரையில் அத்தொகை அந்தம்மாளிடம் சேரவே யில்லை யென்று தெரிகிற தல்லவா?

ஜனரல்:—''ஆம். அது சேரவில்லை. அப்பணம் வேலைக் காரியின் கையில் வந்த இரண்டாவது நாளே அவள் திடீலென்று பாரிசவாயுவால் மரித்தாள். அதை யவள் இராஜாம்பாள் புத்தி சுயாதீனமடைந்த பின் கொடுக்கக் கருதி யிருந்தாளோ அல்லது மோசம் செய்யக் கருதி யிருந்தாளோ நாம் கூறமுடி யாது. ஆனால் அவள் இறக்கும்போது அத்தொகை யவளிடமே யிருந்திருக்கவேண்டும். அவளுக்குச் சிகிச்சை செய்த வைத்தியரோ அல்லது சவத்தைப் பெட்டியி லடக்கம் செய்தவர்களோ அதை யெடுத் துக்கொண்டார்கள் என்பது நிச்சயம். அச்சங்கதி அரசனுக்கு இன்னும் தெரியாதென்று நான் திட்ட மாகக்கூறுவேன்.

இராஜாம்பாளுக்குப் புத்தி சுயாதீனத்திற்கு வந்த போது வேலைக்காரி யன்றுதான் இறந்தாள் என்றறிந்து கொண்டதோடு, வைத்தியரின் மூலமாகத் தான் சன்னியி லிருந்தபோது குழந்தையைக் கொல்ல முயன்றதால் தன் காதலனே தன் குழந்தையை யெடுத்துக்கொண்டு போய் விட்டானென்றும் அறிந்தாள். அந்த வேலைக்காரி தன் எஜமானுகிய அரசருடைய இரகசியத்தை வெளியிட வில்லை. ஆனால் 'உன் காதலன் உனக்குக் கூறி யிருக்கும் பொன்னுசாமி என்ற பெயர் பொய்ப் பெயர்' என்று மட்டும் இராஜாம்பாளுக்குக் குறிப்பாகக் கூறி யிருந்தாள். நண்பனே! அக்குழந்தையை யெடுத்துச் சென்ற அரசன் அதைக் கொண்டு போய் நான் முன் கூறிய தன் நண் பன் வசத்தில் ஒப்பித்தான். நண்பனே! அரசன் சினேக னை அந்த ஆள் நமது பஞ்சநாதம் பிரபுவே'' என்றார்.

இதைக்கேட்டதே உலகநாயகன் தேகத்தில் ஒரு

மின்சாரச்சக்தி பாய்ந்ததுபோ லிருந்தது. முன்பு தனக்கு அதிசயமாகவும் சந்தேகமாகவும் தோன்றிய பல விஷயங்களும் ஏககாலத்தில் மின்னல் போல் அவன் மன திற்பட்டன. தான் தன் பெற்ருேரைப் பற்றிக்கேட்ட போதெல்லாம் பஞ்சநாதம்பிரபு சரியான பதில் கூருமல் விட்டுவிட்டதும், அரசன் தன்னை மதனும்பாள் மாளிகை யிற் கண்டபோதே அவனுக்குத் தன் மேல் அன்புண் டானதும், பிறகு தான் பெரியகட்சியைச் சேர்ந்தவன் மகளை மணம்புரிய வொட்டாமல் தடுக்கப் பிரமாதமான முயற்சியெடுத்துக் கொண்டதும், அதைப்பற்றித் தன்னி டம் பேசியமாதிரியும், கடைசியில் தான் அதற்கிணங்கா தது கண்டபோது தன்னை விடுதலை செய்து விட்டதும் யாவும் அவன் மனதிற்கு வந்தன. கடையில் இராஜாம் பாளுக்கும் அரசனுக்கும் பிறந்த புத்திரன் நாமே யென்று அவன் மனதில் ஐயமறப் புலப்பட்டு விட்டது.

உலகநாயகன் முகத்தில் உண்டான மாறுதலைக்கண் டதே ஜனரல் அவன் உண்மையை யறிந்து கொண்டான் என்று உணர்ந்து,

"நண்பனே! உன் மனதிற்பட்டது உண்மையே. உன் தந்தையாகிய அரசரின் அனுமதி பெற்றே யிதை நான் உன்னிடம் கூறுகிறேன். நீ கலக்கப்படாமல் யாவும் கேட்டுக்கொள். இந்த இரகசியம் நாளைக்கு உன் தாயா ருக்கும் கூறப்படும். இதற்காகவே அவர்களை யெல்லாம் இரண்டு மூன்று நாட்கள் என் மாளிகையில் வந்திருக்கும் படி கேட்டுக்கொண்டேன்" என்ருர்.

உலகநாயகன் உடனே தன் துயரத்தை யடக்கமுடி யாதவனுய் "அய்யோ என் தாயே! நீ எவ்வளவு துன் பத்தை யனுபவித்தாயோ!" என்று தேம்பித் தேம்பி யழத்தொடங்கினுன்.

ஜனரல் அவனுக்குத் தேறுதல் கூறியதோடு, அவன் தன் தந்தைமேல் வெறுப்பாவது கோபமாவது கொள்ளா திருக்கும் வண்ணம் தக்க சமாதானமான வார்த்தைகளைக் கூறிக் கடைசியில், "என் அன்பார்ந்த நண்பனே! உன்

தந்தை வாலிபவயதால் எவ்வளவு தவருக நடந்துகொண் டாலும், இப்போது அதற்குத் தன்னல் கூடிய பரிகாரம் செய்யவே துணிந்திருக்கிறார். இந்த இரகசியத்தின் ஒரு பாகத்தை நீதிச்சபையில் பகிரங்கமாகக் கூறும்படி செய் தது நானே. அதனல்தான் இப்போது அரசர் இவ்வாறு நடந்துகொள்ளத் தூண்டப்பட்டார். உன் தாய்க்கு அப்போது மனவியாகூலம் தோன்றினும், முடிவில் அவ ளுடைய மனப்புண் ஒருவாறு ஆறுவதற்கு ஏதுவாகும். நான் முன்னமே யிதை யுன்னிடம் கூறி யிருந்தால் உன் தந்தைமேல் உனக்கு வெறுப்பும் கோபமுமே யுண்டா யிருக்கும்'' என்ருன்.

உலகநாயகன் ''ஆ! என் அருமையான போஷகரே! தாங்கள் என் சிறுவயதிலேயே யென்னை யறிந்திருப்ப தாகக் கூறினீரல்லவா? எனக்கு அது நினைப்பில்லையே'' என்ருன்.

ஜனரல்:—ஆம். நண்பனே! உனக்கு ஐந்து ஆறு வய திருக்கும்போதே நான் உன்னை யறிவேன் என்பது உண்மையே.

உலகநாயகன்:—''ஆ! இது மிக்க வியப்பே. நான் அவ் வளவு சிறுவனுக விருக்கும்போது நடந்த மற்ற விஷயங்கள் எனக்குக் கவனமிருக்கும்போது தங் களைப்பற்றிமட்டும் கவனமில்லாமற் போனது மிக வும் வியப்பாகவே யிருக்கிறது. எனக்கு எல்லாரை யும்விட ஒருவரைப் பற்றிமட்டும் நன்ருய்க் கவன மிருக்கிறது. அதாவது நான் சிறுவனுக இருக்கை யில் ஒருவர் அங்குவந்திருந்தார். அவர் என்மேல் மிக்க பட்சமாக விருந்தார். என்னேடு விளையாடு வார். அவர் எனக்குப் பந்தாடவும், படகு ஓட்டவும், நீந்தவும், மல்யுத்தம் செய்யவும், குதிரைச் சவாரி செய்யவும் கற்றுக்கொடுப்பார். ஆ! அவர் மிக்க நல் லவர். அவரைப்பற்றி நான் மிக்க பட்சத்தோடு அடிக்கடி இப்போதும் நினைத்துக்கொண் டிருக்கி

றேன். அவர் பெயர் பொன்னுசாமிப்பிள்ளை" என்றான்.

இம்மொழிகளைக் கேட்டதே ஜனரல் உக்கிரசேனர் முகம் வேறுபட்டது. அவர் சட்டென்று முகத்தைத் திருப்பிக்கொண்டு, "இருக்கட்டும், அப்புறம் பேசிக்கொள்ளலாம். நேரமாயிற்று. உன் தந்தை மிக்க ஆவலோடு காத்துக்கொண்டிருக்கிறார். எழுந்துவா" என்று கூறி அவனை யழைத்துக்கொண்டு அரசனும் பிரபுவு மிருக்கும் அறைக்குச் சென்றார்.

ஜனரல் உக்கிரசேனரும் உலகநாயகனும் அறைக்குள் செல்லும்போது ஜனரலை முன்னே செல்லவிட்டு உலகநாயகன் இரண்டொரு விநாடி வாயிற்படியிற் றங்கியிருந்து பிறகு உள்ளே பிரவேசித்தான். அதற்குள் அரசன் எழுந்து அவனை யெதிர்கொண்டு சென்று ஆலிங்கனம் செய்துகொண்டான். அச்சமயம் அங்கு நேரிட்ட காட்சி காண்போர் மனங்களைக் கரையச் செய்வதாகும். பிரபுவின் கண்களிலும், எத்தகைய கொடிய இரணக்களத்திலும் கலங்காத மனோதிடமுடைய ஜனரல் உக்கிரசேனர் கண்களிலுமே நீர் தாரைதாரையாக வடிந்ததென்றால் அதில் சம்பந்தப்பட்ட அரசன் அவர் புத்திரன் இவர்களிருவருடைய மனோ நிலைமை யெவ்வாறிருக்கும் என்பதை இதை வாசிப்போரே உணரலாகும். அவர்கள் மனம் சாந்தமடையக் கால்மணி நேரம் சென்றது. அதுகாறும் பிரபுவும் ஜனரலும் அறையின் கோடியிலிருந்த சாளரத்தருகில் போய் நின்றிருந்தார்கள். கடைசியில் அரசனே யழைத்த பின் வந்து உட்கார்ந்தார்கள்.

பஞ்சநாதம்பிரபு தன் மனத்துடிப்பை யெல்லாம் அடக்கிக்கொண்டு ஜனரல் உக்கிரசேனரை நோக்கி "ஜனரல்! இப்போது தாங்கள் முன்கூறிய வாக்குத்தத்தத்தை நிறைவேற்றலாம். அதாவது இந்த இரகசியத்தைப்பற்றிய விஷயம் தங்களுக்கு எவ்வாறு தெரிந்தது என்பதை எனக்கும் அரசருக்கும் விளங்கும்படி தயவுசெய்து கூறும்" என்றார்.

ஜனரல் சட்டென்றெழுந்து ஆத்திரத்தோடும் கலக்கத்தோடும் "பிரபுவே! தங்கள் ஊகத்திற்கு இது சற்றும் புலப்படவில்லையா? இன்னும் தங்கள் மனதில் எவ்விதச் சந்தேகமும் தோன்றவில்லையா? பூர்வம் நடந்த விஷயங்களை யெல்லாம் நோக்கத் தங்களுக்கு ஏதேனும் புத்தியில் புலப்படவில்லையா?" என்றார்.

பிரபு திடுக்கிட்டு "என்ன தாங்கள் கூறுவது? நான் என்ன ஊகிக்கக்கூடும்? என் புத்திக்குப் புலப்படுவதெல்லாம் கூடி ஒன்றுதான். அதைவிட இதற்கு வேறு காரணம் கூறுவதற்கில்லை. அதாவது பொன்னுசாமிப்பிள்ளை என்பவன் உனக்கு அந்த இரகசியத்தைக் கூறி யிருக்க வேண்டும்." என்றார்.

இம்மொழிகளைக் கேட்டதே ஜனரல் உக்கிரசேனருடைய மனதில் பலவித விஷயங்கள் கிளம்பி அபூர்வ உணர்ச்சிகளை யுண்டாக்கின. அவர் படபடப்போடு "பிரபுவே! அது தவறு. தவறு. தாங்கள் கூறும் அம் மனிதன் வாயினின்றும் அந்த இரகசியம் ஒருவருக்கும் கூறப்படவேயில்லை. ஆம் இது சத்தியம். ஏனெனில் பிரபுவே! நான்றான் அந்தப் பொன்னுசாமிப்பிள்ளை" என்றதும் சட்டென்று எட்டச்சென்று சாளரத்தினருகில் நின்று வெளிப்பக்கம் பார்ப்பவர்போ லிருந்தார்.

அதைக் கேட்டதே பஞ்சநாதம் பிரபுவிற்கு மிக்க வியப்பும் பிரமையும் உண்டாகிவிட்டன. முதலில் இது பொய் என்று ஆத்திரத்தோடு கூறக்கருதினார். மறு விநாடியே ஜனரல் பொய் கூறமாட்டாரென்றும், சொன்னதை நிரூபிக்கச் சக்தியில்லாமல் அதைக் கூறியிருக்க மாட்டாரென்றும் அவர் மனதிற்பட்டது. ஜனரல் கூறுவது உண்மையேயென்று மனதில் யாரோ கூறுவதுபோ லிருந்தது. ஆனால் தன்னால் கொல்லப்பட்டானென்று தான் கருதி யிருக்கும் இந்த ஆள் எப்படி உயிரோடிருக்கிறா னென்பது பிரபுவுக்கு மிக்க வியப்பாகி விருந்தது.

* * * * *

இப்போது நமது கதையைத் தொடருமுன் சில விஷ

யங்களைப்பற்றிக் கூறவேண்டியது அவசியமாகவிருக்கிறது. அதைக் கூறிவிட்டுக் கதையைத் தொடர்ந்து செல்வோம்.

ஜனரல் உக்கிரசேனரின் பூர்வ சரித்திரம்:—

ஜனரல் உக்கிரசேனர் பொன்னுசாமி என்ற பெயரோடு கப்பற் சேதத்தினின்று தப்பிப் பாஞ்சால நாட்டின் கரையிலிருந்த மதனம்பாள் வீட்டில் வசித்திருந்து, அவள் தந்தை யிறந்ததும் அங்கிருந்து திரும்பி இலவணபுரிக்கு வந்துவிட்டார். அப்போது தான் பூரணமாகக் காதலித்திருந்த மதனம்பாளைவிட்டுப் பிரிந்த துயரத்தால் மிக்க மனச்சோர்வடைந்திருந்தார். அவர் பஞ்சநாதம் பிரபுவிற்குத் தூர சுற்றத்தார். அச்சமயம் பிரபுவும் அவர் வாலிப மனைவியும் விசேஷமாகக் கொண்டாட்டங்களுக்கும், கேளிக்கை விருந்து முதலியவைகளுக்கும் செல்வதும், தங்கள் மாளிகையிலும் அத்தகைய விஷயங்களை நடத்துவதுமா யிருந்தார்கள். பிரபுவுக்கும் அவர் மனைவிக்கும் மனமொத்த ஒற்றுமை கிடையாது. கோமளம் என்னும் அவர் மனைவி அந்தஸ்திற்கும் செல்வத்திற்கும் ஆசைவைத்தே யவரை மணக்கும்படி அவள் பெற்றோரால் அவள் பலவந்தப் படுத்தப்பட்டாள்.

பொன்னுசாமிப் பிள்ளை தன் மனவியாகூலத்தை மறப்பதற்காக விருந்துகள் கேளிக்கைகள் முதலியவற்றில் பிரவேசித்தான். ஒரு நாள் ஒருவர் வீட்டில் நடந்த விருந்தில் பஞ்சநாதம் பிரபுவையும் அவர் மனைவியையும் சந்தித்தான். அப்போது பிரபு இவன் மேல் விருப்பங்கொண்டு மறு நாள் தன் வீட்டிற்குப் போஜனத்திற்கு வரும்படி கூறினர். பிறகு சில நாட்கள் அங்கேயே யிருக்கும்படி கேட்டுக்கொண்டார்.

பொன்னுசாமிப் பிள்ளையும் பிரபுவின் மனைவியும் அடிக்கடி சந்தித்துத் தனியே இருக்கநேர்ந்தது. சீமாட்டி மிக்க அழகு வாய்ந்த அவ்வாலிபன் மேல் அடங்காக் காதல் கொண்டாள். பொன்னுசாமிக்கு மதனம்பாளைப் பிரிந்த துயரத்தை மறக்க இது ஒருவழியாக விருந்தது.

பிரபுவுக்கு அது வரையில் தன் மனைவி மேல் குற்றம் கூறக் காரண மில்லாவிட்டாலும் வெறுப்பு மட்டுமுண்டு. ஏனெனில், சீமாட்டி உடை நகைகள் முதலிய வற்றில் டம்பாகாரமாக வீண் விரையம் செய்வதுண்டு. அதோடு அடிக்கடி நகரத்தில் நடக்கும் வேடிக்கைக்காட்சிகளுக்கும் கேளிக்கைகளுக்கும் செல்லும்போதெல்லாம் அதிக பணத்தைச் செலவு செய்வாள். பிரபுவுக்குப் பணத்தைச் சேர்த்து விர்த்திசெய்யவே பிரியமாதலால் மனைவியின் நடக்கையில் வெறுப்புத் தோன்றி யிருந்தது. பொன்னுசாமி வந்த கொஞ்சக்காலங்கழித்த பின் சீமாட்டி கேளிக்கை முதலியவற்றிற்குச் செல்வதையே நிறுத்திவிட்டாள். பிரபுவிற்கு அதன் உண்மைக்காரணம் தெரியாதாகையால், அதற்காகச் சந்தோஷமே யடைந்தார்.

இவ்வாறிருக்கையில், ஒரு நாள் பிரபு தன் மனைவியின் அறைக்குப் பக்கத்திலுள்ள தாழ்வாரத்தின் வழியாகச்செல்லும்போது தன் மனைவி தமக்குத் துரோகம் செய்து விட்டாள் என்பதை யறிந்த சங்கதியைப் பற்றிப் பிரபுவே அரசனிடம் கூறியது நண்பர்கள் அறிந்த விஷயமே.

அதை யறிந்ததே பிரபு அடங்காக்கோபமடைந்து தனக்கு அவமானத்தை யுண்டாக்கினவனைக் கொன்றுவிடவேண்டுமென்று வஞ்சங்கொண்டார். பொன்னுசாமியைச்சண்டைக்கழைத்தால் ஒரு சமயம் தன் பிராணனுக்கே ஆபத் துண்டானாலும் ஆகும். பிரபு கோழையானதால் அவ்வாறு செய்யாமல் அன்னியரைக்கொண்டு அவனைக்கொலை செய்யக்கருதினர். தன்னிடத்திலுள்ள வேலைக்காரரில் இலட்சுமணன் தன் அந்தரங்கவேலையாள். ஆகையால் அன்றிரவு பத்துமணிக்கு அவனைத் தன் அறைக்கு அழைத்துத் தன் மனைவி தனக்குத் துரோகம் செய்ததைக் கூறி, மெதுவாகத் தன் விருப்பத்தை யவனுக்கு அறிக்கை யிட்டார்.

இலட்சுமணன் ஒருவனை நித்திரையில் அக்கிரம

மாகச்சொல்லச் சம்மதிக்கும் குணமுடையவனல்ல. ஆயினும் அச்சமயம் அவ்வாறே செய்யச்சம்மதித்தான். காரண மென்னே யெனின் ;—

இலட்சுமணனுடைய தமையன் கிரிநாதன் என்பவன் கோட்டைச் சிறைச்சாலையில் ஓர் முக்கிய காவலனென்பதும் அவன் ஜனரல் உக்கிரசேனருக்கு உதவி செய்ததும் நேயர்கள் அறிந்தனவே. இவர்களிருவருக்கும் மூத்த சகோதரன் ஒருவன் இருந்தான். அவனும் அவன் மனேவியும் இறந்து போனர்கள். அவர்களுக்கு ஒரு புத்திரனிருந்தான். நமது கதை ஆரம்பித்தபோது அவனுக்குச்சுமார் இருபது வயதிருக்கும். இலக்ஷ்மணனுக்கும் அவன் மனேவிக்கும் சந்தானமில்லை. கிரிநாதன் மணம் புரிந்து கொள்ளவேயில்லை. ஆகையால் அவர்கள் மூவரும், விசேஷமாக இலக்ஷ்மணனும் அவன் மனேயாளும் அவ்வாலிபனேத் தங்கள் புத்திரன் போலவே யாதரித்து வந்தார்கள்.

அவ்வாலிபனும் பிரபுவின் வீட்டிலேயே வேலைசெய்துகொண்டிருந்தான். அவன் மிக்க அயோக்கிய நடக்கையுடையவன். ஒருநாள் பிரபுவின் பெட்டியைத்திறந்து களவாடி விட்டான். பிரபு ஒரு நியாயாதிபதி யாகையால் அவனேத் தண்டிக்கக் கருதினர். ஆனல் இலக்ஷ்மணனுடைய வேண்டு கோளால் அப்படிச் செய்யவில்லை யெனினும் இனி யவன் தன் மாளிகைக்குள் வரலாகாதென்று கூறி விட்டார். என்ன செய்வது? இலக்ஷ்மணனும் கிரிநாதனும் முயற்சி செய்து அவனே யெட்டிக்குடியிலிருந்த பட்டாளத்தில் ஒரு போர்வீரனகச் சேர்த்து விட்டார்கள். இரண்டொரு வருடங்கள் வரை யவனேப்பற்றித் திருப்தியான சுமாசாரமே வந்து கொண்டிருந்தது. கடைசியில் பிரபுவிற்குத் தன் மனேவி தன்னேத் துரோகம் செய்த விஷயம் தெரிந்த தினத்திற்கு ஏழெட்டு நாட்களுக்கு முன் ஒருநாள் கிரிநாதன் வழக்கம் போல் தன் தம்பியையும் தம்பியின் மனேவியையும் பார்த்துப் போவதற்காகப் பிரபுவின் மாளிகைக்கு வந்தான்.

அப்போது அவன் தங்கள் தமையன் குமாரனைப்பற்றித் துக்ககரமான சமாசாரம் கொண்டு வந்தான்.

அதாவது, அவ்வாலிபன் தன் பட்டாளத்திலுள்ள ஒரு உத்தியோகஸ்தனிடமிருந்த பணத்தைக் களவாடிக் கொண்டு ஓடி விட்டான். அவன் மறுபடி பிடிக்கப்பட்டு இராணுவச் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டான். ஆனால் சமயம் பார்த்துத் தனக்குக்காவலிருந்த போர் வீரன் மேல் பாய்ந்து அவனுக்குப் பலத்தகாயம் உண்டாக்கி விட்டு அங்கிருந்து தப்பித்துக்கொண்டு ஓடிப்போ யிருக்கிறான். இப்போது அவன் பிடிக்கப்பட்டால் கட்டாயம் மரணதண்டனை விதிக்கப்படுவான். ஏனெனில் இவனால் காயமடைந்த காவலன் பிராணாபத்தை யுண்டாக்கத்தக்க காயமடைந்திருக்கிறான்.

இச்சங்கதியைக் கேட்டதே இலக்ஷ்மணனும் அவன் மனைவியும் மிக்க வியாகூலமடைந்தார்கள். அவனை யெப்படியாவது காப்பாற்றவேண்டு மென்றார்கள். கிரிநாதன் நடந்த சங்கதிகள் யாவும் பிரபுவினிடம் கூறி அவனை மரண தண்டனையிலிருந்து காப்பாற்றும்படி வேண்டிக்கொள்ளலாம் என்று இலக்ஷ்மணனும் அவன் மனைவியும் கூறினார்கள். மூவரும் இரவு ஒன்பது மணிக்கு இதைப்பற்றி ஆலோசனை செய்துகொண் டிருக்கையில் அந்த வாலிபனே அறைக்குள் வந்தான். காவலனோடு சண்டை யிட்டபோது இவனுக்கும் மிக்க காயங்கள் பட்டு அதிக இரத்தப்போக்கு நேர்ந்தது. இவன் அதனால் ஆயாசமடைந்து அன்னாகாரமின்றி மிக்க களைப்போடு, எப்படியோ சாமார்த்தியமாக ஒருவரு மறியாமல் மாளிகைக்குள் வந்து சேர்ந்து, தன்னைக்காப்பாற்றும்படி அவர்கள் பாதங்களில் விழுந்து கெஞ்சினான்.

கிரிநாதன் இவனுக்கு அடைக்கல ஸ்தான மளிப்பதால் தன் சகோதரனுக்கும் அவன் மனைவிக்கும் அபாயம் வருமென்றஞ்சிப் பிரபுவினிடம் யாவும் கூறிவிட வேண்டுமென்றான். அப்படிச் செய்தால் பிரபு தானே நியாயாதிபதியானதால் அவனை யுடனே அதிகாரிகளிடம்

ஒப்பித்துவிடுவாராதலால் இலட்சுமணனும் அவன் மனைவியும், அவ்வாலிபன்மேல் வைத்த பட்சத்தால் அதற்குச் சம்மதிக்கவில்லை. கடைசியில் ஒரு யோசனை செய்தார்கள். அதாவது அவன் காயங்கள் ஆறுமட்டும் அவனையங்கேயே வைத்திருந்து அவன் சுகமடைந்ததும் அவனிடம் கொஞ்சம் பணம் கொடுத்து எங்காவது அன்னிய நாட்டிற்கு அனுப்பி விடுவதென்று தீர்மானித்தார்கள். கிரிநாதன் தான் இந்த ஏற்பாட்டிற்கு உடன்பட முடியாதென்றும், ஆனால் இந்த இரகசியத்தை வெளியிடுவதில்லை யென்றும் கூறிவிட்டு மறுநாட் காலை தன் தொழிலுக்குச்சென்றான்.

வாலிபன் இரகசியமாகவே அங்கு இலக்ஷ்மணனும் அவன் மனைவியாலும் ஒருவரு மறியாமல் காப்பாற்றப்பட்டு வந்தான். ஐந்தாறு தினங்கள் அவன் காயங்கள் ஆறிவருவது போலவே தோன்றின. ஆனால் ஒரு வாரங்கழித்து ஒரு நாள் மாலை திடீலென்று ஜன்னி பிறந்து ஏழு மணிக்கு அவன் மரித்தான்.

இலக்ஷ்மணனும் அவன் மனைவியும் பேரிடி விழுந்தவர்கள்போ லாய்விட்டார்கள். சவத்தை யெப்படி யடக்கம் செய்வது? சங்கதி வெளிவந்தால் அவனுக்கு அடைக்கலந்தந்து அவனை மறைத்து வைத்ததற்காகத் தங்களுக்குத் தண்டனை கிடைக்கும். இதற்கிடையில் இவனால் காயமடைந்த போர்வீரனாகிய சிறைச்சாலைக் காவலன் மரித்தான் என்று சங்கதி தெரிந்தது. என்ன செய்வார்கள் பாபம். சவத்தை யெவ்வாறு அடக்கம் செய்வது. சங்கதி வெளிப்பட்டு விட்டால் கடுமையான தண்டனை கிடைக்கும்.

இலக்ஷ்மணன் அத்தகைய இக்கட்டான நிலைமையிலிருந்தபோதுதான் பிரபு அவனை யழைத்துப் பொன்னுசாமிப்பிள்ளையைப் பற்றிக் கூறியது. அன்றுதான் பிரபு தன் மனைவியின் துரோகத்தை யறிந்தது. பிரபு கூறிய யாவும் கேட்ட கிரிநாதன் தம்பிக்கு மனதில் ஒரு யோசனை யுதித்தது. தன் தமையன் மகனுடை சவத்தை

யிரகசியமா யடக்கம் செய்து விட்டு அச்சங்கதியை யடியோடு மறைத்து விட நல்ல சமயம் வாய்த்ததென்று அவன் புத்தியிற்பட்டது. அதோடு பொன்னுசாமியைக் கொல்வதற்குப் பிரபுவிடம் பணமும் வாங்கிக்கொள்ளலாம். அது மட்டுமல்ல. பிரபுவின் இப்பயங்கர இரகசியம் தன்னிடம் சிக்கி யிருப்பது எப்போதும் தனக்கு மிக்க அனுகூலமாக விருக்கும். இவ்வளவு அனுகூலமும் பெறுவதோடு பொன்னுசாமியைக் கொல்லும் பாவத்தையும் செய்யாமலே யிருக்கலாம். இந்த யோசனை மனதிற்பட்டதும் கொலைத் தொழில் புரியப்பிரியமில்லாதவன் போலவும் பிரபுவுக்காகச் சம்மதிக்கிறவன் போலவும் அபிநயம் செய்து கடைசியில் சம்மதித்தான். பொன்னுசாமியின் அறை இலக்ஷ்மணன் சயன அறைக்குப் பக்கத்திலிருக்கிறது. அன்றிரவு பனிரெண்டு மணிக்கு அவன் நித்திரை செய்யும் சமயத்தில் ஈட்டியால் குத்திக்கொன்று விடுவதென்று ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்த ஏற்பாடு முடிந்து இலட்சுமணன் தன் அறைக்குத் திரும்பி வந்த கால்மணி நேரத்திற்குள் கிரிநாதன் வழக்கம் போல் தன் சகோதரனைப் பார்க்க வந்தான். ஆனல் அச்சமயம் காயம் பட்டிருக்கும் வாலிபன் எப்படி யிருக்கிருனென்றும் அச்சங்கதி பிரபுவுக்குத்தெரியாமலே யிருக்கிறதா வென்றறிவதற்குமே வந்தான்.

கிரிநாதன் வந்த சங்கதி யறிந்ததே பிரபு இலக்ஷ்மணனை யழைத்துக் கொலை விஷயம் இன்றைக்கு வேண்டாம்; நாளைக்குச்செய்யலாமென்று கூறிவிட்டார். இதற்கிடையில் பிரபு தன் மனைவி யிடமும், பொன்னுசாமியிடமும் எப்போதும் போல் சினேகபாவமாகவே நடந்துகொண் டிருந்தார். இலட்சுமணன் தன் தமயனிடம் வாலிபன் இறந்த சங்கதியையும் பிரபு பொன்னுசாமியைக் கொல்லச் சொன்ன சங்கதியையும் தன்னுடைய ஆலோசனையையும் யாவும் விவரமாகக் கூறினன். கிரிநாதன் அதற்கு மனத்திருப்தி யோடு சம்மதித்தபின் இரு

வரும் அதைச்சேர்ந்த மற்ற ஏற்பாடுகளைப்பற்றிப் பேசி முடித்தார்கள். மறுநாட் காலை கிரிநாதன் பிரபுவுக்கு வந்தனமளித்துவிட்டுத் தன் சகோதரனிடமும் அவன் மனைவியிடமும் விடைபெற்றுச் சென்றான்.

69-வது அத்தியாயம்.

உலகநாயகன் இராஜகுமாரனே—அவன் விஷயங்களில் நேரும் சந்தோஷ மாறுதல்கள்—தந்தைக்கும் மகனுக்கும் நடந்த இரகசியசம்பாஷணை— பழைய குற்றங்கள் வஞ்சம் யாவும் மறக்கப்பட்டுச் சினேகம் ஏற்படல்

ஜெனரல் உக்ரசேனருடைய அதிசயமான சரித்திரத்தின் தொடர்ச்சி:—

மறுநாள் இரவு பொன்னுசாமி வழக்கம்போல் தன் அறைக்குச் சென்று சயனித்துக்கொண்டான். நடுஇரவு தன்னை யாரோ எழுப்புவதை யுணர்ந்து திடுக்கிட்டு எழுந்து உட்கார்ந்து தன் எதிரில் இருக்கும் இலக்ஷ்மணனை யுற்று நோக்கினான். அச்சமயம் அவன்மனதில் ஏதோ ஒருவிதக் கலக்கமட்டும் தோன்றியதே யன்றித் தனக்கு ஆபத்தென்று அவன் கருதவில்லை.

இலக்ஷ்மணன் அவனை நோக்கி "பிரபு யாவும் அறிந்துகொண்டார். நீங்களிருவரும் பேசிக்கொண்டிருந்தபோது கேட்டுக்கொண்டிருந்தார்" என்று அந்த விஷயத்தை விவரமாகக் கூறி, இப்போது உன்மேல் வஞ்சந்தீர்த்துக்கொள்ளத் தீர்மானித்து உன்னை நித்திரையிற் கொல்லும்படி எனக்குக் கட்டளை யிட்டிருக்கிறார். நான் உன்னைக் காப்பாற்றி விடுகிறேன். ஆனால் ஒரு நிபந்தனை; நீ இந்த நாட்டைவிட்டு உடனே போய்விடவேண்டும். இன்னும் நீ இங்கிருந்து, பிரபு உன்னைப் பார்த்துவிட்டால் எனக்குக் கெடுதி நேர்வதோடு எல்லா வஞ்சமும் சேர்த்துத் தன் மனைவியின்மேல் தீர்த்துக்கொள்வார்" என்றான்

பொன்னுசாமி இவன் கூறுவதன் உண்மையை யறிந்து கொண்டு "இச்சீமாட்டியை யவர் கோபத்திற்காளாக விட்டுவிட்டு நான் எப்படிப் போய்விடுவேன்?" என்றான்.

இலக்ஷ்மணன்:—நீ யிங்கிருந்தால் உன் உயிரைப் போக்கடித்துக்கொள்வாயே யன்றிச் சீமாட்டிக்கு நீ எப்படி உதவிசெய்ய முடியும்? மேலும் இப்போது பிரபுவின் வஞ்சம் முழுமையும் உன்மேல்மட்டுமே யிருக்கிறது. அது தீர்ந்தது என்று தெரிந்தால் சீமாட்டிக்கு ஒரு கெடுதியும் செய்யார்" என்றான்.

பொன்னுசாமி "ஆம். ஆனால் நான் தப்பித்துக்கொண்டு போய்விட்டால், நீ என்னைக் கொன்றுவிட்டதாக எப்படி அவர் நம்பும்படி செய்வாய்?" என்றான்.

அதன்மேல் இலக்ஷ்மணன் அவனை யழைத்துக்கொண்டுபோய் வாலிபன் சவத்தைக் காட்டிச் சுருக்கமாகச் சங்கதியைக் கூறவே பொன்னுசாமிக்குப் பூரண நம்பகமுண்டாகி "இனி எல்லா விஷயத்திலும் நீ கூறுகிற யோசனைப்படியே நடந்துகொள்வேன். உனக்குக் கெடுதி வரும்படி செய்யவே மாட்டேன். நீ செய்யும் இந்நன்றியை யொருபோதும் மறக்கமாட்டேன்" என்றான்.

இலக்ஷ்மணன் உடனே பொன்னுசாமியை யழைத்துக்கொண்டு தோட்டவழியாய்ச் சென்று அங்கிருந்த ஒரு சிறு இரகசிய வழியாய் அகழியின் ஓரத்திற்குச் சென்றான். அங்கு ஓரிடத்தில் நின்றதும் அவன் பொன்னுசாமியை நோக்கி "நாளை இரவு எட்டுமணிக்கு கிழக்கு நாட்டிற்குப் புறப்பட ஒரு கப்பல் ஆயத்தமாக விருக்கிறது. அதில் உனக்கும் இடம் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அகழியின் மறுபக்கம் அதோ பிரம்மாண்டமான ஆலமரம் இருக்கிறது பார்! அங்கு என் தமையன் வந்து உனக்காகக் காத்துக்கொண்டிருப்பார். உனக்கு மாற்றுடை, வழிச்செலவிற்குப் பணம் யாவும் அவர் அளிப்பார். நீ நீந்திக்கொண்டு அகழியைக் கடந்து செல்ல வேண்டியதே தடை" என்றான்.

பொன்னுசாமி இலக்ஷ்மணனுக்கு மிக்க நன்றியான

வார்த்தைகளால் வந்தனமளித்து "கடவுள் தயவால் நான் உயிரோடு மட்டு மிருந்தால் ஒருநாளைக்கு இந்த நன்றிக்குப் பதில் செலுத்தியே தீர்ப்பேன்" என்று கூறிவிட்டு அகழியைக் கடந்து எதிர்க் கரையில் ஏறினன். அதைக் கண்டபின் இலக்ஷ்மணன் மாளிகைக்குள் சென்றுன்.

இலக்ஷ்மணன் உடனே தன் தமையன் மகன் இறந்து இடக்கும் அறைக்குள் சென்று தன் மனைவியின் உதவியோடு அச்சவத்தை யெடுத்துக்கொண்டுபோய்ப் பொன்னுசாமி சயனித்துக்கொண்டிருந்த படுக்கையின் மேல் கிடத்திவிட்டான். அவ்வாலிபன் இறந்தபோது அவன் காயங்களின் வழியாக மிக்க இரத்தம் வெளிவந்தது. அந்த இரத்தம் பட்டிருந்த போர்வையை அச்சவத்தின் மேல் நெடுக மூடிவிட்டான். இரத்தக் கறைகள் புதியனவாகத் தோன்றுவதற்காக அவற்றை நனைத்துவிட்டான். மெத்தையின்மேல் இரத்தநிறமான சாயநீரைக் கொஞ்சம் ஊற்றி வைத்துவிட்டு உடனே பிரபுவிடம் சென்று,

"பிரபுவே! காரியத்தை முடித்துவிட்டேன். ஆ! அச்சமயம் அவன் விழித்துக்கொண்டே கண்களை மட்டும் மூடி யிருந்தான்போல் காண்கிறது. ஈட்டி அவன் இருதயத்தில் பாயும் சமயம் கண்களைத் திறந்துகொண்டான். அடடா அவன் முகத்தில் உண்டான விகாரம் அப்பா! பிரபுவே! தாங்கள் எனக்குக் கோடிபொன் கொடுத்தாலும் அவன் முகத்தின்மேல்போட்ட சீலையை நீக்கி அம்முகத்தை நான் பார்க்கமாட்டேன். இனிச் சவத்தை யெங்கே மறைப்பது கூறுங்கள். அது வெளியில் இருக்கு மட்டும் அம்முகம் என்முன் இருப்பதுபோலவே எனக்குத் தோன்றுகிறது" என்றுன்.

இலக்ஷ்மணன் அவ்வாறு பொய் புகன்றதன் காரணம் என்னவெனில், தன் கையால் ஒருவனைக் கொல்லத் தைரியமில்லாத கோழை பிறகு அச்சவத்தின் முகத்தைப் பார்க்க விரும்பமாட்டான். ஆயினும் பிரபு அதைப்பார்த்துச் சந்தோஷப்படக் கருதி ஒரு சமயம் முகத்தைப் பார்க்கலாம் என்று நினைத்துப் பார்த்தால் உண்மை வெளியாய்விடும்.

ஆதலால் இப்படிக் கூறினால் கட்டாயம் அதைப் பார்க்கவே நினையான் என்று கருதியே அப்படிக் கூறினான். அது அப்படியே முடிந்தது.

பிரபு இலக்ஷ்மணன் கூடவே கொலை நடந்த அறையின் வாயிற்படியில் வந்துநின்று அந்த அறையின் பின்னால் இருக்கும் அறையிலேயே சவத்தைப் புதைத்துவிடும்படி கூறினார். அவ்வாறே யிருவரும் குழிதோண்டும் ஆயுதங்களோடு அறைக்குச் சென்றார்கள். பிரபு இராந்தல் எடுத்துக்கொண்டு சென்றார். இலக்ஷ்மணன் துரிதமாகக் குழிதோண்டினான். அது முடிந்ததும் சவத்தைப் படுக்கையில் வைத்துச் சுருட்டித் தூக்கிவந்து குழியில் போட்டுப் புதைத்துவிட்டு, மிச்சமாக விருந்த மண்ணை இலக்ஷ்மணன் வாரிக்கொண்டுபோய்த் தோட்டத்தில் கொட்டிவிட்டு அந்த அறையைப் பூட்டிவிட்டான்.

மறுநாட் காலை பிரபு எல்லாச் சங்கதிகளையு மறிந்து கொண்டார் என்றுணர்ந்து பொன்னுசாமிப்பிள்ளை இரவு எங்கோ ஓடிவிட்டதாகச் சீமாட்டிக்குக் கூறப்பட்டது. பிரபு மறுநாள் சீமாட்டிக்குத் தான் யாவும் அறிந்த விவரத்தைக் கூறிக் கடுமையாய்ப்பேசி, சீமாட்டி இனிப் பொன்னுசாமி தங்கியிருந்த அறையிலேயே யிருக்க வேண்டுமென்றும் அதைவிட்டு வெளியில் வரலாகாதென்றும் கட்டளையிட்டு இலக்ஷ்மணனையும் அவன் மனைவியையும் காவல் வைத்தார்.

சீமாட்டி யிறந்துபோனதாக அப்போது பிரஸ்தாபப்படுத்தவில்லை. சீமாட்டி தன் பிரியப்படிக்கே யப்படி அறையைவிட்டு வெளிப்படாம லிருக்கிறாளென்று பிரஸ்தாபிக்கப்பட்டது. பிரபு தினம் சீமாட்டியைக் காண்பதும், சற்றும் ஈவிரக்கமின்றிக் கடுமையான மொழிகளால் அவள் மனம் புண்படும்படி பேசுவதுமாக விருந்தார். அம்மாது தன் குற்றத்திற்காக எவ்வளவோ மனஸ்தாபம் காட்டித் தன்னை மன்னிக்கும்படி பன்முறை அவர் பாதங்களிற் பணிந்து வேண்டிக்கொண்டும் பிரபுவின் மனம் இரங்கவில்லை.

இவ்வாறிருக்கும்போது ஒருநாள் சீமாட்டிக்கு இன்னும் அதிகமாக மனோவேதனை யுண்டாக்கவெண்ணி, "உன் காதலன் மேலும் நான் பூரணமாக என் வஞ்சத்தைத் தீர்த்துக்கொண்டேன். இதோ நீ படுக்கிறாயே இதே மஞ்சத்தின்மேல் இந்த அறையிலேயே அவன் கொல்லப்பட்டான். அவன் சவம் அதோ பின்னாலிருக்கும் அறையில்தான் புதைக்கப்பட்டிருக்கிறது" என்று கூறினார்.

அக்கடு மொழிகளைக் கேட்டதே அம்மாதின் உளம் பதைத்துத் தணலாக எரியத் தொடங்கியது. தான் இதுகாறும் தன் கணவனை மரியாதையோடேயே தன்னை மன்னிக்கும்படி பிரார்த்தித்துக்கொண் டிருந்தவள் உடனே கோபாவேசமடைந்து, "அட கொலைபாதகனே! இதையா மிக்க சந்தோஷத்தோடு என்னிடம் கூறுகிறாய்? என் உயிருள்ளவரையில் உன்னைத் தப்பவிடேன். உன் கொலைத் தொழிலைத் துரைத்தனத்தாருக்குக் கூறி உன் பிராணனை வாங்கும்படி செய்யாமல் நான் விடப்போகிறதில்லை" என்று தூஷித்தாள்.

பிரபுவுக்கு மிக்க பீதியுண்டாய்விட்டது. என்ன செய்வது? தான் அவ்வாறு அவசரப்பட்டது மூடத்தனம் என்று அப்போதுதான் புலப்பட்டது. அவருக்கு மிக்க பயமுண்டாய்விட்டது. என்ன செய்வதென்று யோசித்தார். அதன்மேல்தான் இனிச் சீமாட்டியை மரணபரியந்தம் வெளிவிடலாகாது என்று தீர்மானித்துக் கட்டிடத்தின் எதிர்பக்கம் மேல்மாடியிலுள்ள மூன்றறைகளில் சிறைவைத்து மிக்க பத்திரமான காவல்வைத்து, அந்த அறைகளை யடைத்துவிட்டதாகப் பிரஸ்தாபித்து, வெளிப்பக்கம் கதவுகளைப் பூட்டி விட்டுவிட்டார். இவ்வாறு நெடுநாட்கள் வைத்துவைக்க முடியாது. சீமாட்டி எப்போதுமே அறையை விட்டுவராதிருந்தால் சந்தேகத்திற்கு இடமுண்டாகும், ஆதலால் சீமாட்டி இறந்துபோனதாகப் பிரஸ்தாபப்படுத்தி ஒரு பெட்டியில் கற்களையும் சிலை

களையும் நிரப்பித் தங்கள் குடும்ப மயானத்தில் புதைத்து விட்டார்.

பல வருடங்கள் கழிந்தன. இந்த இரகசியம் அம் மாளிகையில் வசிக்கும் உலக நாயகனுக்கே தெரியா திருந்ததென்றால், அது எவ்வளவு பத்திரமாகக் காப்பாற்றப்பட்ட தென்பதைப்பற்றி நாம் அதிகம் கூறவேண்டுவ தில்லை.

சீமாட்டி மனோ வியாகூலத்தால் தேகம் மெலிந்து அழகுமாறிப் பித்தம்பிடித்தவள்போ லாய்விட்டாள். ஆயினும் தான் சிறை வைக்கப்படுவது தெரியும். தப்பித்துக்கொண்டுபோக மார்க்கமில்லை. வெளிக்கதவாவது பூட்டப்பட்டிருக்கும். அல்லது இலட்சுமணனாவது அவன் மனைவியாவது மற்றொரு வேலைக்காரியாவது ஒருவர் கூடவே யிருப்பார்கள்.

இவ்வாறிருக்க அன்று உலகநாயகன் மதனம்பாளை யழைத்துகொண்டு சுரங்கத்தின் வழியாக வந்து படிக் கட்டுகளின் மேலேறி அங்கிருந்த வாயிற்படி யருகில் நின்ற போது, சீமாட்டி யிடம் காவல் இருந்த மாது திடீ லென்று தன் பணப்பையைச் சமையலறையில் வைத்து விட்டதை நினைத்துக்கொண்டு, அவசரத்தோடு அதை யெடுத்துவர ஓடியவள் கதவைப்பூட்டிக்கொண்டு போக மறந்து விட்டாள். அவள் கீழிறங்கித் தாழ்வாரத்தின் வழியாய்ச் செல்லும்போது எதிரில் இலக்ஷ்மணனும் அவன் மனைவியும் சீமாட்டிக்கு ஆகாரம் எடுத்துக் கொண்டு வருவதைக் கண்டு நான் கதவைப் பூட்டாமல் வந்து விட்டேன். சீக்கிரமாய்ச் செல்லுங்கள் என்று கூறிப்போயினள்.

அவர்கள் துரிதமாக வந்து பார்த்தபோது சீமாட்டி யறையிலில்லாததைக் கண்டு மிக்க பீதி யடைந்து ஓடித் தேடினார்கள். இதற்கிடையில் சீமாட்டி, காவலிருந்த வேலைக்காரி சென்றதும் இதே சமயம் என்று திறந்திருக் கும் அறைகளின் வழியே வந்தாள். இரண்டறைகளைக் கடந்து வந்தபோது அங்கொரு அறையின் கதவு கொஞ்

சம் திறக்கப்பட்டிருப்பதையும் தீபவொளி தெரிவதையும் கண்டு மெதுவாய்க் கதவுகளின் சந்தில் பார்த்தாள். தன் கணவன் கரத்தில் இராந்தலை வைத்துக்கொண்டு அங்கிருந்த ஒரு கதவைத் திறப்பதைக் கண்டதும் கோபாவேசங்கொண்டு பாய்ந்து பிரபுவின் கையிலிருந்த இராந்தலைப் பிடுங்கிய போது அவ்வேகத்தால் அது கீழே விழுந்து மோதுண்டு உடைந்து அணைந்து விட்டது.

சீமாட்டி பிரபுவின் மேல் பாயும்போது, அவளைத் தேடி வந்த இலக்ஷ்மணனும், அவன் மனைவியும், மற்றொரு காவல் காரியும் அங்கு வந்த படியால், அவர்கள் உடனே பாய்ந்து வந்து சீமாட்டியைப் பிடித்துத் தூக்கிக்கொண்டு போய் விட்டார்கள். அதற்குள் தீபம் அணைந்து போன படியால் மதனம்பாள் அந்த ஆட்களைக் காணவில்லை.

அந்தச் சம்பவத்தைப்பற்றித்தான் வெளியில் யாரிடமும் பிரஸ்தாபிப்பதில்லை யென்று மதனம்பாள் பிரபுவிடம் கூறி யிருந்தும், உலகநாயகன் ஒருவருக்கும் கூற மாட்டானென்று பிரபுவிற்கு நம்பிக்கை யிருந்தும், அச் சம்பவம் நேர்ந்தது முதல் அவர் மனதில் பீதியும் கலக்கமுமுண்டாய் விட்டன. ஆகையால் அப்படிச் சீமாட்டியின் சங்கதி வெளிப்பட்டு விட்டுச் சீமாட்டி தன் குற்றத்தை வெளிப்படுத்தினும், அதை நிரூபிக்க வேறு அத்தாட்சி யொன்றுமில்லாவிட்டால் அவள் வார்த்தை பித்தம் பிடித்தவள் வார்த்தையாகவே அலட்சியம் செய்யப்படும். ஆனால் மாளிகைக்குள் அடக்கம் செய்யப்பட்ட சவத்தின் அத்தாட்சி யிருந்து நிரூபிக்கப்பட்டால் மோசமாக முடியும்.

ஆகையால் பிரபு ஒரு நாள் நடு இரவில் குழியைத் தோண்டி அதிலிருந்த அஸ்திகளை யெடுத்துக்கொண்டு போய்த் தோட்டத்தில் புதைத்து விடும்படி ஏற்பாடு செய்தார். அதைத்தான் உலகநாயகன் பார்த்தது. அவன் தன் மாமனும் வேறொருவனும் ஒரு கோணி மூட்டை யெடுத்துக்கொண்டு மூடப்பட்ட அறைகள் இருக்கு மிடத்திலிருந்து புறப்பட்டுத் தோட்டத்திற்குச் சென்றதையும்

பிறகு மூட்டை யின்றி யிருவரும் மட்டும் திரும்பி வந்து மாளிகையில் வாசம் செய்யும் பாகத்தில் நுழைந்ததையும் கண்டான்.

அச்சமயமாவது இலக்ஷ்மணன் உண்மையைப் பிரபு விடம் ஏன் கூறவில்லை என்று இதை வாசிப்போர் கருத லாம். அதற்குத் தக்க காரணங்க ளிருக்கின்றன. முதலா வது பிரபுவை யேமாற்றி விட்டதாகப் பிரபுவுக்குத் தன் மேல் மிக்க கோபம் வரும். அதோடு பிரபு தமது இர கசியம் அவனிடம் சிக்கியிருக்கிறதென்ற எண்ணத்தால் அவனிடம் வைத்திருக்கும் அச்சமும் அபிமானமும் அடி யோடு போய் விடும். இவற்றை விட ஆபத்தை யுண்டாக் கும் ஒரு காரணமும் இருக்கிறது. அதாவது பொன்னு சாமி கொல்லப்படவில்லை யென்றால் புதைக்கப்பட்டசவம் யாருடைய சவம் என்பதை நிரூபிக்க வேண்டும். பிரபுவே ஒரு நியாயாதிபதி. அந்த இரகசியம் அவருக்குத் தெரிந்தால், தான் செய்த துரோகத்தால் அவருக்கு உண் டாயிருக்கும் கோபத்தால், தான் கொலை செய்தவனை மறைத்து வைத்திருந்ததற்காகத் தன்னைப் பிடித்துக் கொடிய தண்டனைக்காளாக்கி விடலாகும். இவையாவும் ஆலோசித்தே அவன் ஒன்றும் கூறவில்லை.

இனி பொன்னுசாமி என்னவானானென்று கவனிப் போம். அவன் அகழியைக் கடந்ததும் இலக்ஷ்மணன் கூறிய மரத்தருகிற் சென்றபோது, அதனடியில் கிரி நாதன் இரண்டு குதிரைகளோடு ஆயத்தமாக இருப்ப தைக்கண்டான். உடனே இருவரும் குதிரைகளில் ஏறிக் கொண்டு இலவணபுரியை நோக்கிச் சென்றார்கள். அங்கு சென்றதும் கிரிநாதன் பொன்னுசாமியைத் தன் நண்பன் ஒருவன் வீட்டில் விட்டு மறுநாள் பகல் முழுமையும் வெளிச் செல்லலாகாதென்று கூறினான். பொன்னுசாமி "ஒருகாலும் உங்களுக்குக் கெடுதிவரத்தக்க காரியத் தைக் கனவிலும் செய்யேன்" என்று கூறினான்.

மறு நாள் கிரிநாதன் பொன்னுசாமிக்கு மூன்று ஜதை யுடுப்புகள் வாங்கி வந்து அளித்துக் கையில் செல

விற்குப்போதுமான பணமும்கொடுத்தான். இரவு ஏழு மணிக்கு இருவரும் புறப்பட்டுக் கடற்கரைக்குச் சென்று துறைமுகத்திலிருந்த ஒரு கப்பலிலேறினார்கள். கிரிநாதன் பொன்னுசாமியைக் கப்பலின் கப்பித்தானிடம் ஒப்புவித்து "இவர்தான் நான் அழைத்து வருவதாகக் கூறிய நமது நண்பர் பொன்னுசாமிப்பிள்ளை" என்று கூறி விட்டுக் கப்பலை விட்டுச் சென்றான்.

சரியாக எட்டு மணிக்குக் கப்பல் துறை முகத்தை விட்டுப் புறப்பட்டது. பொழுது விடிவதற்குள் கப்பல் கரைக்குப் புலப்படாத தூரத்தில்சென்றது. அங்குசென்றதும் அதன் கப்பித்தானுடைய நடக்கையில் ஒரு மாறுதல் தோன்றியது. அதாவது கப்பலிலிருந்த ஆடவர்களிடமுள்ள ஆயுதங்களும் பொருள்களும் மிக்க தந்திரமாகவும் கள்ளத்தனமாகவும் அக்கப்பித்தானால் அபகரிக்கப்பட்டன. பொன்னுசாமியும் இன்னும் சிலரும் அதைப் பற்றிக் கோபத்தோடு கேட்டபோது கப்பித்தான் தன் உண்மை நடக்கையை வெளியிட்டு விட்டான். அதாவது அவன் ஒரு அடிமை வர்த்தகன். அக்காலதில் மனிதர்களை யேமாற்றிக் கப்பலிலேற்றிக்கொண்டு போய் மேற்கு நாட்டிலுள்ள தோட்டக்காரருக்கு அடிமைகளாக விற்று விடும் வழக்கமிருந்தது.

கப்பித்தான் "கப்பல் மேற்கு நாட்டுத்தோட்டக் காட்டிற்குச் செல்கின்றது" என்று கூறியதே யாவரும் உண்மையறிந்து பேரிடிவிழுந்தவர்கள்போ லானார்கள். இவர்களுக்கும் தாழ்ந்த ஆகாரமே கொடுக்கப்பட்டது. பொன்னுசாமி இதற்கு உடன்படும் கோழையல்ல. ஆயினும் அவன் தன் கோபத்தையும் எண்ணத்தையும் மறைத்து வைத்துக் கொண்டு, தன் கூடவிருக்கும் பிரயாணிகளில் புத்திசாலித்தனமும் தைரியமுமுடையவர்களை யறிந்து கொண்டு, அவர்களை யெல்லாம் நண்பராக்கிக்கொண்டு தான் கூறும் சமயம் நேரும்போது அவர்கள் இன்னவிதமாக நடந்து கொள்ள வேண்டு மென்பதைப்பற்றி அவர்களுக்கு எச்சரிக்கை செய்து வைத்தான்.

கப்பல் யாதொரு ஆபத்துமின்றி மேற்கு நாட்டை நெருங்கியது. கப்பல் போய்ச் சேரவேண்டிய இடத்திற்கு இரண்டு நாள் பிரயாணமுள்ள தூரத்தில் செல்லும் போது, பொன்னுசாமி சமயம் பார்த்து, கப்பித்தானைத் திடீலென்று பிடித்து மேல் தட்டில் மோதியடித்து அவனை மூர்ச்சையாய் விழச்செய்து அவனிடமிருந்த பிரம்மாண்டமான உடைவாளைக் கையிலேந்திக்கொண்டு தன்னை யெதிர்த்த மாலுமிகளைக் கிட்ட நெருங்கவொட்டாது தடுத்துக்கொண்டிருந்தான். சற்று நேரத்திற்குள் மற்றப்பிரயாணிகள் யாவரும் சீக்கிரம் தங்கள் ஆயுதங்கள் வைக்கப்பட்டிருக்கும் பெட்டியை யுடைத்து ஆயுதங்களை யெடுத்துக்கொண்டு சீக்கிரத்தில் மாலுமிகளை யெல்லாம் அடக்கிக் கைது செய்து விட்டார்கள்.

பொன்னுசாமியே யிப்போது அக்கப்பலுக்கும் அதிலுள்ள எல்லாச் சொத்துக்களுக்கும் சொந்தக்காரனாய் விட்டான். அவனே கப்பித்தானாகிக் கப்பலை யருகிலுள்ள ஒரு தீவிற்குக் கொண்டுபோய் மற்றப் பிரயாணிகளை நோக்கி "நண்பர்களே! நான் உங்களைப் பெரிய ஆபத்தினின்றும் காப்பாற்றி விட்டேன். நான் இப்போது இத்தீவில் கரை யிறங்கிவிடுகிறேன். இக்கப்பலும் இதிலுள்ள யாவும் உங்களுடையனவே. இதை யுங்கள் இஷ்டப்படி செய்து கொள்ளுங்கள்" என்று கூறி விட்டு அத்தீவில் கரை யிறங்கிவிட்டான்.

இப்போது பொன்னுசாமி தன்னிஷ்டப்படி நடக்கச் சுயாதீனமடைந்திருப்பதால் இனி நம்பழைய நடக்கையை விட்டு விட்டு நாம் துணிகரமாக இனி வேலை செய்து உலகில் பிரக்யாதி பெறவேண்டு மென்று தனக்குள் தீர்மானித்துக் கொண்டான். அதன் மேல் அவன் அங்கிருந்து மேற்கு நாட்டிற்குச் சென்று தன் பெரிய தந்தையின் பெயராகிய உக்கிரசேனர் என்ற பெயரை வைத்துக்கொண்டு அங்கு பிரக்யாதி யடைந்த சங்கதி நண்பர்கள் அறிந்ததே.

ஜனரல் உக்கிரசேனர் பலவருடங்கள் கழித்து இல

வணபுரிக்குவந்து மாறு பெயரோடு நடமாடிக்கொண் டிருக்கையில் தற்செயலாகக் கர்னல் குமரவேலிடம் உலக நாயகனைப்பற்றிக் கேள்விப்பட்டதும், அவனைச் சிறு வய தில் கண்டு அவன்மேல் பட்சம் வைத்திருந்தவரானதால், இப்போது அவனைக் காணவும் அவன் மூலமாய்ப் பஞ்ச நாதம் பிரபுவின் மனைவியைப்பற்றி யறியவும் எண்ணங் கொண்டார்.

முதல் முதல் உக்கிரசேனர் மதனும்பாள் சீமாட்டி யின் மாளிகையில் உலகநாயகனைக் கண்டபோது உலக நாயகன் பிரபுவின் மனைவி இறந்துபோன சங்கதியைக் கூறினனல்லவா, ஜனரல் அப்போதுதான் அச்சங்கதியைக் கேள்விப்பட்டார். அச்சீமாட்டி இறந்த காலத்தை நோக்க அவள் பிரபுவினல் உண்டாக்கப்பட்ட கொடுமை யைச் சகிக்காமல் மனவியாகூலத்தாலேயே மடிந்திருக்க வேண்டும் என்றும், இன்றேல் பிரபுவே யவளைக் கொன் றிருக்கவேண்டுமென்றும் அவர் மனதிற்பட்டது. ஆயி னும் அவர் உள்ளத்தில் மட்டும் இதைப்பற்றிக் பெரிய சந் தேகமாகவே யிருந்தது.

ஜனரல் உக்கிரசேனர் முதல் முதல் மதனும்பாள் சீமாட்டியை உலகநாயகன் விடுதலைக்காகக் கண்டு பேசிய போது அச்சீமாட்டி, தானும் உலகநாயகனும் இரொட் டிக்கிடங்கிலிருந்து சுரங்க வழியாகப் பஞ்சநாதம்பிரபு வின் மாளிகைக்குச்சென்றபோது, சீமாட்டி தன் அறையி லிருந்து தப்பித்துக்கொண்டு வந்து பிரபுவினிடமிருந்த தீபத்தை யணைத்த சங்கதியைப்பற்றிக் கூறினளல்லவா, அப்போது ஜனரல் தன் சூக்கும புத்தியால் சீமாட்டியே அங்கு சிறை வைக்கப்பட்டிருக்கிறு ளென்று ஊகித்துக் கொண்டார். பிறகு ஜனரல் கிரிநாதனை இரொட்டிக்கிடங் கருகில் கண்டு அவன் மூலமாக அமராவதியும் இராஜாம் பாளும் பஞ்சநாதம் பிரபுவின் மாளிகையில் சிறையாக் கப்பட்டிருப்பதை யறிந்தபின் இலக்ஷ்மணனைக் கண்டு பயமுறுத்தி அவன் மூலமாய் மூடப்பட்டிருக்கும் அறைக் குள் ஒருவர் சிறை வைக்கப்பட்டிருக்கிறது உண்மையென்

றுணர்ந்தார். அவர் மதனம்பாள் சீமாட்டிக்குக் கடிதம் கொண்டுபோகும்படி கிரிநாதனைத் தூண்டியபோது அவன் செவிகளில் கூறிய விஷயம் "நீ சில வருடங்களுக்கு முன் பொன்னுசாமி என்பவனைச் சதிசெய்து தந்திரமாய்க் கொண்டுபோய் ஒரு அடிமை வர்த்தகனிடம் விற்றுவிட்ட சங்கதி நான் அறியாததல்ல" என்பதே. இந்த விவரங்களைக் கூறியபின் இனிக் கதையைத் தொடர்ந்து செல்வோம்.

ஜனரல் உக்கிரசேனர் "நான்தான் பொன்னுசாமி" என்றதே பிரபு திடுக்கிட்டுப் பிரமித்ததுபோலவே அரசனும் உலகநாயகனும்கூடப் பிரமித்துவிட்டார்கள். சற்று நேரங்கழித்து அரசன் பிரபுவினருகில் சென்று "பிரபுவே! இப்போது நீர் ஜனரலின்மேல் இனிக் குரோதமாவது துவேஷமாவது வஞ்சமாவது வைக்கலாகாது என்று தீர்மானித்துக்கொள்ளவேண்டும். இனி எல்லாரும் சமாதானமடைந்து நண்பராகிவிட வேண்டியதே நலம்" என்று இரகசியமாகக் கூறினார்.

அரசன் கருத்தை யறிந்த பிரபு உடனே எழுந்து சாளரத்தருகில் நின்றிருக்கும் ஜனரலிடம் சென்று, "ஜனரல்! இப்போது பழய விஷயங்கள் யாவும் மறந்து இனி நாம் சினேகமாகவே யிருக்கவேண்டுமென்பது என் விருப்பம். இதோ என் கரம்" என்று தமது வலது கரத்தை நீட்டினார்.

ஜனரல் பிரபுவின் கரத்தைப் பற்றிக்கொண்டு "பிரபுவே! உமக்கு நான் மிக்க நன்றியுடையவனாக இருக்கக் கடமைப்பட்டுள்ளேன். மிக்க உலக அனுபவமடைந்திருக்கும் இப்போது நான் வாலிபகாலத்தில் செய்த குற்றத்தின் பாரம் எத்தகையதென்று உணர்ந்து மிக்க வருத்தமடைகிறேன். நான் உமக்குப் பெரிய துன்பமிழைத்துவிட்டு என்னை மன்னிக்கவேண்டுமென்று பிரார்த்திக்கும் நிலைமையி லிருக்கிறேன். தாங்கள் பெருந்தன்மையோடு என்னை மன்னிக்கும் நிலைமையி லிருக்கிறீர்கள்" என்றார்.

பிரபு "நண்பரே! நாம் இன்றோடு பழைய சங்கதிகளை அடியோடு மறந்துவிட்டு அன்பார்ந்த நண்பர்களாக விருப்போம்" என்றார். உலகநாயகன் தன் தந்தையின் கரத்தைவிட்டு ஜனரலிடம்சென்று அவரை யாலிங்கனம் செய்துகொண்டு "என் அன்பார்ந்த நண்பரே! தாங்களே என் சிறுவயதில் என்மேல் அன்புகாட்டிய அதே பொன்னுசாமிப்பிள்ளை யென்பது உண்மைதானு?" என்றான். ஜனரல் "ஆம் நண்பனே" என்றார். உலகநாயகன் "ஆ! அதனாற்றான் தாங்கள் என்னை மறுபடி கண்டதுமுதல் என்மேல் அன்புகாட்டி எனக்கு இத்தகைய அபாரமான உபகாரம் செய்தீர். ஆ! உம்மிடம் தெய்வத்தன்மை யிருக்கிறது......" என்றபோது ஜனரல் "நீ சந்தோஷமாக விருந்தால் அதுவே எனக்குத்திருப்தி" என்றார்.

அதன் பிறகு உலகநாயகன் பிரபுவினருகிற் சென்று "ஆ பிரபுவே! ஜனரல் என் பிறப்பைப்பற்றி என்னிடம் கூறிய யாவும் உண்மையே யென்று என் தந்தை வாக்காலேயே நான் அறிந்துகொண்டேன். ஆகையால் நான் உமக்குச் சுற்றமல்ல. இனி நமக்குள் எவ்வித மனஸ்தாபமும் வேண்டாம். எப்படியாயினும் தாங்கள் எனக்குச் செய்த பல நன்மைகளுக்காக நான் எப்போதும் தங்களுக்கு நன்றி யுடையவனுகவே" யிருப்பேன் என்றான்.

பிரபு:—"இப்போது எல்லா மனஸ்தாபங்களும் நீங்கிவிட வேண்டிய காலமே" என்றார்.

அரசன் பிரபுவைநோக்கி "பிரபுவே! இப்போது இங்கு நடந்த சங்கதி இங்குள்ளவர்கள் வரையிலேயே மறைந்திருக்க வேண்டும். உலக நாயகனை நான் பகிரங்கமாகப் புத்திரனென்று அங்கீகாரம் செய்துகொள்ள முடியாது. அதற்குப் பல காரணங்களிருக்கின்றன. உலகிற்கு இவன் உமது சகோதரி புத்திரனுகவே இருக்கவேண்டும். ஆனல் இவனுடைய க்ஷேமாபிவிர்த்தியைப்பற்றி நானே கவனித்துக்கொள்வேன். பிரபுவே! தாங்கள் பிரபல சிங்கம் இராஜகுமாரியின் சந்ததியில் பிறந்தவர் என்றும் அதற்குத் தக்க அத்தாட்சி இருப்பதாகவும் பன்முறை

கூறி யிருக்கிறீர்கள். இப்போது நான் மந்திராலோசனை சபையைக்கூட்டி உமக்கு இராஜகுமார பட்டத்தைச் சொந்தமாக்கிவிடுகிறேன். உமக்குப் பின் என் புத்திர னுக்கு அது சொந்தமாகும். அதோடு அந்த அந்தஸ் திற்குத் தக்க பூமியும் உபகாரச் சம்பளமும் அளிக்கிறேன். அதுவும் உமக்குப் பின் என் புத்திரனுக்குச் சேரும். இந்த ஏற்பாட்டால் நான் உலகநாயகனுக்குக் காரண மின்றி அளவுமீறிய செல்வத்தை யளித்ததாக ஒருவரும் கருத வழியில்லை. உமக்கு இருக்கும் உமது சொந்த ஆஸ்தியை நீர் உமது பிரியப்படி செய்துகொள்ளலாம். நீர் உடனே உலகநாயகன் மனைவியைப் பகிரங்கமாக ஏற் றுக்கொள்ளும்'' என்றான்.

பிரபு மிக்க சந்தோஷமடைந்து அரசன் கட்டளைப் படி நடப்பதாக ஒப்புக்கொண்டு அரசனுக்கு நன்றியறித லான மொழிகளைக் கூறி "அரசே! தாங்கள் எனக்குச் செய்யும் இந்தப் பேருபகாரத்திற்கும் கௌரவத்திற்கும் நான் என்னால் கூடிய குறைவான நன்றியறிதலைக்காட்ட உலகநாதனை என் ஆஸ்தி முழுமைக்குமே சுதந்தரக்கார னாக இன்றே செய்துவிட்டேன்'' என்றார்.

அரசன் உலகநாயகனை யவன் மூன்றுவது வயதிற்குப் பின் காணவேயில்லை. மதனம்பாள் மாளிகையில் விருந்து நடந்ததினம்தான் கண்டான். அவன் அழகிய கம்பீர மான தோற்றத்தையும் அவனுடைய சுத்த வீரத்தன்மை யையும் கண்டதே அவனைத் தன் புதல்வனெனக் கருத அரசனுக்கு மிக்க பெருமையாகவும் சந்தோஷமாகவு மிருந்தது. அப்போதே அவனைப் புத்திரனென்று அங்கீ காரம் செய்துகொள்ளாததற்குச் சில காரணங்களிருந் தன. முதலாவது இராஜாம்பாள் அதுகாறும் தன்னைத் தெரிந்துகொள்ளவில்லை. அப்போது இவனைத் தன் புத் திரன் என்று ஏற்றுக்கொண்டால் தாய் யாரென்று கூற வேண்டும். அதை வெளியிட்டால் கர்னல் இரகுநாத ருக்கு விரோதம் நேரிடும். அவர் தன் விரோதக்கட்சி

யைச் சேர்ந்தவர். இவை யாவும் ஆலோசித்தே அரசன் அப்போது அவனை யேற்றுக்கொள்ளவில்லை.

ஆனால் உடனே யவனை யுத்தியோகத்தில் உயர்த்தினதும் அவன் க்ஷேமத்தைக் கவனித்து வந்ததும், பிறகு தன் புத்திரனாகிய அவன் சாதாரண அந்தஸ்திலுள்ளவரும் தன் எதிர்க் கட்சியைச் சேர்ந்தவருமாகிய கர்னல் இரகுநாதரின் புத்திரியை மணம்புரிய வொட்டாமல் தடுக்க முயன்றதும் நேயர்களறிந்த விஷயங்களே.

பிறகு அரசன் பிரபுவைநோக்கி "பிரபுவே! தாங்கள் கொன்றுவிட்டதாகக் கருதி யிருக்கும் மனிதன் உலகில் இவ்வளவு பிரக்கியாதியடைந்து பிரகாசித்துக்கொண்டிருக்கையில் தாங்கள் அதைச் சற்றேனும் அறிந்துகொள்ளாமலிருந்தது எனக்கு மிக்க வியப்பாகவே யிருக்கிறது" என்றான்.

பிரபு:—அரசே! அது எனக்கும் மிக்க அதிசயமாகவே யிருக்கிறது. அதில் ஏதோ மர்மம் இருக்கவேண்டும். அது ஜனரலால்தான் வெளிப்படவேண்டும்.

அரசன்:—"ஆகையால் நீங்கள் இருவரும் கலந்து பேச வேண்டிய விஷயம் சில இருக்கின்றன. பேசுங்கள், நானும் என் புத்திரனுக்குச் சில விஷயங்களைப்பற்றிக் கூறவேண்டி யிருக்கிறது" என்று கூறி உலகநாயகனை யழைத்துக்கொண்டு தன் இரகசிய அறைக்குச் சென்றான். அங்கு சென்றதும் தன் புதல்வனை நோக்கி "மகனே! இப்போது நான் உன் தாயைப் பகிரங்கமாக ஏற்றுக்கொள்வதாவது, இங்கு வரும்படி செய்வதாவது தகுதியல்லவென்று எனக்குப் புலப்படுகிறது. அக்காரணத்தாலேயே நான் உன்னைப் பகிரங்கமாக ஏற்றுக்கொள்ள அஞ்சுகிறேன். மதனம்பாள் சீமாட்டி, குமுதவல்லிச் சீமாட்டி யிவர்களெல்லாம் அரசனுக்கு வைப்பாட்டி யென்ற பதவியைப் பெருமையாகக் கருதுகிறவர்கள். உன் தாயாரும் அவள் குடும்பத்தாரும் அப்படிப்பட்டவர்களல்ல......" என்றதே,

உலகநாயகன்:—"தந்தையே! என் தாயையும் அவர்கள் குடும்பத்தையும்பற்றித் தாங்கள் இவ்வளவு கௌரவமாகக் கருதுவதற்காக நான் மிக்க வந்தனமளிக்கிறேன். தாங்கள் இப்போது செய்ததேபோதும். தங்களுக்கு எப்படி யுக்தமாகத் தோன்றுகிறதோ அவ்வாறே செய்யுங்கள். அவ்வளவோடேயே நான் பூரணதிருப்தியடைவேன். எனக்குத் தங்கள் அன்பு மட்டுமே வேண்டும்" என்றான்.

அப்போது தான் முதல் தடவையாக அரசன் மனங் கனிந்த அன்பு இன்னதென்பதை யுணர்ந்தான். உடனே புத்திரனை யாலிங்கனம் செய்துகொண்டு "குழந்தாய்! என் தாயாருக்குப்பின் உன்மேல்தான் எனக்கு மனமொத்த அன்பு உதித்திருக்கிறது. உனக்கு கர்னல் பதவிகொடுத்து ஒரு படைக்குத் தலைவனாக்கி விடுகிறேன். உனக்கு விருப்பந்தானா?" என்றான்.

உலகநாயகன் "தந்தையே! இனி நிம்மதியாகக் காலத்தைக் கழிப்பதே எனக்குப் பிரியமாக விருக்கிறது. ஆயினும் தங்கள் அன்பிற்காக மிக்க வந்தனமளிக்கிறேன்" என்றான். அரசன் "உன் விருப்பம் அப்படியாயின் அவ்வாறே யிருக்கட்டும். நீ அப்போதைக்கப்போது வந்து என்னைப் பார்த்துப்போ. நீ விரும்பி மணம் புரிந்த அக்கன்னிகை தக்க யோக்கியதை யுடையவளாகவே யிருப்பாளென்பது நிச்சயம். அவளை யென் மருமகளாக வரவேற்க எனக்கு ஆசையாக விருக்கிறது. ஆகையால் நீ வரும்போதெல்லாம் என் மருமகளையும் அழைத்துவா; இப்போது நான் செய்வதோடும் இனி செய்யப்போவதோடுமே திருப்தி யடையும்படி உன் தாயாரை நான் வேண்டிக்கொண்டதாகக்கூறு" என்றான்.

நேயர்களே தன் தந்தை கூறிய இம்மொழிகளால் உலகநாயகன் மிக்க சந்தோஷமும் திருப்தியுமடைந்தானென்று நாம் கூறவேண்டுவதின்றாம். இவர்களிருவரும் இங்கு பேசிக்கொண்டிருக்கையில், பிரபு ஜனரலை நோக்கி "நண்பரே! நீர் எவ்வாறு அப்போது என் மாளிகையி

லிருந்து தப்பித்துக்கொண்டு போய்விட்டீரோ அதை யறிய விரும்புகிறேன்" என்றார். அதன்மேல் உக்கிர சேனர் கிரிநாதனும் இலக்ஷ்மணனும் தன்னைக் காப்பாற் றிய விவரத்தைக்கூறி, "பிரபுவே! எனக்கு அவர்கள் உதவி செய்திருக்கிறவரையில் அவர்களுக்கு இந்த விஷ யத்தில் ஒரு கெடுதியும் நேரலாகாது" என்றார்.

பிரபு:—"இது எல்லாக் குற்றங்களும், கோபங்களும் மறக் கப்பட்டுப்போய் யாவரும் சமாதான மடையவேண் டிய காலம். ஆகையால் அவர்களுக்கு நான் ஒரு கெடு தியும் செய்யமாட்டேன். ஆனால் இச்சங்கதி யெனக் குத் தெரிந்துவிட்ட தென்று அவர்களுக்கு அறிவிக்க மட்டும் எனக்கு அனுமதி யளிக்கவேண்டும். ஏனெ னில், என் பயங்கர இரகசியம் அவர்களிடம் சிக்கி யிருக்கிறது என்ற பீதி என்னைவிட்டு நீங்கிவிடும்" என்றார். ஜனரல் அவ்வாறே ஒப்புக்கொண்டார்.

அதன்பிறகு ஜனரல் உக்கிரசேனரும், உலகநாயகன், பஞ்சநாதம்பிரபு மூவரும் அரசனிடம் விடை பெற்றுக் கொண்டு அங்கிருந்து புறப்பட்டு ஜனரலின் மாளிகைக் குச் சென்றார்கள். பஞ்சநாதம்பிரபு தாம் அமராவதி யிடம் நடந்துகொண்டிருக்கும் மாதிரிக்கு இப்போது அவள் முகத்தில் விழிக்கவே மிக்க அச்சங்கொண்டார். ஆனால் உலகநாயகனும் ஜனரலும் "இப்போது எல்லா ருமே பழைய விஷயங்களை மறந்துவிட்டு இனிச் சிநேகபாவமாகவே நடந்துகொள்ளவேண்டும்" என்று கூறியபடியால் மனந்தேறி அவர்கள் கூடச் சென்றார்.

186485
சென்னை-600 009
186485

70-வது அத்தியாயம்

தாயும் மகனும் சந்தித்தல்—ஜனரல் நாட்டை விட்டுச் செல்லல்—புதிய சதியாலோசனைகள்-ஜேயசிங்கன் என்ற இராஜகுமாரனும் கர்னல் இரவணப்பனும்—இரண்டு சதிக்காரத் துரோகிகளும் ஒப்பந்தம் செய்துகொள்ளல்—இன்னொரு சதிக்காரத் துரோகியாகிய பிச்சையன்

பிரபுவும் மற்றவர்களும் வீட்டிற்கு வந்ததைக் கண்டபோது அமராவதி, அவள் தாய், முதலியவர்கள் அடைந்த வியப்பிற்கு அளவேயில்லை. பிறகு நடந்த சங்கதிகளை யெல்லாங்கேட்டு தன் கணவன் தன் அத்தையாரின் புதல்வனென்றும் அரசன் மகனென்றும் உணர்ந்ததே அமராவதி வியப்பும் ஆனந்தமும் அடைந்தாள். பிரபு இராஜாம்பாளிடம் மெதுவாக உலகநாயகன் அவள் மகனே யென்றும் அரசன் அவனை அங்கீகாரம் செய்து கொண்டு அவன்மேல் மிக்க அன்பு வைத்திருப்பதையும் கூறினர். அம்மாது ஆனந்தக்கண்ணீர் சிந்தினுள். தாயும் மகனும் ஆலிங்கனம் செய்துகொண்ட காட்சி யாவர் கண்களிலும் நீர் வடியச் செய்தது. பிறகு கர்னல் இரகுநாதர் யாவும் கேள்விப்பட்டபோது தான் அரசன் மூலமாக அறிய முயன்ற சங்கதி இவ்வளவு சந்தோஷகரமாக முடிந்ததை யறிய மிக்க ஆனந்தமடைந்தார். தன் மருமகன் தன் சகோதரியின் புதல்வனுக விருப்பது அவருக்கு மிக்க சந்தோஷத்தை யுண்டாக்கியது. அன்று அக்குடும்பத்தில் யாவரும் ஆனந்தக்கடலில் முழுகினவர்களாகி இதற்குக் காரணமாக விருந்த ஜனரல் உக்கிரசேனரைப் போற்றி வாழ்த்தினர்கள். இரண்டு மூன்று நாட்கள் கழிந்ததும் ஜனரல் மேற்குநாட்டில் தமக்களிக்கப்பட்ட வேலையை யொப்புக்கொள்ளப் புறப்பட்டார். அதற்கு முன் இராஜாம்பாள் ஜனரலிடம் இரகசியமாக இரொட்டிக்கிடங்கில் அரசனையும் அவன் சகோதரனையும் சிறையாக்கும்படி நடந்த சதியாலோசனை விஷயத்தை விவரமா

கக் கூறினள். ஆனல் தான் கூறியதாகத் தன் தமைய னிடம் கூறவேண்டாமென்று வேண்டிக்கொண்டாள்.

அவ்வாறு கூறுவதால் கர்னலுக்குத் தன் தங்கைமேல் வெறுப்புண்டாகுமென்றுணர்ந்த ஜனரலும் அவ்வாறே கூறுவதில்லையென்று அம்மாதுக்கு வாக்களித்தார். ஆனல் அவர் தமது பரிவாரத்தோடு கப்பலேறப்போகும் தினம் கர்னலிடம் நெடுநேரம் இரகசியமாகப் பேசிய போது தான் ஊருக்குச் செல்வதால் முன்கூறியபடி இன்னெருமுறை யெச்சரிக்கை செய்ய விரும்புவதாகக் கூறி அரசனுக்கு விரோதமான காரியம் ஒன்றும் செய்யவேண்டாம் என்று கர்னல் இரகுநாதர் மனதில் படும்படி தக்க காரணங்களோடு கூறினர். ஆனல் கர்னல் முன்பு நடந்த சங்கதி ஜனரலுக்குத் தெரிந்திருக்கிறதென்று சந்தேகிக்கக்கூடாத மாதிரியே கூறினர். ஜனரல் கப்பலிலேறிய போது யாவரும் அவர் பிரிவாற்றமாட்டாது கண்கலங்கினர்கள்.

* * * * *

இச்சம்பவங்கள் நடந்து இரண்டு மாதங்கள் கழிந்தன. இடையில் விசேஷமொன்றும் நடக்கவில்லை. ஆனல் ஒரு சம்பவம்மட்டும் குறிக்கத்தக்கது. அதாவது மறுபடி சிறை செய்யப்பட்ட கர்னல் குமரவேல் சிறையிலிருந்து தப்பித்துக்கொண்டுபோனதற்காக ஆறுவாரங்கள் காவற்றண்டனையும் ஆயிரம் ரூபா அபராதமும் விதிக்கப்பட்டான். குமுதவல்லிச் சீமாட்டி "நீ என்னைப்பற்றி ஒரு பிரஸ்தாபமும் நீதிச்சபையில் வெளியிடாதிருந்தால் நான் இனியும் உன்னை யென் சினேகர்களில் ஒருவராக ஏற்றுக்கொண்டு என்னலான உதவி செய்வேன்" என்று குமரவேலுக்கு ஒரு கடிதம் எழுதி யிருந்தாள்.

கர்னல் குமரவேல் அவ்வாறே நடந்துகொண்டான். அதன்மேல் குமுதவல்லிச் சீமாட்டி அவனுக்கு விதிக்கப்பட்ட அபராதப்பணத்தைக் கட்டிவிட்டாள். சிறைவாசத்தண்டனை முடிந்ததே குமரவேல் குமுதவல்லிச் சீமாட்டி யிடம் சென்றுன். இவர்களிருவரும் நெடுநேரம்

ஒரு விஷயத்தைப்பற்றி ஆலோசனை செய்தார்கள். கடைசியில் அப்போது தீர்மானித்தபடி சீமாட்டி குமரவேலிடம் ஒரு பை நிறையச் சவரன்களை யளித்தாள். உடனே அவன் நெடுந்தூரம் பிரயாணத்திற்கு ஆயத்தமாகிப் புறப்பட்டான். அதென்ன விஷயமென்பது பின்னால் தெரியும்.

ஜனரல் உக்கிரசேனர் சென்று இரண்டு மாதங்களாயின வென்றோம். ஒருநாள் மாலை ஏழுமணிக்கும் எட்டுமணிக்குமிடையில் நகரவோரத்திலுள்ள ஒரு பெரிய தோட்டத்திலிருக்கும் விசாலமான பாதையில் ஒரு மனிதன் சென்றுகொண்டிருக்கிறான். இரகசியமேன், அவன் சுத்த சிங்க அரசனுடைய சகோதரன் ஜெயசிங்கனே. அவன் நிதானமாகவே ஏதோ சிந்தித்துக்கொண்டே செல்கிறான். அவன் சற்றுதூரம் சென்று பாதையின் இடதுபுறம் சற்று தூரத்தில் கும்பலாக நான்கைந்து விருட்சங்களிருக்கும் இடத்திற்குச் சென்று அங்கு மறைவில் உட்கார்ந்திருந்த ஒரு மனிதன் முன் நின்றான்.

இராஜகுமாரனைக் கண்டதே அம்மனிதன் தட்டென்றெழுந்து மரியாதையோடு குனிந்து வந்தனமளித்தான். அம்மனிதன் நமது நண்பர்களுக்குத் தெரிந்த கர்னல் இரவணப்பனே. ஜெயசிங்கன் அவனை நோக்கி "நீ கடிதத்தில் மிக்க மரியாதையோடும் வணக்கத்தோடும் எழுதியிருந்ததோடு, ஏதோ முக்கியமான விஷயத்தைப்பற்றிக் கூறப் போவதாக எழுதி யிருந்ததால் நான் வந்தேன். ஆனால் தந்திரமாக என்னை யிக்கட்டிற் சிக்கவைக்கலாம் என்று கருதாதே. இதோபார் சற்று தூரத்தில் நம்பிக்கையுள்ள என்னாட்கள் நால்வர் ஆயுதங்களோடு தயாராக விருக்கிறார்கள். பத்திரம்" என்றான்.

கர்னல் இரவணப்பன் "அரசே! தாங்கள் என்னைப் பற்றிக் கருதுவது பெருந்தவறு. இச் சமயத்தில் தங்களுக்கு உதவிசெய்ய ஆவலோடிருப்பவன் என்போலொருவனுமில்லை. நான் தங்களுக்குத் துன்பம் செய்வதைவிட என் கழுத்தையே யறுத்துக்கொள்வேன்" என்றான்.

ஜெயசிங்கன், "இது மிக்க வியப்பே! பெரிய கட்சியைச்

சேர்ந்தவர்களில் ஒருவனும், அரசன்மேல் வெறுப்புடைய வனும், அரசனுக்குக்கெடுதி செய்ய விருப்பமுடையவனும் ஆகிய நீ இப்படி நேர்மாறுகத் திரும்பிவிட்ட காரணம் என்ன?'' என்றான்.

இரவணப்பன்:—சரி. இப்போது நம்மிருவர் உள்ளக் கருத்தையும் ஒருவருக்கொருவர் அறிந்துகொள்ள வேண்டும்'' என்றான்.

ஜெய:—உன் கருத்தையே நான் அறியவேண்டும்.

இரவ:—அப்படியே யிருக்கட்டும். இப்போது நான் கூறுவதில் எவ்விதச் சூதுவாதுமில்லை. வெளிப்படையாகவே கூறுகிறேன். பெரிய கட்சியாவது சின்னக் கட்சியாவது கைக்குப் பணம் கிடைக்காதவரையில் எக்கட்சியைப் பற்றியும் எனக்கு அக்கறையே யில்லை. இச்சமயத்தில் என்னிடம் ஒரு காசுகூட இல்லை. யார் என் ஜேபியில் பணம் கொட்டுகிறார்களோ அவர்கள் கட்சிதான் நான்.

ஜெய:—சரி. நீ யொளிக்காமல் உன் அபிப்பிராயத்தைக் கூறியது நல்லதாயிற்று. கபடமும் வஞ்சகமும் உள்ளே வைத்துக்கொண் டிருப்பவனைவிட மனம் விட்டுக்கூறும் எதிரியை நம்பலாம்.

இரவ:—ஆம், அது உண்மையே. அரசே! தங்கள் காலின் கீழ் சுரங்கங்கள் வெட்டிக் கொண்டே யிருக்கிறார்கள். தாங்கள் ஒரு ஆபத்துமில்லை யென்ற நம்பிக்கையோடு நிம்மதியாக உலவிக்கொண்டிருக்கிறீர்கள்.

ஜெய:—என்ன? சதியாலோசனைகள் நடந்து கொண்டிருகின்றனவா? அவற்றை வெளியிடவா வந்தாய்?

இரவ:—ஆம் அரசே. ஜனங்கள் வாயில் தங்கள் பெயரே யிருக்கிறது. தாங்கள் பழைய மதச்சார்புடையவர்களென்றும், தாங்கள் பட்டத்திற்கு வந்தால் அம்மதத்தை யனுசரிக்கும்படி ஜனங்களைப் பலவந்தம் செய்து வருத்துவீர்களென்றும், ஆகையால் தங்களைப் பட்டத்திற்கு வாராதபடி தடுத்து விடவேண்டு

மென்றும் எங்கும் சதியாலோசனைகள் நடந்து கொண்டிருக்கின்றன. இதுவே நான் கூறும் உண் மையான சங்கதி.

இம்மொழிகளைக் கேட்டதே ஜெயசிங்கன் மனங் கலங்கி விட்டது. ஏனெனில் அவன் முன்னமே கேள்விப் பட்டிருக்கும் சங்கதிகளை யிது உறுதிப்படுத்திற்று. அத ளுல் அவன் "ஆ! ஜனங்கள் அப்படியா நினைக்கிறார்கள்?" என்றான்.

இரவ:—ஆம். தங்களைப் பட்டத்திற்கு வராமல் தடுத்து விட்டுக் குமுதவல்லிச் சீமாட்டியின் புத்திரனைச் சிம் மாதனத்திலேற்ற ஏற்பாடுகள் நடக்கின்றன. நான் தங்களுக்கு எச்சரிக்கை செய்யவும் உதவி செய்ய வுமே வந்தேன்.

ஜெய:—இதில் எனக்கு நீ என்ன விதமாக உதவி செய் வாய்?

இரவ:—"அரசே! இவ்விஷயத்தில் யாவும் பகிரங்க மாகக் கூறினால்தான் விளங்கும். இன்றேல் பேசுவதி லேயே பயனில்லை. பிறகு தாங்கள் என் மேல் விரோதியாய்த் திரும்பிக்கொண்டு நான் அரசனுக் குத் துரோகம் செய்யக்கருதியதாய் என்னைப் பிடித்து..." என்பதற்குள்,

ஜெயசிங்கன்:—"அப்படி யொருபோதும் செய்யமாட் டேன். நீ தாராளமாக எதையும் கூறு" என்றான்.

இரவ:—அரசே! என்னைப்போல் பணம் கொடுத்தால் எதையும் யோசியாமல் எக்கட்சியிலாயினும் சரி எவர்களோடாயினும் சரி சேர்ந்து துணிகரமாக வேலை செய்ய ஆயத்தமாக விருக்கிறவர்கள் அனே கர் என் வசத்திலிருக்கிறார்கள்.

ஜெய:—சரி, தெரிகிறது. அவர்களைச் சேர்த்து எவ்வித மாக உபயோகிப்பாய்?

இரவ:—ஏன்? உங்கள் புத்தியிற் புலப்படவில்லையா? தங் கள் தமையன் இறக்குமட்டும் தாங்கள் பட்டம் பெறக் காத்துக்கொண் டிருக்கலாகாது. தாங்கள்

சிம்மாதன மேறுவதை அரசராவது, அவருக்குக் குமுதவல்லிச் சீமாட்டியிடம் பிறந்த பிள்ளையாவது தடுக்க முடியாதபடிசெய்து விடவேண்டும்.

ஜெயசிங்கன்:—எப்படித் தடுப்பது?

இரவ:—ஏன்? உடனே தாங்கள் சிம்மாதனத்தில் உட்கார்ந்து கொள்வதால்.

ஜெயசிங்கன் "அது எப்படி நிறைவேறும்." என்று கூறிவிட்டு இரவணப்பனை யுற்று நோக்கினன்.

இவன் கூறுவது முழுமையும் உண்மைதானு? இவனை நம்பலாமா என்பது அவன் யோசனை. இரவணப்பனே நாம் கூறுகிற ஆலோசனைக்கு இவன் உடன் படுவானு என்று உற்று நோக்கினன். இவ்வாறு ஒருவரை யொருவர் சற்று உற்று நோக்கிய பின் இரவணப்பன் ஜெயசிங்கனை நோக்கி,

"அரசே! தாங்கள் என் யோசனையை யங்கீகாரம் செய்யாவிடின் கடைசியில் தங்கள் தமையன் அன்னியரால் பலவந்தப்படுத்தப் பட்டுத் தங்களை நிராகரித்து விட்டுக் குமுதவல்லிச்சீமாட்டியின் புத்திரனே தனக்குப் பின் சிம்மாதன மேறவேண்டுமென்று கூறிவிடுவது மட்டுமல்ல. தான் இருக்கும் போதே அவனை அரசனுக்கி விடும்படி பலவந்தப் படுத்தப் படுவார்" என்றான்.

இவையாவும் கேட்ட ஜெயசிங்கன் உள்ளத்தில் மிக்க திகிலடைந்து கர்னல் இரவணப்பன் உதவியை யேற்றுக்கொள்ள வேண்டு மென்று தீர்மானித்துக் கொண்டு "கர்னல்! நீ கூறுவது எனக்கு விளங்குகிறது. ஆனல் நீ செய்யும் உதவி யின்னதென்று இன்னும் சற்று தெளிவாக எனக்கு நன்கு விளங்கும்படி கூறவேண்டும்" என்றான்.

இரவ.—"அரசே! நான் யாவும் பகிரங்கமாகக் கூறவேண்டும். ஆனல் பிறகு அதனல் எனக்கு..." என்பதற்குள்,

ஜெய:—"நான் மறுபடி கூறுகிறேன். நீ யெதையும் அச்சமின்றித் தாராளமாகக்கூறு. நீ எந்தச் சங்கதி

கூறினும் நான் உன் மேல் கோபிப்பதுமில்லை, உன்னைக் காட்டிக்கொடுப்பதுமில்லையென்று உறுதியாகக்கூறுகிறேன்'' என்றான்.

இரவ:—“அரசே! தாங்கள் அனுமதியளித்தால் நான் கூறியமாதிரி யாட்கள் நூற்றுக்கணக்கானவர்களிருக்கிறார்கள். இவர்களில் பாதிப்பேர் குறித்த காலத்தில் குமுதவல்லிச் சீமாட்டியின் புத்திரரைப் பிடித்துப் போய் ஒரு இடத்தில் மறைத்து வைத்து விடுவார்கள். மற்றப்பாதிப்பேர் என்னால் நடத்தப் பட்டுத் திடீலென்று அரண்மனைக்குள் நுழைந்து அரசனைப் பலவந்தப்படுத்தியுடனே தங்களுக்காகச் சிம்மாதனத்தைக் காலி செய்துவிடும்படி பலவந்தப் படுத்தப்படுவார். உடனே மற்றச் சதியாலோசனை யெல்லாம் பறந்துபோய்விடும். இராஜரத்னம் பிரபு வல்ல, அவர் நண்பர்களாகிய, சேனாநாதப்பிரபு இரங்கநாயகப்பிரபு, சூரியநாதம் பிரபு, ஸர்தார் பெரிய சாமி ஆகிய எல்லார் சதியாலோசனைகளும் பயனற்றனவாகப் போய் விடும்'' என்றான்.

ஜெயசிங்கன் இதைக்கேட்டதே பின்னும் திகிலடைந்து, “என்ன? இப்போது நீ கூறிய பிரபுக்களெல்லாமா எனக்கு விரோதமாகச் சதியாலோசனை செய்கிறார்கள் என்கிறாய்?'' என்றான்.

கர்னல் இரவணப்பன் “ஆம். ஆம் சத்தியமாகவே. நானும் அவர்களில் ஒருவனாகக் கலந்துகொண் டிருக்கிறேன். ஏன்! சரியான விலை கிடைத்தால் இவர்களனைவரையும் கூண்டோடு காட்டிக் கொடுத்துவிடுவேன். தங்களுக்கு என் போன்ற உதவி யெங்கும் கிடைக்காது. ஏனெனில் முதலாவது கலகக்காரரின் ஆலோசனைகள் யாவும் எனக்கு நன்றாய்த்தெரியும்; இரண்டாவது, உத்தரவு கொடுத்தால் இரண்டு வாரங்களுக்குள் ஐந்நூறு அறுநூறு ஆட்கள், பொறுக்கான ஆசாமிகளைச் சேகரம் செய்து விடுவேன். பணம் கிடைக்கிறவரையில் அவர்கள் நான் நெருப்பில் இறங்கச்சொன்னாலும் இறங்கு

வார்கள். தங்களுக்குப் பட்டம் கட்டும் சமயம் நெருங்கும் போது மேற்படி பிரபுக்களுக்கெல்லாம் தக்க ஒரு கதை கூறி, இங்கு நகரத்தில் தங்கள் விஷயம் ஒரு தடையுமின்றி நிறைவேறும் வரையில் அவர்கள் கவனம் முழுமையும் வேறிடங்களிலும் வேறு விஷயங்களிலும் செல்லும்படி செய்வேன்'' என்றான்.

யாவும் கேட்ட ஜெயசிங்கன் இவன் உதவியைப் பெறுவதே சரி யென்று தனக்குள் தீர்மானித்துக் கொண்டு "சரி இந்த ஏற்பாட்டின்படி நான் ஒப்புக் கொள்வதாயின், நீ செய்யும் இவ்வுதவிக்காக நீ என்ன வெகுமதி எதிர்பார்க்கிறாய்?

இரவ:—அரசே! கௌரவமான ஒரு பட்டமும், தாராளமான உபகாரச்சம்பளமும். எவ்வளவு அதிக தாராளமோ அவ்வளவும் சிறந்ததே.

ஜேயசிங்கன்:—நீ கேட்பது நியாயமானதே. இப்போது இந்த ஏற்பாட்டின்படி செய்ய எவ்வளவு பணம் வேண்டும்?

இரவ:—"தாராளமான பணமும் தங்கள் கைப்பட எழுதிய கட்டளையும்'' என்றான்.

ஜெயசிங்கன் எழுதியகட்டளை யென்றதே கலக்கமடைந்தான். இரவணப்பன் வாக்கின்படிக்கே அவன் யார் அதிகப் பணம் அளிக்கிறார்களோ அவர்கள் பக்கம் திரும்பிவிடுகிற குணமுடையவன் என்று தெரிகிறது. இவனிடத்தில் கைப்பட அத்தகைய கடிதத்தை யெழுதிக் கொடுத்துவிட்டால், இவன் உடனே நல்ல பரிசு பெறலாம் என்று கருதி நேராக அரசனிடம் சென்று அதைக் காட்டி விட்டால் என் செய்வது என்று ஜெயசிங்கன் சிந்தித்து "அம்மாதிரி யொன்றும் எழுதிக் கொடுக்க முடியாது. பணம் வேண்டுமாயின் அளிக்கிறேன்'' என்றான்.

இரவ:—"அப்படியாயின் ஒரு பயனுமில்லை. நானும் ஒன்றும் செய்ய முடியாது'' என்றான்.

ஜெயசிங்கன் சற்று ஆலோசித்து "பணந்தான்

வேண்டும், என் கைப்பட உத்தரவேன்?" என்றான். இரவணப்பன் "அரசே! அதற்கு இரண்டு மூன்று காரணங்களிருக்கின்றன. முதலாவது நான் சேகரிக்கும் ஆட்கள், பெரிய கட்சியில் இதுகாறு மிருந்து உறுதியோடு வேலை செய்துகொண்டிருந்த நான் இப்போது திடீலென்று தங்கள் கட்சியில் திரும்பிவிட்டேனென்று நம்பமாட்டார்கள். இரண்டாவது உயிருக்குத்துணிந்து இத்தகைய விவகாரத்தில் தலை யிட்டுக்கொண்டால் இது நிறைவேறியதும் சரியான ஊதியம் நமக்குக் கிடைக்குமென்று அவர்களுக்கு நம்பிக்கை யுண்டாகாது. தங்கள் கைப்பட எனக்களித்த கட்டளையைப் பார்த்தால் மேற்கண்ட சந்தேகங்களிரா. மூன்றுவது, அரசர்கள் எப்போதும் மேலே யேறியதே அப்படியேற உதவியாகவிருந்த ஏணியை யுதைத்துத் தள்ளிவிடுவது சுபாவம். ஆகையால் தங்கள் கட்டளை கையிலிருந்தால் எனக்கு வாக்களித்த பரிசை யளிக்கவேண்டுமென்று தங்களுக்கு நினைப்பூட்ட எனக்கு அனுகூலப்படும். நான் மனம்விட்டு உண்மையைக் கூறுகிறேன்" என்றான்.

ஜெயசீலன் "நீ யுடனே அரசனிடம் சென்று நான் கொடுக்கும் கட்டளையைக் காட்டிவிடமாட்டாயென்பது என்ன நிச்சயம்?" என்றான்.

இரவ:—"தாங்கள் கேட்பது நியாயமே. அந்தச் சந்தேகம் தீர நான் என் உயிரையே தங்கள் கையில் வைத்து வைக்கிறேன். அதாவது சுமார் இரண்டு மாதங்களுக்கு முன் நான் ஒரு சதியாலோசனையில் சேர்ந்திருந்தேன். அந்த ஆலோசனை அரசரையும் தங்களையும் சிறையாக்கிக்கொண்டு அரசன் சில நிபந்தனைகளை யொப்புக்கொண்டு அவற்றின்படி நடப்பதாக வாக்களிக்கும்படி செய்வதற்காக" என்று கூறியபிறகு இரொட்டிக்கிடங்கில் நடந்த சங்கதிகள் யாவும் ஆதியோடந்தமாகக் கூறிவிட்டான்.

யாவும் கேட்ட ஜெயசிங்கன் மிக்க வியப்படைந்து தான் சிக்கிக்கொள்ள விருந்த ஆபத்தை நினைத்துப் பீதி

யடைந்து, கடைசியில் தப்பித்துக் கொண்டோமென்று மனதைத் தேற்றிக்கொண்டு கர்னல் இரவணப்பன் கேட்டபடி "தனக்காக வேலைசெய்ய ஆட்களைச் சேகரிக்கும்படி கர்னல் இராவணப்பனுக்குத் தான் அதிகாரம் கொடுத்திருப்பதாயும், அவன் செய்யும் ஏற்பாடுகளெல்லாம் தான் செய்ததாகவே கருதப்படுமென்றும், அக்காரியம் முடிந்தபின் யாவர்க்கும் அவன் வாக்களிக்கிறபடி திருப்தியாகப் பரிசளிக்கப்படும் என்பதற்குத் தான் உத்தரவாதியென்றும்" எழுதிக்கொடுத்ததோடு, தன் கையிலிருந்த பணப்பையையும் கொடுத்தான். இனிமேல் ஒருவருக்கொருவர் சமாசாரப் போக்குவரத்திற்கு வேண்டிய ஏற்பாட்டைச் செய்துகொண்டபின் இருவரும் பிரிந்து சென்றார்கள். இரவணப்பன் ஆனந்தத்தோடு தன் வளவிற் கேகினன்.

அப்போது ஸர்தார் சாந்தலிங்கம் என்பவர் இலவணபுரி இராஜ்ஜியத்தின் உள்நாட்டு மந்திரியாக விருந்தார். அவர் சின்னக்கட்சியைச்சேர்ந்த தீக்ஷண்யமான அவயவி. கர்னல் இரவணப்பனும் ஜெயசிங்க இராஜகுமாரனும் சந்தித்த மறுநாள் பிச்சையப்பன் என்பவன் ஸர்தாரின் மாளிகைக்குச்சென்று அவரைக்கண்டான். பிச்சையப்பன் என்பவன் தோல் பதன்செய்து வியாபாரம் செய்பவன். இவன் இரொட்டிக்கிடங்கில் நடந்த சதியாலோசனையில் சேர்ந்தவன். அரசனையும் அவன் சகோதரனையும் சிறைப்படுத்த முயற்சி செய்யப்பட்டதினம் இவனும் அங்கிருந்தவன். அதற்கு முன் இவன் சின்ன கட்சியைச் சேர்ந்தவனாகவிருந்து கொஞ்சநாட்களுக்கு முன்பே பெரிய கட்சியில் சேர்ந்துகொண்டான். இவன் அப்படிச் செய்தது விஷய உணர்ச்சியால் என்று கருதப்பட்டது.

பிச்சையன் ஸர்தார் சாந்தலிங்கத்தினிடம் வந்து ரொட்டிக்கிடங்கில் நடந்த சதியாலோசனையைப் பற்றி அவருக்கு அறிவித்துவிட்டான். அவன் அப்படிச்செய்ததன் காரணம் என்னவெனில் அவன் மிக்க கோழை; ஒரு சமயம் நடந்த சங்கதி துரைத்தனத்தாருக்குத் தெரிந்து

விட்டால் மற்றவர்களோடு தனக்கும் கொடிய தண்டனை கிடைக்குமாதலால் தானே முன்னடி யறிவித்துவிட்டால் தன்னை இராஜாங்க சாட்சியாக எடுத்துக்கொண்டு மன்னிப்பளிப்பார்கள் ஆகையால் அவ்வாறு செய்தான்.

மந்திரி அவன் யாவும் விவரமாகக்கூறினல் அவனை மன்னித்து விடுவதாக வாக்களித்து அதில் சேர்ந்தவர்களின் பெயர்களையும், இரொட்டிக்கிடங்கில் அவர்கள் கூட்டம் கூடிய அறை முதலிய விடங்களின் விவரமும் அறிவிக்கும்படி கேட்டார். அவற்றை யெல்லாம் ஒரு கடிதத்தில் எழுதிக்கொண்டு வந்து கொடுக்கும்படி கூறினர். பிச்சையன் அவ்வாறே யெழுதிக்கொண்டு வருவதாகக்கூறிச்சென்றான். அவன் அவ்வாறே இரொட்டிக்கிடங்கில் வந்து கூடியிருந்தவர்களின் பெயர்களையும், இராஜரத்னம், பிரபு அவர் கூட்டாளிகளின் பெயர்களையும், இரொட்டிக்கிடங்குக் கட்டிடத்தின் படத்தையும் எழுதிக்கொண்டுபோய் மறுநாள் அவரிடம் அளித்தான்.

அன்று பிச்சையன் மந்திரியின் வீட்டிற்குள் நுழையும்போது கர்னல் இரவணப்பன் தற்செயலாய் அவ்வீதி வழியே சென்றுகொண் டிருந்தான். பிச்சையன் மந்திரியின் வீட்டிற்குள் நுழைவதைக்கண்டதே அவன் சந்தேகித்து அங்கு நின்று அவன் வெளி வருமட்டும் காத்திருந்தான். அவன் வர இரண்டு மணி நேரம் சென்றது. அதனல் கர்னலின் சந்தேகம் ஸ்திரப்பட்டது. இவன் சதியாலோசனைச்சங்கதியைப் பற்றித்தான் மந்திரிக்குக்கூறச் சென்றான் என்று அவன் மனதிற்பட்டது.

பிச்சையன் வெளியில் வந்ததும் கர்னல் இரவணப்பன் அங்கு நிற்பதைக் கண்டு திடுக்கிட்டான். கர்னல் அவனை நோக்கி "நண்பனே! நீ இவ்வளவு நேரம் மந்திரி யிடம் பேசிக்கொண்டிருந்ததை நோக்க ஏதோ மிக முக்கியமான விஷயத்தைப்பற்றியே பேசி யிருக்க வேண்டும். விசேஷம் என்ன? ஏதேனு மிருந்தால் நண்பனகிய என்னை மறவாதே" என்றான்.

ஸர்தார் சாந்தலிங்கம் பிச்சையனிடம் "நீ யொரு

சாட்சி மட்டும் போதாது. உன் நண்பரில் தக்கவர்களாகப் பார்த்து இன்னும் இரண்டு மூன்று நண்பர்களையும் இராஜாங்க சாட்சியாகத் திரும்பிவிடும்படி ஏற்பாடு செய். அவர்களுக்கும் மன்னிப்புக் கிடைக்கும்படி செய்கிறேன்'' என்று கூறியிருந்தார். அதனால் பிச்சையன் கர்னல் இரவணப்பனிடம் வெளிப்படையாக ஒன்றும் கூறாமல்,

''மனிதர் ஒவ்வொரு சமயங்களில் தங்கள் அபிப்பிராயத்தினின்றும் மாறுபடுவது இயற்கையே. இந்தப் பெரிய கட்சிக்காரரால் கடைசியில் அனுகூல முண்டாகுமென்று நான் கருதவில்லை. எப்போதும் அவரவர்கள் தம் தம் வரையில் ஜாக்கிரதையாக விருப்பது நலம்'' என்றான்.

இரவணப்பன் அவன் மனதிலிருப்பதை வெளியிழுக்கமுயன்றான். பிச்சையன் அதற்குமேல் கூறவில்லை. ஆகையால் அவன் கருத்து எப்படியாயினும் தானும் அவ்வாறே நடக்கச்சம்மதிப்பதுபோல் குறிப்பாய் அறிவித்தான். கடைசியில் பிச்சையன் ''நண்பனே! இப்போது எனக்கு அவசரமான வேலை யிருக்கிறது. போகவேண்டும். இரண்டு நாட்கள் கழித்து வந்தால் நான் உனக்கு முக்கியமான விசேஷ சமாசாரம் கூறக்கூடும்'' என்று கூறி விட்டு ''நான் கூறியது இரகசியமாக விருக்கட்டுமென்று மூக்கின்மேல் விரலை வைத்துச் சமிக்கை செய்துவிட்டுச்சென்றான். கர்னல் இரவணப்பனும் தான் யாவும் தெரிந்து கொண்டது போல் சமிக்கை செய்து விட்டுச் சென்றான்.

71-வது அத்தியாயம்

இரோட்டிக்கிடங்குச் சதியாலோசனையைப்பற்றி அரசனுக்கு அறிவிக்கப்படல்—அரசனுடைய புத்திரவாஞ்சை வெளியாதல்—பிச்சையன் இரவணப்பனுடைய சூதுகள்—ஜெயசிங்கனும் இரவணப்பனும்—சூதுக்குள் சூது—குரூரதண்டனைகளும் அதிசய சம்பவங்களும்.

மந்திரியாகிய ஸர்தார் சாந்தலிங்கம்பிள்ளை, பிச்சையன் இரண்டாம் முறை தன்னிடம் வந்து யாவும் கூறியவுடனே, அரசனிடம் சென்று இரொட்டிக்கிடங்குச் சதியாலோசனையைப் பற்றிப் பூரணமாய்க் கூறிவிட்டான்.

அரசன் யாவும் கேட்டதும் மந்திரியை நோக்கி "சரி. நான் யாவும் அறிந்துகொண்டேன். நான் இதைப் பற்றி இன்னது செய்யவேண்டுமென்று உமக்குக் கூறுமட்டும் இச்சங்கதியை யொருவருக்கும் கூறவேண்டாம்" என்று கட்டளையிட் டனுப்பிவிட்டார். அதன் பின் அரசன் நம்பகமான ஒரு ஆளை யழைத்து ஸர்தார் உலகநாயகனை யுடனே தன்னிடம் வரும்படி கூறுமாறு சொல்லி யனுப்பினர்.

அச்சமாசாரம் வரும்போது உலகநாயகன் தன் மாளிகையிலேயே யிருந்தபடியால், தன் தந்தையின் கட்டளையைக் கேட்டதே உடனே புறப்பட்டுச் சென்றான். அரசன் தன் புதல்வனைக் கண்டதும் மிக்க அன்போடும் தந்தையின் பூரண அன்போடும் அவனை யாலிங்கனம் செய்துகொண்டு தன் அருகில் அமரச்செய்து, இரொட்டிக்கிடங்கில் நடந்த சதியாலோசனையைக் கூறி இச்சங்கதி யுனக்குத் தெரியுமா என்று கேட்டான். அரசனுக்கு மனதில் ஒரு பெருந்திகில் இருந்தது. அதாவது, அந்தச் சதியாலோசனை நடந்தபோது உலகநாயகனுக்குத்தான்

186485

மின்சாரமாயவன்.

ஆரணி குப்புசாமி முதலியாரவர்களால் எழுதப்பட்டது.

இது ஓர் மிக்க அபூர்வமான கள்ளன் சரித்திரம். கதாநாயகனாகிய மின்சாரமாயவன் என்னும் கள்ளன் கல்வியும், புத்திசாமர்த்தியமும், தீரமும் உடையவன். ஆதலால் அவன்செய்கைகள் ஒவ்வொன்றும் மிக்க பிரமிப்பை யுண்டாக்கத்தக்கதா யிருக்கும். அவன் ஆபத்தில் சிக்கிக்கொள்ளும் ஒவ்வொரு சமயமும் தப்புவான் என்று ஒருவரும் கருதார்கள். இது அறிவாளிகளுக்கும் மிக்க விருப்பத்தையும், உலக அனுபவம்பெற அறிந்து கொள்ள வேண்டிய பல விஷயங்களையும் அளிக்கக்கூடியது. ஆதிமுதல் அந்தம் வரை மனதைக் கவர்ந்து கொள்ளத்தக்கது. பெண்களைக் கட்டில் வையாது ஆண்பிள்ளைகளை விடுவதுபோல் விட்டு விடுவதால் நேரிடும் விபரீதங்களை இதில் அனுபவமாய்க் காணலாம். நல்ல கடிதத்தில் சுத்தமாய்ப் பதிப்பிக்கப்பட்டது. சுமார் 350 பக்கங்களுக்குமே லுடையது.

விலை ரூபா 1—8—0.

புது ! துப்பறியும் !! நாவல் !!!

வெளியாய் விட்டது.

மஞ்சள் அறையின் மர்மம்

ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியாரவர்களால் வரையப்பட்டது.

இதுகாறும் அவரால் வரையப்பட்ட அனேகம் துப்பறியும் நாவல்களையும், இதர துப்பறியும் நாவல்களையும் வாசித்திருப்போர் இத்தகைய மிக்க ஆச்சரியமும் சாமர்த்தியமுமான துப்பறியும் நாவல் இதுகாறும் எழுதப்படவில்லை யென்று எளிதில் உணர்வார்கள். இதில் குற்றம் செய்தவனுடைய சாமர்த்தியச்செயல்களும், குற்றத்தைக் கண்டு பிடிப்பவனுடைய சாமர்த்தியச்செயல்களும் ஒன்றுக்கொன்று இணையற்றனவாகவே யிருக்கும். குற்றம் நடந்த இடத்தின் படங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. காகித விலையால் சொல்ப பிரதிகளே அச்சிடப்பட்டன. விலை ரூ. 1 8 0

தபால் கூலி பிரத்யேகம்.

விலாசம்:— ஆனந்தபோதினி ஆபீஸ்,

நெ. 6, வெங்கடேச மேஸ்திரி வீதி,

சௌகார்பேட்டை, மதராஸ்.

"ஆனந்தபோதினி"

ஓர் இனிய மாதாந்தத் தமிழ்ச் சஞ்சிகை.

இச்சஞ்சிகை 1915௵ ஜூலைமீ முதல் சென்னையில் பிரசுரிக்கப்பட்டு வருகிறது. தற்காலம் குன்றியிருக்கும் நமது தமிழ்ப் பாஷையின் அபிவிர்த்தியையும், நமது நாட்டாருடைய இலௌகிக ஆசார ஒழுக்கங்களின் சீர்திருத்தத்தையும், ஆன்மார்த்த ஞானாபிவிர்த்தியையும், பெண் கல்வியையும் நோக்கமாய்க் கொண்டே இச்சஞ்சிகை பிரசுரிக்கப்பட்டு வருகிறது. பிரதிசஞ்சிகையிலும், மேற்கண்ட விஷயங்களோடு, நமது சிறுவர், சிறுமிகளுக்கும், ஸ்திரீகளுக்கும் அவசியமான நீதிகளும், புத்திமதிகளும் காணலாம். எல்லா விஷயங்களும் உலக அனுபவமுடைய கல்வியாளரால் வரையப் படுகின்றன. இவையன்றி ம-ா-ா-ஸ்ரீ ஆரணி குப்புசாமி முதலியாரவர்களால் மிக்க நேர்த்தியான புது நாவல்களும் தொடர்ச்சியாய் எழுதப்பட்டு வருகின்றன. இப்போது இது நமது நாட்டில் பிரசுரிக்கப்படும் எல்லாத் தமிழ்ச் சஞ்சிகைகளையும் விட அதிகமான சந்தாதாரரையுடையது. இது ஜாதிமத பேதமின்றி ஒவ்வொரு மாணவனும், புருடனும், ஸ்திரீயும் அவசியம் வாசிக்கத்தக்கது. இது நமது நாட்டாரது நன்மையொன்றைமட்டும் கருதியே பிரசுரிக்கப்படுவதால், டெம்மி 8 பக்கம் அளவில், 40 பக்கம் விஷயங்களுள்ள இச்சஞ்சிகைக்குத் தபாற்கூலி யுள்பட வருட சந்தா 1 ரூபாதான் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. பினாங்கு, ஸிங்கப்பூர் முதலிய வெளிநாடுகளுக்கு ரூபா 1-4-0. மாதிரி காப்பி வேண்டுவோர் 1 அணா ஸ்டாம்பு அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியார் இயற்றிய நாவல்கள்.

	ரூ.	அ.		ரூ.	அ.
இரத்தினபுரி இரகசியம் 2-பாகமும்	... 4	0	தினகரசுந்தரி ரூபா	1	0
கற்கோட்டை	... 2	0	பத்மாஸனி	... 0	14
தேவசுந்தரி	... 1	4	வீரநாதன்	... 0	12
கனகபூஷணம் (மறுபதிப்பில்)			மஞ்சள் அறையின் மர்மம்	1	8
சுவர்ணாம்பாள்	... 0	12	பவளத்தீவு-அச்சில்		
ஆனந்தஸிங்	... 2	0	பூங்கோதை	... 0	10
மதனபூஷணம்	... 1	0	இந்திராபாய்	... 2	8
ஸ்ரீ ராமகிருஷ்ண பரம ஹம்ஸருடைய சரித்திர உபதேசங்கள்	1	12	அமராவதி 1-ம் பாகம்	2	0
			சகோதரவாஞ்சை	0	6
			ஹை ஸ்கூல் பதிப்பு	... 0	7

விலாசம்: மானேஜர், "ஆனந்தபோதினி" ஆபீஸ்,
நெ. 6, வெங்கடேச மேஸ்திரி வீதி, சௌகார்பேட், மதராஸ்.

Printed at the "Ananda Bodhini" Power Press, Madras.